470

No. M. 2210 & PROPRIETOR

வருஷ சந்தா ரூ 1-8-

வை. மு. கோதைநாயகி அம்மாள்
(MRS. V. M. PARTHASARATHY IYENGAR.)

JEGAN MOHINI

மலர் 7 ஜகன்மோகினி இதழ் 7&8

ஜகன்மோகினி ஆபீஸ்,
26, தோடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு —ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகைவெளியாகும்

ஏழாவது ஆண்டு ! ஏழாவது ஆண்டு !!

ஜகன்மோகினி.

இதன் 7-வது ஆண்டு 1929ஆம் டிசம்சர்மீ முதல் ஆரம்பம். இதில் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால் எழுதப்பட்ட, "சாருலோசனா" என்னும் அற்புதமான நாவலின் இரண்டாம்பாகமும், ஹாஸ்ய விநோதங்களும், அநுபவ நீதிகளும், காவியங்களும், இன்னும் மற்ற ருசிகரமான விஷயங்களும் வெளிவருகின்றன. இதன் வருடச் சந்தாஉள்நாடு, வெளி நாடு இரண்டிற்கும் தபாற்கூலியுள்பட ரூ. 1-8-0 தான். "சாருலோசனா" வின் முதல்பாகம் சென்ற வாண்டின் கடைசி நான்கு சஞ்சிகைகளில் வெளிவந்ததால், புதிதாகச் சேரும் சந்தா நேயர்கள் எட்டணா கூடச் சேர்த்து ரூ. 2 அனுப்பினால், அவற்றை அனுப்புகிறோம்.

சந்தா விவரம்.

(1) சந்தாத் தொகையை நமக்கு நேரில் முன்பணமாக அனுப்பியாவது, வி. பியில் பணம் கட்டியாவது அல்லது நமது கௌரவப் பிரதிநிதிகளிடத்திலும், ஏஜண்டுகளிடத்திலும் கொடுத்தாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம். பத்திரிகையை வி. பியில் அனுப்புவதால் சந்தா நேயர்களுக்கு மூன்றணா அதிக செலவுண்டாகுமாதலால் முன்பண மனுப்புவதே நலம்.

(2) இவ்வாண்டில் நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் புதிய நம்பரைக் கொடுப்பதால் இனிமேல் அவர்கள் எழுதும் கடிதங்களில் புதிய நம்பரை மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

(3) பிரதி ஆங்கில மாதமும் கடைசித் தேதியில் நமது பத்திரிகையை நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 15 தேதிக்குள் கிடைக்காவிட்டால் அது தபாலில் தவறிவிட்டதென்று தெளிந்து உடனே நமக்குத் தெரிவித்தால் வேறு சஞ்சிகையை அனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு, மூன்றணா ஸ்டாம்பு அனுப்பினால்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும்.

(4) இடம் மாறும் சந்தா நேயர்கள் தமது புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிப்பதுடன், தங்களுடைய புது விலாசத்திற்கு சஞ்சிகை சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்து கொள்ளவேண்டும். அப்படிச் செய்யாது சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

(5) நமக்கு ஏஜண்டுகள் இல்லாத விடங்களில் ஐந்து சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பவர்கள் ஒரு வருஷ சஞ்சிகையை இனமாகப் பெறுவதுடன் பரிசுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

மானேஜர்.

சாமள நாதன்

16 MAR 1931

வை. மு. கோதைநாயகி அம்மாள்
எழுதியது.

பிரசுராலயம்:
''ஜகன்மோகினி'' ஆபீஸ்,
26, தோடித்தெருவு,
திருவல்லிக்கேணி, சென்னை.

காபிரைட்]

216566.

உ

ஸ்ரீ

சாமள நாதன்

கலைமகள் துதி

கண்ணே! மணியே! கலையின் வித்தே!
கண்பார்த் தருள்வாய் கயல்விழி மானே!

வினாயகர் துதி

கரிமுகநாதா! கழன்மலர்போற்றி
விரைவுடன் காப்பாய்! விக்கினேச்வரனே!

THE REG...
16 MAR...

1—வது அதிகாரம்

அனாதைப் பக்ஷிகள்—வினோதக் குடும்பம்

"அகிலமாளும் ஆனந்த மூர்த்தியான கடவுளின் இயற்கை சிருஷ்டியின் அற்புதத்தை என்னென்பது! இந்த அருமையான காக்ஷியைக் காணுந்தோறும் மனம் இளகி யுருகி அப்பரம்பொருளிடம் ஐக்யமாகிவிடுகிறது. எத்தனைவித நறுமலர்ச் செடிகள்! எண்ணிக்கையிட்டுக் கூறும் திறமையேனும் உண்டா! பார்க்கப் பரமானந்தமாயும் மோப்பப் பரிமளம் வீசியும் மனதிற்கு ரம்மியமாயும் இருக்கும் இத்தனை குண நலங்களையும் அக்கடவுளல்லவா ஒருங்கே ஓரே இடத்தில்

எந்தெந்தக் காலத்தில் எந்த விடத்தில் இருந்தபோதிலும் நமது சொந்த வாசஸ்தானத்தின் நினைவு மாறுவதில்லை. அந்த வாசஸ்தானத்தின் மகிமை அதை விட்டுப் பிரிந்திருக்குங் காலையில்தான் ப்ரகாசமாய்த் தோன்றுகின்றது. நிழலின் அருமை தோன்றுவது! வெயிலில்! சென்ற பிறகு தானே.

கூட்டிவைத்திருக்கிறார்! அவருடைய மாயா விலாசத்தின் மகிமையில் இதுவும் ஒன்று. அப்பா! குழந்தாய்! இந்த இயற்கை விநோதங்களைப் பார்க்கின்றாயே! உனக்கென்ன தோன்றுகின்றது; கூறு. கேட்போம்." என்று சுமார் 15 வயதுடைய ஒரு மாது 10 அல்லது 11-வயது மதிக்கக்கூடிய ஒரு சிறுவனை நோக்கி மிகவும் வாஞ்சையோடு கேட்டாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட இளவல், அம்மாதின் கரத்தைப் பிடித்துக்கொண்டு "அக்கா! நான் இங்கு வந்ததுமுதல் இவ்வியற்கை யழகைக் கண்டு களிக்கவில்லை. அதோ! அந்த மூலையில் நடக்கும் சம்பவத்தின்மேலேயே எனது கண் சென்று லயித்துவிட்டதால் அதையே நான் கவனித்துக்கொண்டு வருகிறேன். அந்தக் குழந்தையின் பரிதாபகரமான முகத்தைப் பார்த்தாயா! அக்கா! அந்தக் குழந்தை ஏன் புலம்புகின்றது? அதை ஏன் அந்தக் கிழவன் அடிக்கின்றான்? ஐயோ, பாவம்! அதைப் பார்க்க என் மனதிற்கு மிகவும் பரிதாபகரமாக விருக்கிறது. அந்த சம்பவத்தில் சென்ற என் விழிகள் இந்தக் காக்ஷியில் திரும்பவில்லை" என்று மிக சாந்தமாயும் ஒருவிதமான இரக்கத்துடனும் கூறினன்.

சிறுவன் வார்த்தையைக் கேட்ட அந்த மாது, தனது விழிகளை அந்தப்பக்கத்தில் செலுத்தி நோக்கினாள். அவ்வாறு நோக்கிய உடனே அந்தம்மாளின் இரு விழிகளும் சிறு குளங்கள் போலாய் விட்டன. "ஆகா! இதென்ன கோர சம்பவம்! அக்கிழவன் ஏன் குழந்தையை இவ்விதம் உதைக்கின்றான்? ஐயோ, பாவம்! உதையின் வலி தாங்காமல் அது அலறுகின்றதே! அப்பா! தம்பி! உன் மனதில் இத்தகைய இரக்கம் இப்போது முதல் இருப்பது பற்றி மிகவும் சந்தோஷ மடைகின்றேன். அருமைக் கண்மணீ! உலகத்தில் நாம் எப்போது மானிட ஜன்ம மெடுத்தோமோ அப்போதே நமது மனதில் பொறுமை, இரக்கம், பணிவு, உழைப்பு, சகிப்பு, நற்

ஊரை விட்டு வெளிப் போந்துள்ள சமயத்தில் நமது சொந்த ஊர் நிகழ்ச்சி ஒரு சக்கரம் போன்று மனத்தில் சுற்றிக்கொண்டே வருகிறது. அச் சமயத்தில் அது ஓர் ஆநந்தமான தோற்றத்தை அளிக்கின்றது.

குணம், முதலிய யாவும் கூடவே பிறக்கவேண்டும். நாம் எடுத்த ஜன்மத்தின் பயன் நமக்கு மேற்குறித்த யாவும் இருந்தால்தான் கிடைக்கும்.

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதில்லார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு."

—குறள்.

நாம் கருணையுடன் கூடி நமது வாழ்நாளை நடத்தினால்தான் கடவுளின் கருணைமாரி நம்மீது பாயும். இல்லையேல் நாம் கடவுளால் நிராகரிக்கப்படுவோம். கடவுளின் கருணைக்கு நாம் பாத்திரமாக வேணுமாயின் மேற்குறித்த அன்பைக் கைகொள்ளவேண்டும்" என்று அம்மாது கூறி முடிக்குமுன், அச்சிறுவன் குறுக்கிட்டுப் பேசத்தொடங்கி "அக்கா! நீ சொல்கிறபடி; கடவுளின் அருளுக்கு நாம் பாத்திரமாகவேண்டுமாயின் அக்கடவுளையே வணங்கித் தவம் செய்தாலல்லவோ நமக்கு அவர் அருள் கிடைக்கும். அதற்கு மேற்குறித்த குணங்களும் ஜீவராசிகளிடத்தில் அன்பும் எதற்கு?" என்று குழந்தைத் தன்மையாகக் கொஞ்சிக் கேட்டான்.

அந்த மாது:—என் கண்ணே! உனக்கு உண்டாகும் சந்தேகங்களை யெல்லாம் இப்படியே கேள்! எனக்குத் தெரிந்தவரையில் அவற்றிற்குச் சமாதானம் கூறுகிறேன். உலகத்தில் மிகச் சிறந்தது தருமம். தருமத்தைச் செய்வதற்கு முதலில் கருணையும் இரக்க குணமும் வேண்டும். அவ்விரக்கம் வளரப் பொறுமை நிரம்பவும் அவசியம். எப்படியெனில் உதாரணமாக ஒன்று கூறுகிறேன் கேள். ஒரு ஏழை மனிதன்—அதிலும் திக்கற்ற அனாதை! வியாதியால் பீடிக்கப்பட்டவன். அதோடு ஏதோ ஒரு அங்கமும் ஹீனமாக விருப்பவன். அவன் மிகவும் பரிதாபகரமாக வீதியில் கிடந்து ஆகாரமின்றிப் புரளுவதை நாம் காண்கிறோம் என்று வைத்துக்

பிரிந்த சிநேகிதரையும் பந்து வர்க்கத்தினரில் வேண்டியவர்களான ஆப்தர்களையும் நாம் ஓர் அதிசயத்தைக் காணும்போது நம்மை யறியாமலேயே மனம் தாவி நினைக்கின்றது. அவர்களும் கூடவிருந்து கண்டு களிக்கவில்லையே என்ற ஏக்கமும் உண்டாகின்றது.

கொள்வோமே! அப்போது சாதாரணமாக என்ன எண்ணம் நம் மனத்தில் உண்டாகும்? "சீச்சீ! இவன் தேக முற்றும் சிரங்கும் சொரியும் பிடித்துக்கிடக்கிறான்." என்று ஒரு அருவருப்பும் வெறுப்பும் தோன்றும். அவ்வாறு முதலில் தோன்றியதும் அவனிடம் இரக்கமுமற்று நேரே உள்ளே போய்விடவேண்டியே அந்த மனம் தூண்டும். அவ்வாறு நாம் வெறுப்புற்று, இரக்க மற்று உள்ளே சென்றுவிட்டால் நாம் அந்த அனாதையைக் கண்ணாற் கண்டும் உதவி புரியாது சென்றுவிட்ட பெரும் பாவம் நம்மைத் தொடர்வதோடு, எல்லாம் வல்ல இறைவன் இவைகளைப் பார்த்துக்கொண்டே இருந்து நமக்குத் தக்க தண்டனை விதிப்பார். ஆகையால் நாம் முதலில் அத்தகைய மனிதனைப் பார்த்த உடனே 'ஐயோ பாவம்! கையு மில்லை; பசியின் கொடுமையினால் வருந்து கிறான்' என்ற ஒருவித இரக்கமும், அவனைக் கண்டதும் வெறுப்புக் கொள்ளாத பொறுமையும் முதலில் நமக்கு உண்டாகவேண்டும். அவ்வாறு இரங்கி அந்த முடவனுக்கு நாம் ஆகாரமும் கொடுத்து அவனிடம் அனுதாபங் காட்டுவோமேயானால் அதனால் கடவுள் நம்மீது கருணை காட்டுவார். கடவுளுக்கு உலகத்திலுள்ள மக்கள் எல்லோரும் சமமானவர்களல்லவா! இதற்கோர் உதாரணம் பார். ஒரு குடும்பத்திலுள்ள தலைவனுக்குப் பத்துக் குழந்தைகள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அந்தக் குழந்தைகளில் ஒன்றை ஆதரித்து ஒன்றை அனாதரித்துப் பிறர் அலக்ஷியம் செய் வதைப் பெற்றோர்கள் கண்டால் சகிப்பார்களா! அவ்வாறு செய்ப வர்களை நிந்திப்பதும் த்வேஷிப்பதுமாகத்தானே இருக்கிறார்கள்! இன்னும் சிலர் அக்காரணத்தை முன்னிட்டு அப்படி ஓர வஞ்சனை யாக நடப்பவர்களுக்குக் கெடுதலும் செய்யத் துணிகின்றார்கள். இதுதான் பொதுவாக மனித சுபாவமும் மனித சக்திக்கு உட்பட் டதுமாகும். எல்லாம் வல்ல இறைவனோ அப்படிப்பட்டவரில்லை. இவ் வகண்டாகாரமான உலகத்தையே ஆக்கியவனும் அழிப்பவ

எந்த இடத்திற்குச் சென்றாலும் மனத்திற்கு அமைதியையும் ஆநந்தத்தையும் விளைவிக்கக் கூடிய உண்மைத் தோழர்களில்லாவிடில் அந்த ஆநந்தம் அவ்வளவாக பரிமளிப்பதில்லை. நாம் க்ண்டவற்றைப் பிறரிடம் கூறி மகிழ்வதே பேராநந்தம்.

னும் அவனே. ஆகையால் அவனால் ஆட்டுவிக்கப்படும் பொம்மைகளாகிய மனிதர்களின் செய்கைக் கேற்றவாறு அவன் தண்டியாது விடவே மாட்டான். அந்தக் கடவுள்தான் உலகத்திலுள்ள சகலமானவர்களுக்கும் பிதாவானவன். அவனது சிருஷ்டியில் பிறந்துள்ள யாவரும் சமமானவ ராவோம். ஆகையினால் கருணைக் குணம் மிகவும் அவசியமானது.

தம்பி:—அக்கா! நீ சொல்வதெல்லாம் உண்மைதான்! நாம் செய்யும் காரியங்களோ நமது வீட்டில் நடக்கின்றன. கடவுளோ! எங்கேயோ வைகுண்டத்திலிருக்கிறாராம். கோயில்களில் நாம் விளையாடும் பொம்மை போன்ற சாதாரண விக்கிரகங்களே இருக்கின்றன. நாமிருக்கு மிடமோ பூலோகம். பூலோகத்தில் நடக்கும் விஷயங்கள் அந்த வைகுண்டத்திலிருக்கும் கடவுளுக்கு எப்படி அக்கா தெரியும்?

அக்கா:—கண்ணே கோபிநாதா! கடவுளை உலகிலுள்ள பாமர மக்களும் அறிஞர்களும் நன்றாகத் தெரிந்துகொள்ளும் பொருட்டு அவரும் நம்மைப்போன்ற கை கால் முதலிய அவயவங்கள் உள்ளவர் என்றும், மக்கள் மனைவி முதலியவர்களுடன் வாழுபவர் என்றும் வைகுண்ட மென்கிற மேலுலகத்தில் இருப்பவர் என்றும் விவரித்துச் சொல்லி இருக்கின்றார்களே யன்றி, உண்மையில் கடவுள் ஒரே இடத்தில் இருக்கக் கூடியவர் இல்லை. அவர் எங்கும் வ்யாபித்து நிறைந்து இருக்கும் ஜோதி ஸ்வரூபன். வெளிச்சமானது எங்கும் எவ்வாறு பரவி இருக்கின்றதோ அதே போலக் கடவுளும் இருக்கிறார். கடவுளின் உண்மை நிலையைக் கேவலம் லோக வியாபாரத்தில் சிக்கி அக்ஞானக் கடலில் ஆழ்ந்துள்ள சாதாரணமான மனிதர்களால் அறியவே இயலாது; முற்றும் துறந்த முனிபுங்கவர்களே அக் கல்யாணகுண பரம மூர்த்தியின் விச்வரூப சேவையைக் கண்டு களிக்கக் கூடும். அத்தகைய

நவநவமானவற்றைக் காணும்போது மனத்திற்குப் பலவிதமான புதிய உணர்ச்சிகளே தோன்றுகின்றன. அவைகளில் மறந்துவிடுவன சில. நினைவில் இருப்பன பல. இவ்வகைகளே பெரும்பான்மையான அனுபவமாக இருக்கின்றன.

கடவுளைப் பாமர மக்கள் அடைய விரும்பினால் நான் முன் கூறிய படி சகலமான சத்வ குணங்களையும் கைக்கொண்டு ஒழுகினால், வேரில் விடப்படும் தண்ணீர் கிளைகளுக்கும் இலைகளுக்கும் சென்று பரவி, பழம் பழுத்துப் பலன் தருவதுபோல் ஒவ்வொருவருடைய இதயத்திலும் வீற்றிருக்கும் கடவுளுக்கே அந்த நற்கருமங்கள் அனைத்தும் அர்ப்பணமாகி மரம் கனி யுதவுவது போலக் கடவுள் கருணையால் அருள் என்னும் அருமையான கனியை உதவி நம்மைக் காப்பாற்றுவார். கடவுளுடைய சாண் வயிற்றிற்குள் தான் இவ் வகண்டாகாரமான உலகமே அடங்கி இருக்கின்றது. நான் முன்பொருநாள் உனக்கு ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் கதையைச் சொல்லியபோது யசோதா பிராட்டியாருக்குக் கிருஷ்ணன் வாயைத் திறந்து காட்டுகையில் இவ்வுலகத்தையே அத்திருவாயில் கண்டு யசோதை ப்ரமித்தாளென்று நான் சொல்லியது உனக்கு நினைவிருக்கிறதா! அதே போல அந்தக் கடவுளின் வயிற்றிற்குள்ளேயே இவ் வுலக மிருக்கிறது. அதற்குள் நாமிருக்கிறோம். தாயின் கருப்பத்தில் சிசு இருப்பது போல லோகபிதாவாகிய எம்பெருமானின் குட்சியில் நாமிருக்கிறோம். அந்தக் கடவுளின் மாயா விலாசத்தின் மகிமையோ அளவற்றதாகும். அத்தகைய சர்வேச்வரன் எங்கும் நிறைந்து விளங்குகின்றான். அவன் இல்லாத இடம் என்ற ஓர் தனித்த இடம் இருந்தால் அல்லவா நீ சொல்வது போலக் கடவுள் அறியக்கூடாமல் இருக்க முடியும். இப்பரந்த உலகத்தில் எங்குச் சுற்றிப் பார்த்தாலும் ஆகாயம் வியாபித்துக் கொண்டிருக்கின்றது. பூமியும் அப்படியே இருக்கின்றது. கடலும் கரைகாணாத விதமாக இருக்கிறது. சர்வேச்வரன் இவைகளை ஏன் படைத்தாரெனில் 'இவைகளுக்கு எவ்விதம் எல்லையும் முடிவும் இல்லையோ அதே போல, நானும் ஆதி மத்யாந்தரகிதன்; என் சொரூபத்தைக் கண்டுபிடிக்க வியலாது. காண்பதற்கு உருவம் போலத் தோன்றி

முகமறியாத ஊருக்குப் போகு முன்னர் ஒருவிதமான உணர்ச்சியும் பயமும் கூடவே இருந்து பாதிக்கின்றன. சென்ற பிறகு அந்த தனித்த அனுபவம் ஒரு தினுசு. அதை அனுபவித்தால்தான் அதன் உண்மை விளங்கும்.

ஞலும் அவ் வுருவத்தின் உண்மையை உய்த்துணர வியலாது' என்பதை ஜனங்களுக்கு அறிவிக்கும் பொருட்டாக ஒவ்வொன்றையும் ஒவ்வொரு கருத்துடனேயே சிருஷ்டித்திருக்கிறுன். நாம் ஒரு பதார்த்தத்தைத் தின்கிறேம். வாயில் போட்டதும் அது நேராக நமது வயிற்றிற்குள் செல்கின்றதே யன்றி வேறிடத்திற்குச் செலகின்றதா! நாம் சாப்பிடும் பண்டமானது முதலில் வயிற்றிற்குள் சென்ற பின்னரே அதன் குண குணங்களை நமக்குக் காட்டுகின்றது. அதாவது நாம் சாப்பிடும் பண்டங்களுக்கு ஏற்றவாறு நல்ல பலத்தையும், வியாதி நிவர்த்தியையும், சுறுசுறுப்பையும் சாந்த குணத்தையும், அந்தந்தப் பண்டத்திற்கு ஏற்ப அளிக்கின்றது. அஜீரணமான பண்டங்களை யுட்கொள்வோமாஞல் அதஞல் வயிற்று வலியும் உபாதையும் உண்டாகின்றன. உஷ்ணமான பண்டத்தைத் தின்றுல் அதற்குண்டான குணத்தை எடுத்துக் காட்டுகின்றது. ஆகையால் எதைத் தின்றுலும் முதலில் அது வயிற்றிற்குட் சென்ற பிறகல்லவா பலன் கிடைக்கின்றது. அதே போல நாம் நற்செயலோ தீச்செயலோ எது செய்த போதிலும், நமது ஹ்ருதயத்திலேயே வீற்றிருக்கும் கடவுளுக்குத் தெரியாமல் போகாது. அவர் அறியாமல் நம்மால் எதுவும் செய்ய முடியாது. நாம் எந்தக் காரியத்தைச் செய்ய யத்தனித்தாலும் முதலில் மனதில் எண்ணம் உதித்த பிறகே அதைச் செய்கிறேம். அந்த மனதில் நிலைத்து வீற்றிருக்கும் கடவுளுக்கு அது தெரியாமலிருக்க முடியுமா? அவர் அறிந்துதான் யாவும் நடக்கின்றன. அவரவர் கருமத்திற்கு ஏற்றவாறு அவர் தக்க பலனை அளிக்கின்றுர். இராமர் இருக்கு மிடம் அயோத்தி என்பது போலக் கடவுள் வீற்றிருக்கும் சகலமான இடங்களும் வைகுண்டந்தான். வைகுண்டமென்பது தனித்ததே யில்லை. கடவுளிருக்கும் இடத்தை யெல்லாம் வைகுண்டமாகவே கொள்ளவேண்டும். நம்முடைய சரீரத்தில் எங்கு அடி பட்டாலும் நமக்கு வலியுண்டாகவில்லையா? அதுபோலக் கடவுளின்

புதிய ஊரில் புதிய மனிதருடன் பழக்கம் செய்கையில் மனம் பல விதமான யோசனையினுல் குழம்புகின்றது. அந்த மனிதர்களின் பழக்கம் நமது மனதிற்கு ஒற்றதாகிவிட்ட பின்னரோ அவர்களை என்றும் மறக்க முடியாத ஓர் பற்று ஏற்பட்டுவிடுகிறது.

வயிற்றிற்குள்ளேயே நாம் இருந்து செய்யும் எந்தக் காரியத்தையும் அவரறியாமலிருக்க முடியாது.

கோபிநாதன்:—அக்கா! எனது பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் நேற்று எனக்கு ஒரு கதை சொன்னார். அந்தக் கதையிலும் 'கடவுள் எங்கும் வியாபித்தவர்' என்றுதான் அவரும் கூறினர். அவர் உரைத்தது பிரகலாதனுடைய சரித்திரம். அப்பாலனுடைய பக்தியை மெச்சிக் கடவுள் அவனுக்குப் பிரத்யக்ஷமாகி, அருள்செய்து, "கடவுளே கிடையாது; நான்தான் தெய்வம்" என்று சாதித்து வந்த அவனுடைய பிதாவுக்குத் தனது உண்மையான சொரூபத்தை காட்டும்பொருட்டே நரசிம்மாவதாரம் செய்தார்' என்று உபாத்தியாயர் கூறினர். அவர் வேடிக்கையாகப் பிள்ளைகளுக்கு நற்புத்தி பிறக்கும் பொருட்டு இத்தகைய கதையைச் சொன்னாரோ என்னவோ என்று நான் எண்ணித்தான் உன்னையும் இப்போது கேட்டேன். கடவுள் எங்கும் இருப்பவர் என்பதை நன்றாகத் தெரிந்துகொண்டேன். அதோ அழுகின்றதே அந்த குழந்தையின் இருதயத்திலும் கடவுள் இருக்கின்றார் அல்லவா! அந்தக் கடவுள் அக்குழந்தையின் அழுகையை ஏன் அக்கா சமாதானம் செய்யவில்லை?

அக்கா:—செல்வா! கடவுள் எல்லோருடைய ஹ்ருதயத்திலும் வீற்றிருந்தபோதிலும் அவரவருடைய கர்மவினைகளுக்கு ஏற்றவாறு நடத்திவைப்பதுதான் அவருடைய தொழில். முன்னர் செய்துவிட்ட வினையை அனுபவித்துத்தான் தீரவேண்டும். அதைத்தான் ஜனங்கள் 'இது என் பிராரப்தம்' என்று சொல்லுகிறார்கள். அக்குழந்தையின் பூர்வ ஜன்மத்தின் வினைப்படி அது இப்போது அழவேண்டியகாலம்; அழுகின்றது. பிறகு அதை ஆதரிக்கும் காலத்தில் அக்கடவுளே அதற்கும் வழிசெய்வார். அடிக்கிற தாயே குழந்தையை அணைத்துக் கொஞ்சுகிறாளல்லவா?

புதிய ஊரில் புதிய மனிதரை அண்டி நாம் தங்குவதற்குச் சென்றவிடத்தில் அந்த மனிதர்கள் நம்மை அலக்ஷ்யமாயும், கேவலமாயும் மதித்து தாராதாம் தெரியாமல் நடந்துவிடுவதோடு துச்சமாகப் பேசியும்விட்டார்களேயானால் அத்தகைய புண்ணியாத்துமாக்களை இறந்தாலும் மறக்க முடிகிறதில்லை,

கோபிநாதன்:—ஆம் அக்கா! எல்லோருடைய ஹ்ருதயத்தி லுந்தான் கடவுள் இருக்கின்றாரே! அவ்வாறிருக்க, மனிதர்கள் இறந்துவிடுகிறார்களே ஏன்? அங்ஙனம் மனிதர் இறக்கும்போது அவர்கள் மனதிலிருக்கும் கடவுளும் கூடவே இறந்துவிடுவாரா? கடவுளே உள்ளத்தில் இருக்கும்போது மனிதர்கள் ஏன் இறக்க வேண்டும்?

அக்கா:—கண்ணே! நீயோ சிறு பாலகன்! நானோ ஒன்றும் தெரியாத—படியாத—பேதை. நீ கேட்கும் விஷயங்களோ அபார மானவையா யிருக்கின்றன. ஏதோ எனக்குத் தோன்றியதைத் தெரிந்தமட்டில் உரைக்கின்றேன். மனிதர்களின் இறப்பும் பிறப் பும் கடவுளின் செய்கைகள். மனிதர்கள் இறப்பதனால் அவர்க ளின் தேகம் மட்டும் அழிந்துவிடுகின்றதேயன்றி, ஆத்மா அழிவ தில்லை. அவ்வாத்மா அழிவற்றது, கடவுள் ஆத்ம ஸ்வரூபியாகவே நம்முள் இருக்கிறார். நாம் இப் பூலோகத்தில் வந்த காரியம் முடிந்து விட்டால் சரீரம் அழிந்து விடுகின்றது. ஒரு நாடகத்தில் நடிக்கும் வேஷக்காரன் நாடகம் முடிந்ததும் தனது வேஷத்தை மட்டும் கலைத்து விடுகிறானே யன்றி, அவன் சரீரம் எவ்வித மாறுதலையும் அடைகிறதில்லை யல்லவா? நாம் இப் பூமியாகிய நாடக மேடையில் நடிக்கவே பிறக்கிறோம். நமது நஸ்வர வாழ்வாகிய நாடகம் முடிந்ததும் இவ்வுடலாகிய வேஷத்தைக் களைந்து விட்டு ஆத்மா வென்னும் அழியாத தேகத்தோடு அகன்று போகிறோம். ஓர் பாத்திர மிருக்கின்றது. அது மிகவும் அழுக்குப் பிடித்து விட்டால் நன்றாகத் துலக்கி, அதன் அழுக்கை மட்டும் போக்கி விடுகிறோம். பாத்திரம் பளபளப்பாக அப்படியே இருக்கிறது. அதேபோல இந்த ஜன்மத்திற்குள்ள கர்மானுசாரத்திற்குத் தகுந்தபடி சுக துக்கங்களை அநுபவித்துத் தீர்ந்தவுடன் பந்தப் பட்ட ஆத்மா விடுதலை யடைந்து அழியாமல் சென்று விடுகின்றது;

அவர்கள் வீட்டிற்கு நாம் சென்ற நிமிடம் முதலாக அங்கு நடந்த சகலமான சம்பவங்களும் நமது மனத்தில் பசுமரத்தாணிபோன்று பதிந்துவிடு கின்றன. ஏன் இவ்வீட்டிற்கு வந்தோம் என்று மனம் மிகவும் பரிதபித்துத் துடித்து ஏங்குகின்றது.

இவ் வசத்த தேகமே அழிகிறது. அவ்வளவுதான். இவை யாவும் கடவுளின் செயல்கள். ஒரு மனிதன் உயிரோடிருக்கும் பொழுது எவ்வளவு மேன்மையாயும் சிறப்பாயு மிருக்கிறான்? அவன் உடம்பிலிருந்த சத்தாகிய ஆத்மா சென்றதும் சத்துப் போயிற்று; செத்துப் போயிற்று' என்று அந்த உடலை உடனே அப்புறப் படுத்தித் தகனம் செய்து விடுகிறார்கள் பார்! ஆத்மா இருக்கையில் அதில் கடவுளின் தோற்ற மிருப்பதால் தடபுடலான சிறப்புகளெல்லாம் நடக்கின்றன. அக் கடவுளின் தன்மையற்றுச் சவமாகிவிட்டால் ஒன்று;மில்லை. இதுதான் இரகசியம்.

கோபிநாதன்:—அக்கா! நீ அன்றொரு நாள் ராம நாமம் மிட்டாய் என்று பாடினாயே! அதுபோல எப்பொழுதும் கடவுளின் விஷயமாகவே பேசிக்கொண்டிருந்தால் எனக்கு மிகவும் ருசிகரமாயும் குதூகலமாகவும் இருக்கிறது. அக்கா! எனக்குத் தினம் சாதம் போடும் போதும் தூங்குவதற்கு முன்னரும் இத்தகைய கதைகளைச் சொல்லு. நான் கவனமாகக் கேட்டுக்கொண்டே இருக்கிறேன். அக்கா! நீ இங்கேயே உட்கார்ந்திரு. நான் அந்த இடத்திற்கு ஒரே ஓட்டமாய் ஓடி என்ன நடக்கிறது என்று பார்த்து விட்டு ஓடி வந்து விடுகிறேன்—என்று கூறிக்கொண்டே திடீரென்று ஓட்டம் பிடித்தான். அதற்குள் அந்த மாது "அப்பா! அங்கு போகவேண்டாம், போகவேண்டாம். நீ எங்கேனும் இடந் தவறி விட்டால், நான் உன்னை எங்குத் தேடிச் செல்வது?" என்று கூவிக் கொண்டே யிருக்கையில், பையன் 'இதோ வந்துவிட்டேன்' என்று சொல்லிக்கொண்டே ஓட்டமாக ஓடிவிட்டான். அந்த மாதும் பின் தொடர்ந்து சென்றாள். அங்கு அருகில் ஓர் மரத்தைச் சுற்றிலும் ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்றில் ஒருவிதமான மனவேதனையுடன் கண்களில் நீர் ததும்ப உட்கார்ந்துவிட்டாள்.

அங்குக் கும்பலிருந்த விடத்தை நோக்கியோடிய கோபி

அதே மனிதர்கள் நம்மோடு கூடவே வந்துள்ள மற்றொரு பணக்கார சீமானையும் சீமாட்டியையும் தடபுடலாக உபசரித்து நடத்தும் விமரிசையையும், நம்மைச் செய்த அவமரியாதையையும் எண்ணிடில் அந்தோ! அங்கம் அனலாக எரிகின்றது. இதுவும் ஒருகாலம் என்று மனம் தவிக்கின்றது.

நாதன், அவ்விடத்தில் நின்று அங்கு நிகழுவதைக் கவனித்துக் கொண்டிருந்தான். அங்கிருந்த ஜனங்கள் பேசிய பாஷை புதுவித மாக இருந்தமையால் கோபிநாதனுக்கு அவர்கள் பேசிக்கொண் டிருந்ததில் ஒரு சிறிதும் விளங்கவில்லை. எனினும், அங்கு நடந்த சம்பவங்களை யெல்லாம் கவனமாகப் பார்த்துக்கொண்டே இருந் தான். இவன் சென்ற ஐந்து நிமிடத்திற்குள் அங்கிருந்த எல்லோ ரும் கலைந்துபோய்விட்டார்கள். அவர்கள் சென்ற திசையையே பார்த்துக்கொண்டிருந்த கோபிநாதனின் எதிரில் ஒரு யௌவன புருடன் மிகவும் ஆடம்பரமாக உடை தரித்துக்கொண்டு உல்லாச மாக நடந்துவந்து, கோபிநாதன் தோளின்மீது தனது கரத்தைப் போட்டுக்கொண்டு "என்ன கோபிநாதா! சௌக்யமா! என்னை ஞாபக மிருக்கிறதா உனக்கு! நான் யார் சொல் பார்க்கலாம்" என்று புன்னகை செய்து கேட்டான்.

கோபிநாதன் அவரை உற்றுப் பார்த்துச் சிறிது யோசித் தான், வந்திருப்பவர் இன்னார் என்று அவனுக்கு வியக்தமாகத் தெரியவில்லை யாதலால் சற்றுத் தயங்கி, பின்பு பேசத் தொடங்கி, "தங்களை எப்போதோ பார்த்ததாக மட்டும் நினைவுக்கு வருகிறது; ஆனால் தாங்கள் இன்னார் என்று கூறத்தெரியவில்லை, நீங்கள் யார்?" என்றான்.

விமலநாதன்:—கோபிநாதா! நீ என்னைப் பார்த்து வெகு நாளாகின்றபடியால் உனக்கு மறந்திருப்பது சகஜந்தான். உன் னுடைய தமக்கையின் விவாக காலத்தில் நீ என்னைக் கண்டது இப்போது நினைவிற்கு வருகிறதா! யோசித்துக் கூறு பார்க்கலாம்.

கோபிநாதன்:—ஆம். சரி சரி, இப்போது நினைவிற்கு வரு கிறது. விவாகமான மறுநாளல்லவா நீங்கள் வந்தீர்கள். உங்கள் பெயர் அமலநாத மாமாவல்லவா!

அத்தகைய நிலைமையில் நாம் இருக்கையில் இவ்விதமான அனு பவங்களை நேரில் நாமே கண்டனுபவிக்கும் பொருட்டாகக் கடவுள் நம்மை இத்தகைய வீட்டிற்கு அனுப்பினார் என்கிற ஓர் ஆறுதலும் கூடவே தோன்றுகின்றது.

விமலநாதன்:—ஆம் ஆம். விவாகமான மறுநாள்தான் நான் வந்தேன். நீ நன்ருக ஞாபகம் வைத்துக்கொண்டிருக்கிருயே, பேஷ்! அந்த சமயம் வந்துவிட்டுச் சென்ற நான் இப்போதுதான் இந்தப் பக்கம் திரும்பி யிருக்கிறேன். உம்....அதற்கப்புறம் எத்தனை அநியாயங்களெல்லாம் நடந்துவிட்டன; என் மன வெறுப்பினுலும் துக்கத்தினுலுமே நான் அந்தத் துக்கங்களுக்கு விசாரிக்க வரவில்லை. ஏதோ இப்போது இந்தப் பக்கம் வந்தேன். உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று தோன்றியதால் இந்த ஊருக்கு வந்தேன். உன் அக்கா சௌக்கியமா? உடம்பு ஒன்று மில்லாமலிருக்கிருளா! இப்போது இளைத்துவிட்டாளா! அல்லது முன் போலவே இருக்கின்ருளா?

கோபிநாதன்:—இப்போது சில காலமாக அக்காவுக்கு உடம்பே சரியில்லை. ஏன், அவள் புருஷன் இறந்துவிட்டபிறகே அவளுக்கு உடம்பு துரும்பாக இளைக்க ஆரம்பித்துவிட்டது. அதோடு எங்கள் தாய் தந்தையர்களும் உயிர் நீத்த பிறகு அவளுடைய உயிர்தான் தேகக்கூட்டில் ஊசலாடுகின்றது. திடீர் திடீர் என்று அடிக்கடி மயக்கம் வந்து விழுந்து விடுகிறுள். வீட்டில் எங்களிருவரைத் தவிர வேறு எவரும் உதவிக்கு இல்லாமையால் அவள் மயக்கமாக விழுந்துவிடும் சமயத்தில் எனக்கு ஒன்றுமே தோன்ருமல், அவளருகிலேயே உட்கார்ந்து புலம்ப ஆரம்பித்து விடுகிறேன். பிறகு அக்காவுக்கு மயக்கம் தெளிந்ததும் அவள் என்னைப் பார்த்துப் பரிதாபப்பட்டுப் புலம்புகிருள். எந்த நேரமும் எங்களுக்குப் புலம்புவதைத் தவிர வேறு கதி இல்லையாதலால், சிறிது நேரமாகிலும் சந்தோஷமாக இருக்க வேண்டி என்னை அக்கா இங்கு அழைத்து வந்தாள். இந்தத் தோட்டத்தைச் சுற்றிக்கொண்டு வருகையில் இங்கு ஏதோ கூட்ட

மனத்தில் எவ்வளவு பொறுமை இருந்த போதிலும் பிறரிடத்தில் சுடுச் சொல் கேட்பதற்கும், அலக்ஷ்யமாக நடத்துவதைச் சகிப்பதற்கும் போதுமான பக்குவம் வருவது மிகவும் துர்லபமாக இருக்கின்றது. மனிதப் பிறவியில் உள்ளவாறு பொறுக்கமாட்டாத சக்தியே தலைதூக்கிக் காட்டத் தொடங்கிவிடுகின்றது.

மாக விருந்தது. என்ன கஷ்ட மென்று பார்க்க நான் இங்கு வந்தேன்.

விமலநாதன்:—உம்....பார் யார் தலைவிதி எவ்வித மிருக்கின்றதோ அவ்விதந் தான் நடக்கும். நீயோ சிறு பாலகன். உன் தமக்கையும் அறியாப் பேதை. உங்கள் தலைவிதியை எண்ணினால் எனக்கு மிகுந்த துக்க முண்டாகின்றது. ஈச்வராக்ஞை இவ்விதம் போலும். பிறருடைய கஷ்டத்தை நிவர்த்திக்க எந்த மனிதரால் தான் ஆகும். கேவலம் உலகானுபவமே யில்லாத உங்களிருவருக்கும் உற்ற துன்பத்தை, அக் கடவுளல்லவா நிவர்த்திக்க வேண்டும். கட்டிய கணவன் ஏன் இறக்கவேண்டும். அவன் தான் போனானென்றால் உங்கள் தாய் தந்தை இருவருமா இவ்விதம் உங்களைச் சந்தியில் விடுத்துச் சாகவேண்டும்? அடாடா! என்ன துக்கம்; என்ன கஷ்டம்! இதைக் காண்பதற்கே—கேட்பதற்கே—எனக்குத் தாங்கவில்லையே! நீங்கள் எவ்விதம் தான் சகிக்கின்றீர்களோ! உம். நீ சிறுவன். உன்னிடத்தில் நான் பேசுவதால் உங்கள் துக்கத்தை முன்னிலு மதிகமாகக் கிண்டி விடுவது போலாகும். ஆகையினால் இவ்விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்கும் என் மனம் சகிக்கவில்லை. உன்னை உன் அக்கா அழைத்துக்கொண்டு வந்தாளென்றாயே. அவள் எங்கே யப்பா இருக்கிறாள்?

கோபிநாதன்:—உம்; மாமா! சதா வருத்தமே குடிகொண்டுள்ள எங்களுக்குப் புதிய வருத்தமும் உண்டா! நான் பள்ளிக்கூடம் சென்றிருக்கும் நேரத்தில் என் அக்கா சதா அழுதுகொண்டே இருக்கிறாளாம். அதைக் கண்டு சகியாத அவளுடைய சிநேகிதைகள் அவளைப் பெண் பாடசாலையில் சேர்த்திருக்கிறார்கள்.

அயலூரில் அயலார் வீட்டில் நாம் சென்றிருக்கையில் அங்கு முன் தெரிவித்தது போன்ற சீமான்களும் வந்திருக்கையில் வீட்டுக்கார எஜமானர்கள் "அடேய்; எங்களுக்கும் (சீமாட்டியைச் சுட்டி) அதோ அவர்களுக்கும் படுக்கையை மேல் மாடியில் கொண்டுபோய்ப் போடு என்று சேவகனை ஆக்ஞாபித்துப் பிறகு நம்மை நோக்கி" "நீங்கள் எங்கே படுத்துக் கொள்ளப் போகிறீர்கள்" என்று கேட்டால் அப்போது அன்னிய வீட்டி லிருக்கும் நமது மனம் எவ்வித மிருக்கும்?

படிப்பு நினைவில் கொஞ்சம் பொழுது துக்கமின்றிக் கழிகிறது. அக்கா இங்குதான் இருப்பாள். அவள் கூப்பிடக் கூப்பிட நான் இங்கு ஓடிவந்தேன். அவள் இங்குதான், எங்கேயாவது நின்று கொண்டிருப்பாள். நான் சென்று பார்த்து வருகிறேன்; இங்கேயே இருங்கள் மாமா!

விமலநாதன்:—வேண்டாம்! வேண்டாம்! நான் அவசரமாகப் போகவேண்டும். சென்று வருகிறேன்.

கோபிநாதன்:—ஏன் மாமா! அக்காவை நீங்கள் பார்க்க வேண்டாமா! எங்கள் வீட்டிற்கு நீங்கள் வரவேண்டாமா! எங்கள் வீட்டிற்கு வாருங்கள் மாமா!

விமலநாதன்—இல்லை யப்பா! எனக்கு வேலையிருக்கிறது. மற்றொரு சமயம் உங்கள் வீட்டிற்கு வருகிறேன். நான் சென்று வருகிறேன். விமல நாதன் விசாரித்தான் என்று உன் அக்காவிடம் சொல்லு. எனது நண்பர்கள் எனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் நான் போய் வருகிறேன்" என்று கூறிக் கொண்டே போய்விட்டான்.

பிறகு கோபிநாதன் அவ்விடம் விட்டுத் தனது தமக்கை முன் இருந்த இடத்திற்குச் சென்றான். அங்கு அவளைக் காணாமையினால் மனங் கலங்கியபடியே, 'அக்கா! அக்கா! என்று கூப்பிட்டுக் கொண்டே மீண்டும் முன்னிருந்த இடத்திற்கு வந்தான். அவ்வாறு வரும் வழியில் ஓர் மரத்தடியில் போடப்பட்டிருந்த ஆசனமொன்றில் அவள் சாய்ந்திருப்பதைக் கண்டு வெகு ஆவலோடு அருகில் சென்று "அக்கா! அக்கா!" என்று அழைத்தான்.

அம்மாதரசி மயக்கத்தினால் படுத்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டுக் கலங்கிப் போய் "ஆகா! அக்காவுக்கு மயக்கம் வந்து

அக்கேள்வியினால் நாம் எவ்வித துயாமுற்றிருப்போம். இந்த ஒன்றிலிருந்தே அவர்களுக்கு நமது வருகை பிடிக்கவில்லை என்பதும் நம்மை அலக்ஷ்யம் செய்கிறார்கள் என்பதும் நமக்கு விளங்கவில்லையா! இது தான் தனித்து தாமே பட்டு அறியும் அனுபவமோ என்று வாளாவிருப்பதைவிட பாஸ்தலத்தில் வேறு என்ன செய்யக்கூடும்?

விட்டதா! "அக்கா! அக்கா!" என்று மிகுந்த வாஞ்சையோடு அழைத்து அவள் பக்கலில் அமர்ந்தான். சற்று நேரத்திற்கெல்லாம் சுலோசனு' என்கிற அப்பெண்ணரசி கண் திறந்து பார்த்து "கோபிநாதா" என்று அழைத்தாள். அருகிலிருந்த கோபிநாதன் அழுதுகொண்டே "அக்கா! உனக்கு மயக்கம் தெளிந்துவிட்டதா!" என்று வெகு பரிவுடன் கேட்டான்.

சுலோசனு:—என் கண்ணே! எனக்கு இப்போது நன்றாகத் தெளிந்து விட்டது. இத்தனை நேரம் எங்கே போனாய் என் கண்ணே! நீ மிகவும் அழுதாயா! நீ இங்கு வந்து எவ்வளவு நேரமாயிற்று?

கோபி:—நான் இப்போதுதான் அக்கா வந்தேன். அக்குழந்தையை வைத்துக் கொண்டிருந்தவர்கள் பேசிய பாஷை எனக்குப் புதிதாக இருந்தமையால் ஒன்றுமே விளங்கவில்லை. அவர்களை உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கையில் நமது விமலநாத மாமா அங்கு வந்து என்னைக் கண்டு பேசி நிரம்பவும் விசாரித்தார். நமது துக்ககரமான நிலைமையைச் சொல்லிச் சொல்லி நிரம்பவும் பரிதாபப் பட்டு வருந்தினர். உன்னைப் பற்றி விசாரித்தார். உனக்காகக் கண்ணீர் விட்டார்; உள்ளம் உருகினர். தான் வந்து விசாரித்ததாக உன்னிடம் சொல்லச் சொன்னர். அவர் நமக்கு என்ன உறவு அக்கா! அவரை நம்முடைய வீட்டிலேயே போஜனம் செய்வதற்கு அழைத்தேன். மற்றொரு முறை வருவதாகக் கூறிச் சென்றுவிட்டார்.

சுலோசனு:—கோபு! நாம் இனி வீட்டிற்குப் போகலாம் வா! இங்கு வந்து வெகுநேரமாகிவிட்டது. வண்டிக்காரனும் காத்திருப்பான்." என்று கூறிக்கொண்டே தன் தம்பியையும் அழைத்துக்கொண்டு வண்டியிருக்குமிடத்திற்கு வந்து வண்டியில் ஏறிக்கொண்டு தமது வீட்டை அடைந்தாள்.

அவ்விடத்தின் மர்மமறியாது நாம் சென்றுவிட்டபின்னர் அங்குள்ள—நடந்த—விஷயங்களை வெளியிட்டால் வீணைகத் தூருகின்றூர்களென்ற பொல்லாச் சொல்லும் தலைதூக்கும். ஆகையால் நம்மை நாமே கொத்துகொண்டு மௌனமா யிருப்பதுதான் உத்தமம்.

நமது சுலோசனுவையும் கோபிநாதனையும் இதுபரியந்தம் அறிந்த நமது நேயர்கள் அவர்களுடைய பூர்வோத்திரத்தையும் பிறப்பு, வளர்ப்பு, ஸ்திதி முதலியவற்றையும் அறிய மிக்க ஆவல் கொண்டிருப்பார்களாதலால் அதைச் சிறிது விளக்குவோம். சுலோசனுவின் தந்தை ஓர் பிரபல வக்கிலாகவிருந்தார். ராமஸ்வாமி என்பது அவர் பெயர். ஜானகியம்மாள் என்பது அவர் மனைவியின் பெயர். இவர்களுக்குப் பூர்விகத்தில் அதிகமான செல்வம் ஏதும் கிடையாது. ராமஸ்வாமி தமது சொந்த முயற்சியினுல் கஷ்டப் பட்டுப் படித்து நியாயவாதத் தொழிலை மேற்கொண்டு வெகு யோக்கியராயும், தர்மசிந்தை யுடையவராயும், சத்தியந் தவருத உத்தமராயும் நடந்து வெகு விரைவில் படிப்படியாக உயர்ந்து யாவராலும் புகழப்படும் யோக்யதையை யடைந்தார். அவரை அறியாத வரே கிடையாது. 'ப்ளீடர் ராமஸ்வாமி' என்ருல் சிறு குழந்தைக்கும் தெரியும். அந்த உத்தமர் தமது புத்தி சாமார்த்தியத்தினுல் வெகு விரைவில் புகழும், சீரும், செல்வமும் சேகரித்துவிட்டார். அக்குணவானுக்குத் தகுந்த குணவதியான ஜானகியம்மாளும் அத்யந்த ப்ரீதியுடனும் குடும்பத்திலுள்ள பெரியோர்களுக்கு மிகுந்த பிரியமுண்டாகும்படியாயும் நடந்துகொண்டு, வரவுக்குத் தக்க செலவு செய்து தரும சிந்தையோடும் தெய்வ பக்தியோடும் ஒழுகி குணவதியாக விளங்கியதால் அந்தக் குடும்பமும் தம்பதிகளும் பூவும் மணமும், சொல்லும் பொருளும், உடம்பும் உயிரும், கரும்பும் சுவையும், எள்ளும் எண்ணெயும் போல மிகவும் அந்யோந்யமாகக்காண்போர் வியக்கும் வண்ணம் வாழ்ந்தார்கள்.

அத்தகைய உத்தமர்களுக்கு நெடுநாளாகியும் ஒரு குழந்தை கூட இல்லாததால் அக்குடும்பத்தினரே மனக்குறை யடைந்து வருந்தித் தெய்வங்களையெல்லாம் வேண்டி வரங்கிடந்தார்கள். ஜானகியம்மாளுக்கும் அதுவிஷயத்தில் நிரம்பவும் குறைதான்.

படுத்துக்கொள்ள இடங்கொடுப்பதற்கே அத்தகைய வார்த்தை கூறிய] உத்தமர்கள் போஜனமளிக்கும் விதத்தில் எப்படி இருப்பார்களென்று நாமே இன்னும் மற்ற செய்கையில் தெரிந்துகொள்ளலாம். அவர்களிடம் போஜனம் செய்யத்தான் மனம் சம்மதிக்குமா?

ராமஸ்வாமியும் தமது சொந்த உழைப்பால் தேடிய செல்வத்தை யாள்வதற்கு ஒரு குழந்தை இல்லையே என்று ஏங்கி அதே சிந்தனையுடன் மெலியவாரம்பித்தார். என்ன வேண்டியும் ஆயிரம் விரதமிருந்தும் கடவுள் மனமிரங்கி ஒரு மகவை அளிக்காமையால் குடும்பத்தில் எல்லோருடைய மனமும் சதா வருத்தத்திலாழ்ந்திருந்தது. ராமஸ்வாமியும் மனோவேதனையினால் மிகவும் இளைத்துவிட்டார். தமது தொழிலிலும் முன்போல அவ்வளவு ஊக்கஞ் செலுத்துவதில்லை. "இனி இந்தச் செல்வத்தை ஏன் திரட்டவேண்டும்? இவைகளை வாரித் தானம்செய்துவிட்டு நான் எங்கேயாவது யாத்திரை போகப் புறப்பட்டுவிடுகிறேன். ஆதியில் நான் பரம ஏழையாகவிருந்து பலவிதக் கஷ்டங்களை யனுபவித்து, வெகு சிரமப்பட்டு வீடு தோறும் படிமிதித்து வாரச் சாப்பாடு சாப்பிட்டு, இலவசக் கலாசாலையில் படித்துத் தெருவிலுள்ள விளக்கினடியில் நின்று படித்து, ஏதோ கடவுள் கிருபையால் இத்தகைய ஸ்திதியை அடைந்தேன். நான் பட்ட கஷ்டம் தீரும்படியான கண்மணியே எனக்கு மனைவியாக வாய்த்தாள். 'நாம்தான் எவ்வளவோ கீழ் நிலையிலிருந்து கஷ்டப்பட்டோமே, நமக்குப் பிறக்கும் குழந்தைகளுக்காவது மனக்குறை தீரச் சிறப்புடன் யாவும் நடத்தவேண்டும்' என்று நான் எண்ணி மனத்திற்குள் அளவிடவியலாத ஆவல்கொண்டிருந்ததெல்லாம் வீணாயிற்றே! ஆதியில் நான் செல்வமின்றிச் சிறப்பற்று மனவேதனை யடைந்தேன். இப்போதோ செல்வக் குழந்தையின்றிச் சிறப்பற்று வேதனையடைகின்றேன். எத்தனை தனமிருந்தபோதிலும் ஓர் சதனில்லாத வாழ்வு வாழ்வாகத் தோன்றவில்லையே! கண்ணில்லாத சரீரமும், சந்திரனில்லாத இரவும், மந்திரியற்ற அரசாட்சியும், கருணையில்லாத மனமும், மக்களில்லாத வாழ்வும் இன்பமற்றவை என்று பெரியோர் கூறுவது சரியாகவே இருக்கிறது.

வீட்டுக்கு வந்தது முதலே தாம் வந்த இருவரில் ஒருவரை அலக்ஷியம் செய்வதும் மற்றவர்களைத் தடபுடலாக மதித்து உபசரிப்பதுமான வித்யாசத்தை ஒரு நொடியில் காட்டிவிட்டுப் பிறகு வீட்டைவிட்டுப் போகும்போது மிகவும் பாந்தவ்யம் பாராட்டிச் சண்டைபிடித்துத் தாம் சரியாக நடந்துகொண்டதுபோலும் நாம் ஏதோ வித்யாசமாக இருப்பதுபோலும் கூறும் வார்த்தையானது அடங்காத வியப்பையும், தாங்காத துக்கத்தையும் அளிக்கின்றது.

அன்று தசரதச் சக்கரவர்த்தி புலம்பியதுபோல நானும் புலம்பலா யிற்றே! அவருக்காவது நான்கும் நான்கு ரத்னங்களாக நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள். எந்தக்கடவுளின் அருளாலேனும்—எந்த முன்னோர்களின் புண்ணியத்தினாலேனும்—எனக்கு ஒரு குழந்தையாவது பிறக்காதா! என்ன செய்வேன்? இதுதான் நாம் செய்த தவத்தின் பயன்.'' என்று மிகுந்த மனக்லேசத்தை யடைந்து வருந்துவாரானர்.

இவருடைய தாய்தந்தையர்களோ தங்கள் புத்திரன் விஷய மாய் வாய்விட்டுப் புலம்பித் தமது குறையைக் கூறுவார்கள். ஜானகி யம்மாள் என்ன செய்வாள் பாவம்! அவள் மனதிலுள்ளவற்றை வெளியிடுவதற்கும் வெட்கம். மனத்திற்குள்ளாகவே கரைந்து உருகி அவளடைந்த வேதனைக்கு ஓர் அளவே இல்லை. தெய்வங் களையெல்லாம் வேண்டுவதும், விரதமிருப்பதும், பூஜைகள் செய்வது மாக எத்தனையோ சத்கார்யங்களைச் செய்தும் பலனே கிடைக்க வில்லை. ஜானகியினிடத்தில் அவள் மாமி நாத்திகளுக்கு இருந்த பிரியமெல்லாம் நாளடைவில், குழந்தை இல்லாத குறையினால் சிறிது சிறிதாகக் குறைந்து வெறுப்பும், அதிருப்தியும் உண்டாகத் தொடங்கி வளரவும் ஆரம்பித்துவிட்டது. ஜானகியைக் கடிந்து பேசவும் முற்பட்டுவிட்டார்கள். அவள் மீது சீற்றங்கொண்டு 'மலடி மலடி' என்ற பதங்களாலேயே அவளை அர்ச்சிக்கப் புறப் பட்டுவிட்டார்கள். மலடாகவிருப்பதும், கர்ப்பவதியாவதும் கடவு ளின் செயலல்லவா! அதை யறியாது ஜானகியை ஏன் வெறுப்பாக நடத்தவேண்டுமென்று ராமஸ்வாமி தப்பித்தவறிக் கேட்டுவிட்டால், அன்று வீட்டில் அனர்த்தந்தான். இதைக்கண்ட ஜானகியின் உள் ளம் உருகும். ஆகா! காலக்கொடுமையே இவ்விதம் நடக்கின்றது.

அத்தகைய சாமார்த்தியக்காரர்களின் செய்கை இததான் போலும். "ஏன் இரண்டு நாளாகக் காப்பி சாப்பிடப் பிடித்தது. இன்றுமட்டும் பிடிக்கவில்லையோ! ஓட்டலில் சாப்பிட்டால் பிடிக்கும்போலிருக் கிறது.'' என்ற குத்தலான வார்த்தைகளைக் கோபக்குறி ததும்பிய முகத்தோடு சொல்லும் மனிதர்களின் மற்றைய வார்த்தைகள் எப்படி இருக்கும் என்பதை நாம் விவரிக்கவேண்டாம்.

கரும்புபோன்றிருந்த மனிதர்களே வேம்புபோலாகிவிட்டார்களே! இது நான் செய்த பாபமேயன்றி பிறரைக் கூறுவானேன். ஒரு குழந்தை பிறக்கவில்லை என்ற இகழ்ச்சியினலல்லவா என் கதி இவ் விதமாகிவிட்டது. எந்தக் கடவுளை எத்தனை வேண்டியும் ஒன்றுக் கும் கண் தெரியவில்லையே! ஹா! நான் என்ன மதியீனமாகப் பேசுகிறேன். எய்தவனை விட்டு அம்பை நோவதால் என்ன பயன்? பூர்வம் நான் செய்ய பாபமல்லவா என்னை இவ்விதம் சோதிக்கின் றது? 'அம்மா' என்ற சொல் மாருதிருந்த என் மாமி நாத்திகளின் மனமும் மாறுதலடைந்து வித்பாசமாகப் பேசும்படி யாகிவிட்டதே! என்ன செய்வேன்? பர்த்தாவின் தேகமோ நாளுக்குநாள் மெலிந்து கொண்டே வருகின்றது. அவர் மனத்திலுள்ள விஷயத்தை வெளியிடமாட்டாது உள்ளடக்கியே வாதனை யடைகின்றார். இத் தனைக் கஷ்டங்களும் ஒரு குழந்தை இல்லாததன் கொடுமையா லன்றோ நேர்ந்துவிட்டன! விடிந்ததுமுதல் விளக்குவைக்கும் வரையில் எத்தனை தரம் 'மலடு மலடு' என்ற வார்த்தையைக் கேட்பேன். அந்த வார்த்தையைக் கேட்கும்போது என் மனம் இடியொலி கேட்ட நாகத்தைப்போலக் கலங்கித் தவிக்கின்றதே! இத் தகைய வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு புவியிலிருப்பதைவிட உயிர் நீத்துவிடவும் மனம் துணிகின்றதே! என்ன செய்வேன்?" என்று சதா வேதனையடைந்து மெலிந்துவிட்டாள் ஜானகியம்மா ளும்.

இவ்விதம் சிலகாலஞ் சென்றது. பலனென்னவோ கிடைக்க வில்லை. எல்லோருடைய மனவெறுப்பும் துக்கமும் அதிகமாகிவிட் டது. ஒரு தினம் ஜானகி தன் கணவன் தனித்திருந்த சமயத்தில் அவரை நோக்கி கண்ணீர் பெருக்கியவாறு மிக்க பணிவுடன்

"எனக்கு உபசரிக்கத் தெரியாது. 'சாப்பிடுகிறாயா! சாப்பிடு. இல்லையா இல்லை.' இவ்வளவுதான் எனக்குத் தெரியும்." என்று பெரிய சண்டை பிடிக்கத் தொடங்கிவிடுகிறார்கள். உபசரிக்கத் தெரியாதவர்கள் எல்லோரிடத் திலும் அப்படி இருந்தால் அந்த வார்த்தையை ஒப்புக்கொள்ளமுடியும். பக்ஷ பாதம் காட்டிவிட்டு இந்தச் சொட்டைச் சொல்லை என் சொல்லி இன்னும் வருத்தத்தை உண்டாக்கவேண்டுமோ? தெரியவில்லை.

தாழ்ந்த குரலில் பேசத்தொடங்கி "பிராணநாதா! நான் ஓர் வரங் கேட்க நினைக்கிறேன். அதை மனமுவந்து அளிக்கவேண்டும்" என்று கேட்டாள்.

ஜானகி குடும்பத்திற்கு வந்த நாள்முதலாக இவ்விதமாக ஒரு வார்த்தையும் கூறியதேயில்லை யாகையினால் ஜானகியின் வார்த்தை யைக் கேட்ட ராமஸ்வாமிக்கு அடங்காத ஆச்சரியமும் திகைப்பும் உண்டாகிவிட்டது. உடனே அவர் ஜானகியை நோக்கி, "ப்ரியே! ஜானகி! இதென்ன புது மாதிரியாகப் பேசுகின்றாயே! உன் வார்த்தையில் எனக்கு ஒன்றும் அர்த்தமாகவில்லை! என்ன விஷயமாயினும் நீ தாராளமாகக் கேட்கலாம். இத்தகைய சங் கோஜமேன்? நானே உன்னிடம் சில விஷயங்கள் கூற நினைத்தேன். நீ கூறுவதைக் கூறு" என்று மிகவும் ஆதரவுடனும் வாஞ்சையோ டும் கேட்டார்.

ஜானகி:—நாதா! நான் மகத்தான பாவத்தைச் செய்து இப் பூவுலகில் பிறந்து, ;என்னால் என்னைப் பெற்றோருக்கும் சுகமின்றி, அடைந்த உங்கள் குடும்பத்திற்கும் மகிழ்ச்சி யின்றி ஒன்றிற்கும் உதவாத பண்டமாகி இது பரியந்தம் வளர்ந்து விட்டேன். நான் இப்போது சொல்லப்போவதை வெகு நாட்களுக்கு முன்பே சொல்ல நினைத்தேன். இன்னும் சற்று பொறுக்கலாம், பொறுக் கலாமென்று இதுகாறும் பொறுமையை வகித்திருந்தேன். இனிமேல் வாளாவிருப்பது கூடாதென்று தங்களிடம் கூறவந் தேன். அதாவது, தாங்கள் என்னை இதுவரை மனைவியாக அடைந்து மகப் பேறின்றி வருந்திவந்தது போதும். இனிமேல் வேறு ஒரு மங்கையைத் தாங்கள் மணந்துகொண்டு புத்திர பாக்யத்தை அடைந்து தாங்கள் எல்லோரும் மகிழ்வது போல என்னையும் மகிழ்விக்க வேண்டும். இதுவே என்னுடைய கோரிக்கை; என் னுடைய மனத் துயர மெல்லாம் ;அப்போதுதான் நீங்கும். நாதா! கோரிக்கையைப் பூர்த்தி செய்யவேண்டும்.

இவைகளை எல்லாம் செய்பவர்கள் மனதில் அவைகள் நியாயமாயும் தாங்கள் ஏதோ சமத்காரமாகச் சொல்வதாயும் நினைப்பார்கள்போலிருக்கிறது. இந்த அனுபவத்தை அவர்களடையும்போதல்லவா அதன் உணர்ச்சி விளங்கும்!

ராமஸ்வாமி:—ஜானகி! இதென்ன வார்த்தை! இதுவா உன்னுடைய கோரிக்கை? இந்த வரனையா கேட்கிறாய்! பேஷ்! புத்திர பாக்யம் உண்டாவதும்;உண்டாகாததும் தெய்வச் செயலே யன்றி மனிதச் செயலில் என்ன இருக்கிறது? நமக்கு அந்த பாக்கியம் இல்லையோ, என்னவோ! அதனால்தான் நாம் வருத்த மடைகிறோம், நீ படும் கவலையை நானறியமாட்டேனா! எனக்குமட்டும் அந்தக் கவலை யில்லையா? என்ன செய்யலாம்? நாம் செய்த பூஜாபலன் இவ்வளவு தான். என்னுயிரினும் இனிய உன்னை விட்டு மற்றொருத்தியை நான் மணப்பதா! இனி, அந்த வார்த்தை சொல்லாதே! இதைக் கேட்க என் உள்ளம் துடிக்கின்றதே!

ஜானகி:—நாதா! நான் இப்போதிருப்பதுபோல அப்போதும் இராமல் இறந்துவிடுவேனா! ஒரு மகப்பேறு கிடைப்பதற்கு நாம் எந்த வழியில் முயற்சிக்கவேண்டுமோ அந்த வழியில் முயற்சி செய்து தான் தீரவேண்டும். நானோ! உங்கள் பெற்றோர், கூடப் பிறந்தோர் கூறுவது போல மலடியாக ஆய்விட்டேன். நாதா! உங்களை மணம் செய்துகொள்ளும்படி உங்கள் தாயாரும் தமக்கையும் பலதடவையும் போதித்து வற்புறுத்துவதை நானறியாமலில்லை. என்னிடத்திலேயே நேராக 'இந்த மலடு தொலைந்தாலல்லவா நமது சந்ததி விளங்கும். இது இருக்கும் வரையில் குடி விளங்குவதேது.' என்று கூறுகிறார்கள். அவர்களே என்னை எவ்வளவு ஏற்றமாக வைத்திருந்தார்கள். இப்போது அவர்களுடைய மனம் எப்படி மாறிவிட்டது பார்த்தீர்களா? அவர்கள் மீது ஒரு சிறிதும் தப்பிதமில்லை. எனது கர்மந்தான் இவ்விதம் ஆட்டுகின்றது; அவர்களையும் அப்படியெல்லாம் பேசவைக்கிறது. நான் இவ்விதம் கூறுவதால் அவர்கள்மீது குறை சொல்வதாக எண்ண

பத்துப் புத்தகங்களைப் படித்தால் ஒரு நாவல் எழுதிவிடலாம் என்று வாய் கூசாமல் எதிரிலேயே சொல்லிவிடுகிறார்கள். அந்த மனிதர்கள் 10 புத்தகங்களைப்படித்துவிட்டு ஒரு நாவல் என் எழுதாமலிருக்கிறார்களோ தெரிய வில்லை. 100 புத்தகங்களைப் படித்துவிட்டால் உடனே 10 நாவல்கள் எழுதி மேதாவியாகி விடலாமே. பிறருக்கு வழி சொல்பவர்கள் தாமேன் வாளா விருக்கவேண்டும்.

வேண்டாம். நான் அவர்களை ஒருபோதும் தூஷணையாக எண்ண மாட்டேன். இவை எல்லாம் உலகவியல். பிரபஞ்ச விநோதங்களில் இதுவும் ஒன்று. எப்பொழுதும் எவரும் ஒரே மாதிரியான குணத்துடன் இருப்பாரென்று சொல்ல முடியாது. காலச் சக்கரம் இவ்விதம்தான் சுழன்றுகொண்டே போகும். காலச் சக்கரமென்பது அவரவர்களின் நல்வினை தீவினை இரண்டையும் ஒட்டியதேயாகும். அவர்கள் தங்களிடம் கூறுவதையும் தாங்கள் அதற்கு மறுத்துப் பேசுவதையும் நான் கவனித்துக்கொண்டே இருக்கிறேன். நாதா! தாங்கள் அங்ஙனம் அவர்கள் சொல்லைத் தட்டுவது சிறிதும் அழகல்ல. அதையே நானும் கூறிக் காரியத்தை நடத்தி வைக்கவே ஆசைப்படுகிறேன். எந்த சமயத்திலும் நான் இங்கேயே இருக்கும்படியான கிருபையை எனக்குச் செய்து நமது சந்ததியையும் விளங்கச்செய்யவேண்டும். இப்போதே நீங்கள் தகுந்த பிரயாசைப்பட்டு இக்காரியத்தைச் செய்யவேண்டும். இதற்குத் தடை கூறலாகாது.

ராம:—என் ப்ரிய ஜானகி! இத்தகைய வார்த்தையை நீ கேட்பாய் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. என் தாயாரும் தமக்கையும் என்னைச் சில தினங்களாக இது விஷயமாய்த் தொந்தரவு செய்வதை நீ கவனித்திருக்கிறாய் என்பது எனக்கு உண்மையாகத் தெரியாது. இவ்விஷயத்தை உன்னிடம் கூறாமல் ஒளித்தேன். உன்னை இவ்விஷயமாக வருத்தங்கொள்ளாதிருக்கும்படியாக ஆறுதல் கூறவேண்டுமென்று எண்ணியே சற்று முன் உன்னிடம் தெரிவித்தேன். நீயோ எனக்கு முன்னரே எல்லாவற்றையும் தெரிந்துகொண்டிருக்கிறாய். நான் இந்த விஷயத்தில் எவ்வளவோ ஆழ்ந்து யோசித்தும் உன்னைவிட்டு இன்னொரு மங்கையுடன் பழகுவதற்கு என் மனம் சற்றும் இசையவில்லை. நான் என்ன செய்வேன். ஒரு குழந்தை இல்லையே என்கிற பெரும்

"சொர்க்கத்திற்குப்போனாலும் கஷ்கத்தில் மூட்டை" என்பது போல நாம் நிம்மதியாக இருக்கவேண்டி ஒரு இடத்திற்குப் போனாலோ அங்கேயும் பலவிதத் தொல்லையே வந்து சேருகின்றன. இதுவும் ஒரு வேடிக்கை.

கவலை மனதில் இருந்தபோதிலும் உன்னை நினைக்க என் மனம் தத்தளிக்கின்றதே!

ஜானகி:—நாதா! தங்கள் மனம் வீணாகத் தத்தளிக்கவேண்டாம். என் வார்த்தையைக் கேளுங்கள். எனது மாமனின் மகள் நல்ல அழகி; வயதுவந்த பக்குவவதியாயும் இருக்கிறாள். அவளை வேண்டுமானால் நான் எனது மாமனிடத்தில் சொல்லி ஏற்பாடு செய்துவிடுகிறேன். இல்லையேல் உங்கள் தாயாரின் இஷ்டப்படிக்கு வேறு பெண்கள் இருப்பின் மணந்துகொள்ளுங்கள். நீங்கள் இது விஷயமாக இனி வேறு யோசனையே கொள்ளவேண்டாம். உங்களுடைய சுகதுக்கங்களுக்கு நானும் பாத்திரமானவளாகையால் என் வார்த்தையைத் தட்டாது நிறைவேற்றவேண்டும்.

ராம:—ஜானகி! ஜானகி! நான் என்ன செய்வேன்? வேறு மங்கையை மணப்பதாகவே வைத்துக்கொள்ளுவோம். அவளிடத்தில்மட்டும் நமக்குப் புத்திர சந்தானம் ஏற்படுமென்பது என்ன நிச்சயம்? இவை யெல்லாம் கடவுளின் செயலல்லவா! நமக்கு அந்த பாக்யம் கிடைப்பதாயிருந்தால் இத்தனை காலமாகக் கிடைத்திருக்கலாகாதா? ஒருத்தி இருக்க மற்றொருத்தியை மணந்துவிட்டால் அதனால் எத்தனை துன்பங்கள் நேருமோ அவைகளை நினைத்தால் எனக்கு மிகுந்த வருத்தமுண்டாகின்றதே.

ஜானகி:—நான் இவ்விஷயத்தைப்பற்றி எத்தனை தரந்தான் சொல்லுவேன். நீங்கள் ஒரு சிறிதும் கவலையே கொள்ளவேண்டாம். நான் சொல்வதைச் சற்று அன்போடு கேளுங்கள். நான் இதுவரையில் சொல்லியவற்றையே* உங்கள் தாயார் தமக்கையிடத்திலும் சொல்லப்போகிறேன். நீங்கள் இதை மறுக்கவே கூடாது. என்னை திருப்திசெய்து மகிழச்செய்யவேண்டுமானால்

---

* பரஸ்தலத்திற்குச் சென்று முன்பின்னறியாது தவிக்கையில் இத்தகைய மனிதர்களின் சகவாசமும் நேர்ந்துவிட்டாலோ பரஸ்தலத்தில் கண்காக்ஷி காண வந்ததின் பெருமை நொடியில் அடங்கி மனத் துக்கமே சம்பவித்து விடுகின்றது. அதுவே வாழ்க்கையில் என்றும் மறையாத காட்சியாகியும் விடுகின்றது.

இந்தக் காரியத்தை நீங்கள் பூர்த்தி செய்யவேண்டும். என்னைப் பற்றி நீங்கள் கவலையே கொள்ளவேண்டாம். நான் ஒரு விநாடியும் உங்களைவிட்டுப் பிரியமாட்டேன். இது உண்மை. எனக்கு யார் யாரால் என்னென்ன துன்பங்கள் நேர்ந்தபோதிலும் உங்களை இமைப்பொழுதும் பிரியாது சகித்துக்கொண்டிருப்பேன். இதை நீங்கள் சத்யமாக நம்புங்கள். நீங்கள் எப்படியும் நமது குடும்ப விருத்தியின் பொருட்டாக விவாகம் செய்துகொண்டுதான் தீர வேண்டும். உங்கள் மனத்திற்கு இஷ்டமான பெண்ணை விவாகம் செய்துகொள்ளுங்கள்" என்று மிக்க பலவந்தமாக வற்புறுத்திக் கொண்டிருக்கும் சமயத்தில், இவ்வார்த்தைகளையெல்லாம் மறைந்து கேட்டுக்கொண்டிருந்த மாமியும், நாத்தியும் அவ்வறையில் யோசியாமல் சடக்கென்று நுழைந்து ராமசாமியை நோக்கி "அடே! ராமு, நாங்கள் சொல்லியபோதெல்லாம் ஏதேதோ சாக்குப் போக்குகள் சொல்லிவந்தாய். இப்போது உன் மனைவியே உன்னோடு இது விஷயமாகப் பேசியதை நாங்கள் கேட்டுக்கொண்டே இருந்தோம். இனிமேல் என்ன தடை சொல்லுகிறாய்? நமது சேஷண்ணாவின் மகள் தனபாக்கியம் இருக்கிறாளே! அவளுடைய அழகைப்பற்றிக் கூறவே வேண்டாம்; அவளை உனக்கு மணம் செய்விக்கும் விஷயத்தில் ஒருவிதமான ஆக்ஷேபணையும் ஏற்படாது. நமது சேஷண்ணாவை நான் இன்றே கண்டு கேட்கிறேன். இந்த மாதத்திலேயே விவாகத்தை முடித்துவிடலாம். என்ன சொல்கிறாய்?" என்று வெகு அட்டகாஸத்துடன் கேட்டாள்.

"கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்" என்பதுபோலும், "ஆசைப்பிசாசு ஆடாதிருக்காது," என்பதுபோலவும் நமது ராமஸ்வாமிக்கு ஏற்கெனவே இருந்த புத்திர ஆசை அவர் புத்தியைத் திருப்பிவிட்டது. அங்கிருந்த ஏனையோரும் அதைப்பற்றியே மனங்கரையும்படியாகப் பாடிப் படித்துக் கூறியதால் கல்யாணம் செய்துகொள்வதற்கு அவர் மனம் சற்று இசைந்தும் விட்டது.

நமது சொந்த ஊரில் உள்ள காக்ஷிகளைக் கண்டு ஆநந்திக்க ஏதோ அசந்தர்ப்பம் நேர்ந்து விடுகின்றது. வெளியூரிலுள்ள அதே காக்ஷிகளுக்குச் சென்று பணத்தைச் செலவிட்டுப் பார்த்து வருகிறோம்.

அவ்வாறு விவாகத்திற்கு மனச் சம்மதம் ஏற்பட்டதும் தனது சம்மதத்தைத் தன் தாயினிடத்தில் தெரிவித்தார். இந்த வார்த்தைகளைக் கேட்க வெகு நாளாகக் காத்துக்கொண்டிருந்த அவரது தாயார், மட்டற்ற மகிழ்ச்சி யடைந்து, தன் மகனை நோக்கி, "அப்பா! ராமு! நான் இப்போதே சேஷண்ணாவின் வீட்டிற்குச் சென்று இவ்விஷயத்தை அவர்களிடத்தில் ப்ரஸ்தாபித்துக் காரியத்தை முடித்துக்கொண்டு வந்துவிடுகிறேன். நீ இங்கேயே இரு." என்று கூறிவிட்டு அப்போதே விரைந்தெழுந்து அவள் குறிப்பிட்ட சேஷண்ணாவின் வீட்டை நோக்கி வண்டியில் செல்லலானாள். நமது ஜானகிக்குமட்டும் மனதிற்குள் தன்னை யறியாத ஏதோ ஓர் சங்கடம் உண்டாகிக் கலக்கி வேலை செய்துகொண்டே இருந்தது. அவளுக்குண்டான அந்த மனவேதனையின் காரணத்தை அவளால் கண்டறியக்கூடவில்லை. அதை அவள் வெளிக்காட்டிக்கொள்ளாமல் தன் வேலையைக் கவனிக்கச் சென்றுவிட்டாள்.

THE REGISTRAR 16 MAR 1931

2-வது அதிகாரம்

விவாகக் களிப்பு விவகார வெறுப்பு

சேஷண்ணா என்பவர் நமது ராமஸ்வாமியின் தாயாராகிய சுப்பம்மாளுக்கு அம்மான்முறையாகவேண்டும். அவருக்கு இருமுறை விவாகம் செய்தும் அவ்விரண்டு மனைவிகளும் அந்தப் புண்ணிய புருஷரிடத்திலிருப்பதற்கு மனம் சகியாமல் பரலோகம் போய்ச் சேர்ந்துவிட்

திடீரென்று ஓர் ஓட்டலில் நுழைவதால் என்ன பயனெனில் கையிலுள்ள பணம் செலவாகிறது; வயிறும் நிறைவதில்லை, ஆசாரக்காரர்களுக்கு ஆசாரம் குலைகின்றது; இதுதான் பலன்.

டார்கள். அந்த மகானுபாவனின் குணங்களைப்பற்றி நாம் அதிகமாக எதுவுமே சொல்லாது சுருக்கக் கூறிவிடலாம். பணம் சம்பாதிப்பதில் எத்தகைய ஈனத் தொழிலாயினும் அஞ்சாமல் செய்து பணத்தைத் திரட்டிவிடுவார். இவருடைய அட்டூழியங்கள் ஒன்றிரண்டல்ல. அவைகளை எல்லாம் சகித்துக்கொண்டு ஒத்துழைக்கும் குணமுடைய ஓர் புண்ணியவதியைத் தேடி மூன்றாவது விவாகம் செய்துகொண்டார். அந்தம்மாள் தன் புருஷனின் சகலமான காரியங்களுக்கும் துணைபுரிந்து வந்ததுடன் சேஷண்ணாவின் புத்திக்கு எட்டாத புதிய யுக்தி யோசனைகளெல்லாம் எடுத்துரைத்து அவரை மிகவும் உத்ஸாகப்படுத்தியும் வந்தாள். இருவரும் ஒருமித்த மனத்துடன் வேலை செய்துவந்ததால், சேஷண்ணாவின் காதில் பெரிய வைரக்கடுக்கனும், விரல்களில் மோதிரங்களும் அழகாக ஏறிவிட்டன. அவரது மூன்றாம் மனைவியாகிய **கோமளம்மாளின்** ஆபரணங்களெல்லாம் வைரமாக மாறின. அவள் சரிகைப் புடவைகளைத் தவிர வேறு கட்டுவதில்லை. சில காலத்திற்குள் அவர்கள் சொந்தமாக ஒரு மோட்டார்காரும் வாங்கிவிட்டார்கள். அந்த ஊரிலிருந்த தனவந்தர்களின் எண்ணிக்கையில் தாமும் சேரவேண்டுமென்ற முக்கிய ஆசையே அவர்களிடம் குடிகொண்டிருந்தது. அந்த ஆசைப்படி செல்வந்தர்களுக்கு உரிய சகலவிதமான சம்பத்திற்கும் வேண்டிய தனத்தைச் சேர்த்துவிட்டார்கள். சேஷண்ணா செய்யும் தொழிலும் தனம் சம்பாதித்த விவரமும் இன்னதென்பது ஊர் ஜனங்கள் அறியாததில்லை. எனினும் அவரது பெயரைக் கேட்டால் எல்லோருக்கும் ஒருவிதமான பயம் மனத்தில் உண்டாகிவிடும். ஏனெனில் 'யாருக்கு எந்த சமயத்தில் என்ன தீங்கு இழைத்துவிடுவாரோ!' என்கிற பயமே எல்லோருக்கு மிருந்ததால் அவரை "சேஷண்ணா! சேஷண்ணா!" என்று வெகுவாகக் கொண்டாடிப் பகைத்துக்கொள்ளாமல் கௌரவமாகவே நடந்துகொள்வார்கள். அவருடைய வீடு பெரிய பங்களாவாக மாறிவிட்டது. கணவனும்

கதர் இயக்கத்தைச் சிலர் பிடிக்கின்றதென்கிறார்கள்; சிலர் பிடிக்கவில்லை என்கிறார்கள். கதர் ஆலயத்திற்குள் சென்றாலோ உள்ளே நுழைவதற்குக் கூட இடம் கிடைக்கிறதில்லை. உள்ளே சிரமப்பட்டு நுழைந்தால் கதரும் அகப்படுவதில்லை. அது ஆதரிப்பதனாலோ, அனாதரிப்பதனாலோ தெரியவில்லை

மனைவியும் பரம; ஆனந்தத்துடன் அறம் இல்லாத இல்லறம் நடத்துகையில் அவர்களுக்கு இன்னும் அதிகமான ஆனந்தத்தை அளிக்க செல்வி யொருத்தி பிறந்தாள்.

தம்பதிகள் இருவரும் மெத்த மனங்களித்துத் தமக்குள்ள அபரிமிதமான தனத்தை அனுபவிக்கப் புதல்வி ஜனித்துவிட்டதால் அந்தக் குழந்தைக்குத் தனபாக்யம் என்று நாமகரணம் செய்தார்கள். குழந்தை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. அக்குழந்தையின் தேகமாத்யந்தம் வைர ஆபரணங்களை நிறைத்துவிட்டார்கள். தனபாக்யமும் சிறிது எழிலுள்ளவளாகையால் அவ்வாபரணாதிகளால் பின்னும் சிங்காரமாக விளங்கினாள். சேஷண்ணாவுக்கும் கோமளம்மாளுக்கும் சதா: பணந்தேடுவதிலும், நகை செய்வதிலும் நாட்டமேயன்றிப் பெண்ணைப் படிக்க வைக்க வேண்டும்; சங்கீதம் கற்றுக்கொடுக்கவேண்டும் என்னும் எண்ணமே; அவர்களுக்கில்லை. ஆகையினால் தனபாக்யத்தை ஆடையாபரணாதிகளால் அலங்கரித்து அவ்வெளியழகையே கண்டு களித்துவந்தார்கள்.

தனபாக்யத்திற்குப் பத்து வயதாகிவிட்டது. சேஷண்ணாவைக் கிழத்தனம் பின்றொடர வாரம்பித்துவிட்டது. போதாத காலம் யாரை விடுகிறது? அவருடைய தொழிலும் முன்போல நடக்காமல் தடைப்பட்டுவிட்டது. இந்நிலையில் தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் அவர்கள் வீட்டில் புகுந்து சகலமான சொத்துக்களையும் துரும்புங்கூட விடாமல் களவாடிக் கொண்டுபோய் விட்டனர். அந்த விபரீத சம்பவத்தால் சேஷண்ணாவின் சப்த நாடிகளும் விழுந்து போய் படுக்கையோடு படுக்கையாகத் தேகமும் ஸ்வாதீனமற்று தளர்ந்துவிட்டார். அவர் மனைவிக்கு "ஆ! நம் சொத்தெல்லாம் போய்விட்டதே!" என்று வயிறெரிந்து அடித்துக்கொண்டதில் வாய் அப்படியே ஒரு பக்கமாகக் கோணிப்போய்விட்டது! 'இவர்

இயற்கை விநோதங்களின் அழகைப் பார்க்குங்கால் ஆநந்தப் பாரவசமாகின்றது. கடவுளின் அபூர்வ ச்ருஷ்டியை எண்ணி அவரை வணங்கும்படியான உணர்ச்சி தானாக உண்டாகிவிடுகின்றது.

களுக்கு எந்த வழியில் பணம் வந்ததோ அதே வழியில் போய்ச் சேர்ந்துவிட்டது' என்று ஊரார் எல்லோரும் கூறத் தொடங்கினார்கள். இந்தச் சம்பவங்கள் நடப்பதற்குச் சில தினங்களுக்கு முன்பு தான் சேஷண்ணா வைர மாலை பொன்றை வாங்கினார். அதற்குப் பணம் இன்னும் கொடுக்கப்படவில்லை. அந்த மாலையும் களவு போய்விட்டது. அந்த வைர வியாபாரி கொள்ளை போன சங்கதி கேள்விப்பட்டு வந்து கேட்டு பணத்திற்குப் பதிலாக அவருடைய மோட்டாரைக் கொண்டுபோய்விட்டான். இவர்கள் பணத்தை எல்லாம் பாங்கியில் வைத்தால் வெளியாருக்குத் தெரிந்துவிடுமென்ற மூட எண்ணத்தினால் வீட்டிலேயே இரும்பு பெட்டியில் வைத்திருந்தார்கள். எல்லாம் களவு போய்விட்டதால் இவர்களுக்கு எஞ்சி நின்றது பங்களா ஒன்றுதான்.

சேஷண்ணாவோ பேசுவதற்கும் வாய் ஸ்வாதீனமற்றுப் போய்விட்டதால் அவர் உபயோக மற்றப் பண்ட மாகிவிட்டார். கோமளம்மாளுக்கு வாய் கோணலாகி விட்டாலும் சரியாகப் பேசுவதற்கு வந்தபடியால் அவளுக்குக் **கோணவாய்க் கோமளம்** என்ற பட்டம் வந்துவிட்டது. கையில் காலணாவும் இல்லாமலிருக்கையில் பங்களா எதற்கு என்று அதை விற்பதற்கு விலை கூறினாள். "கோணவாய்க் கோமளிக்கு இந்த பங்களா ஒன்றுதான் இருக்கிறது. அதை அவள் எப்படியும் விற்றுத்தான் தீரவேண்டும்" என்ற சங்கதி உலகமறிந்தது; ஆதலால், அந்த பங்களாவைத் தகுந்த விலைக்கு எவரும் கேட்கவில்லை. எப்படியும் விற்றுத்தான் பிழைக்கவேண்டு மென்ற நிர்ப்பந்தத்தை யாவரும் அறிந்தபடியால் குறைந்த விலைக்கே எல்லோரும் கேட்கத் தொடங்கினார்கள். பிறகு ஒன்றுக்குப் பாதி விலையாக விற்றுத் தொலைத்து அந்தப் பணத்திற்குச் சிறிய வீடு ஒன்று வாங்கிக்கொண்டு வீட்டுச் சம்சாரத்திற்கு வேண்டிய தட்டு முட்டுச் சாமான்கள் சகலமும் வாங்கிக்

வாசனையற்ற புஷ்பமாயினும் அதனுடைய அழகிற்காக அதனைக் காணும் போது ஆசையோடு பார்க்கிறோம். அதேபோல புத்தி இல்லாத பெண்களாயினும் அவர்கள் அழகாயிருப்பாரேயானால் அந்த அழகால் ஏற்றம்பெற்றுவிடுகிறார்கள்.

கொண்டு கையிலும் கொஞ்சம் பணம் வைத்துக்கொண்டு குடும்பம் நடத்தத் தொடங்கினள்.

நன்றாகப் பெருமையுற்று வாழ்ந்த நாள் செல்லச் சிறுமை யுற்றுத் தரித்திரம் தலையெடுத்து தாழ்ந்துவிட்ட நாளை எண்ணி யெண்ணி கோணவாய்க் கோமளம் அதிக விசனமுற்று அவமானத் தினல் வெளியில் தலை காட்டாமல் உள்ளேயே அடைத்துக்கிடந் தாள். தனபாக்யத்திற்கு 15 வயதாகி பருவமடைந்துவிட்டாள். அவளை மணப்பதற்கு யாருமே முன் வராமையினல் பணமற்றக் கோணவாய்க் கோமளி அதிகக் கவலைகொண்டு தவித்து, நமது சுப்பம்மாளிடத்தில் அடிக்கடி 'நமது தனபாக்யத்திற்கு ஒரு வரன் பாருங்கள்' என்று வேண்டிக்கொள்வாள். மாமாவினிடத்தில் அதிக வாஞ்சையுடைய சுப்பம்மாள் அவர்கள் கை சளைத்துவிட்ட தால் மிகவும் பரிதாபப்பட்டு, தன் மகனுக்குத் தெரியாமல் அவ் வப்போது பணத்தினுலும் சகாயம் செய்துவந்தாள். தனபாக் யத்திற்குத் தக்க வரனும் பார்த்துக்கொண்டிருந்தாள். நமது ஜானகிக்குக் குழந்தை பிறக்காது போய்விடவே அந்த சாக்கை வைத்துக்கொண்டு தன் மகனுக்குத் தனபாக்யத்தை விவாகம் செய்துவிடவேண்டுமென்று தீர்மானித்தாள். அந்தக் காரியத்தை நிறைவேற்றும் சமயமும் வாய்த்துவிட்டதால் சுப்பம்மாள் மிகுந்த களிப்புடன் கோணவாய்க் கோமளியின் வீட்டிற்கு வந்து எல்லா வற்றையு மெடுத்துக்கூறி, உடனே விவாகத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டாள்.

வீட்டிற்கு வந்து மகனிடம் தெரிவித்து அடுத்த வாரத்தி லேயே விவாகத்திற்கு முகூர்த்தமும் வைக்கப்பட்டது. அந்த முகூர்த்தத்திலேயே ராமஸ்வாமிக்கும் தனபாக்யத்திற்கும் வெகு சிறப்பாக விவாகம் நடந்துவிட்டது. மகா உத்தமியாகிய நமது ஜானகியம்மாளுடைய நற்குணத்தைப் பற்றியும், கணவனுக்குத்

எத்தகைய திவ்ய ஸ்தலங்களுக்குச் சென்று கடவுளை வணங்கிய போதி லும் தனது சொந்த ஊரிலுள்ள கடவுளின் நாமதேயமே முதலில் வருகிறது. இதற்குக் காரணம் தேசாபிமானத்தின் தன்மையே போலும்.

தானே மறுமணத்தைச் செய்துவைக்கும் அவளுடைய உதார குண தையும் கொண்டாடிப் போற்றுதார் கிடையாது. தனது கணவன் வேறு மங்கையுடன் மணக்கோலத்துடன் வீற்றிருக்கும் காட்சியைக் காண ஜானகிக்கு சிறிது சந்தோஷம் உண்டாயிற்று எனினும் அவளால் கூறவியலாத ஒருவித சங்கடம் வயிற்றில் தோன்றி வதைக்கின்றது. அந்த வேதனையின் ;தன்மை இன்னதென்று விவரிக்கக் கூடவில்லை. சில சமயத்தில் அவளை யறியாது கண்ணில் தாரை தாரையாகக் கண்ணீர் பெருகுகின்றது. அதை யாரும் அறியாதவாறு துடைத்துக்கொண்டு "சர்வேசா! இனியா வது என் காதருடைய மன வருத்தத்தைப் போக்கி ஒரு குழந்தையை அளிக்கவேண்டும். 'மலடி' என்று இடித்துக் கூறு வதை இனியாகிலும் மறக்கச் செய்யவேண்டும்." என்று வேண்டிய வண்ணம் தனது வருத்தத்தை உள்ளடக்கிக்கொண்டு வெகு சந்தோஷமாக இருப்பவள் போலவே நகை முகத்துடன் எல் லோருடனும் கலந்துகொண்டிருந்தாள்.

விவாகம் வெகு சிறப்பாக நடந்தது. விவாகத்திற்கு வந் திருந்த எல்லோரும் அவரவர் ஊர் போய்ச் சேர்ந்தார்கள். பிறகு தனபாக்கியத்தம்மாள் குடித்தனப் பாங்கிற்கு உரியவளானுள். விவாகமான நாள் முதல், சேஷண்ணவும் கோணவாய்க் கோ மளமும் ராமஸ்வாமியின் வீட்டிற்கே வந்துவிட்டார்கள். கோண வாய்க் கோமளிக்கு நமது ஜானகியைக் கண்டால் பிடிப்பதே இல்லை. தாயின் உத்தம குணத்தையே மகளும் மேற்கொண்டாள். ராமஸ்வாமி மட்டும் ஜானகியுடன் எப்போதும் போல நடந்து வந்தாரென்றாலும் இராக் காலத்தில் ஜானகி யம்மாள் தனித்த விடத்தில் துக்கத்தைத் துணை கொண்டு கண்ணீரும் கம்பலையுமாகத் துயில்வது வழக்கமாக வரத் தொடங்கிற்று. மறு விவாகமான நாள் முதல் ஜானகி யம்மாள் தனபாக்யத்தைத் தங்கை முறையும் வைத்து அழைக்க வாரம்பித்து அவர்களிடத்தில் எவ்வளவோ

தேச பக்தியும் ஐக்கிய பாவமும் மிகுந்துள்ள இக்காலத்திலும் கூட அத்தகைய பக்தி யற்ற மிருக மனிதர்கள் சிலர் உலாவுகின்றார்கள்.

அன்பாக நடந்து வந்தாள். எனினும், அந்த இருவரும் ஜானகி யுடன் நன்றாக முகங் கொடுத்துப் பேசவதே யில்லை. எந்த நேரமும் ஜானகி ஒருத்தி நீங்கலாக மற்றைய எல்லோரும் ஒன்றாகக் கூடிக் குலாவி வம்பாடிப் பேசுவதும் மகிழ்ச்சியாக இருப்பதுமாக வித்யாசத்தையே பாராட்டி வந்தார்கள்.

தன்னிடத்தில் எத்தனை தூரம் ஓரவஞ்சனையாக நடந்த போதி லும் அவைகளையெல்லாம் மனத்திற்குள் அடக்கிக்கொண்டு ஒன்றையும் பாராட்டாமல் நடந்துவந்தாள் ஜானகி. இவ்விதமே ஆறுமாத காலமாயிற்று. சேஷன்னு இவ்வுலகத்தாரிடம் விடை பெற்றுக்கொண்டு சென்றுவிட்டார் பாக்கி அனுபவத்திற்கு. அதன் பிறகு கோணவாய்க் கோமளி தனது வீட்டை விற்றுவிட்டு அந்தப் பணத்தைத் தன் பெண்ணுக்கே கொடுத்துவிட்டாள். கோண வாய்க் கோமளிக்குத் தன் மருமகனுகிய ராமஸ்வாமி, நமது ஜானகியுடன் பேசுவது மிகவும் வயிற்றெரிச்சலாக இருந்தமையால், அதை ஜாடை ஜாடையாகக் கூறி “மலட்டுப் பிணங்களுக்கு மகிழ்ச்சி என்ன? பட்டாடை என்ன? ஆபரண மென்ன? வீணுக உட்கார்ந்து கொண்டு தண்டச்சோறு கொட்டிக்கொள்வதைவிடப் பிராணனை விடலாம்” என்று தாறுமாருக நிந்தனை பேசுவாள். இந்த அநியாய வசை மொழிகள் ராமஸ்வாமியின் செவியில் விழவே அவர் மிகுந்த ஆத்திர மடைந்து “என்னுருயிர் ஜானகியை யாரேனும் வித்யாசமாகப் பேசினுல் இவ் வீட்டை விட்டு உடனே ஓடிப்போக வேண்டும். ஜாக்ரதை! நானிருக்கும் வரையில் எவரும் இங்கு வாலாட்ட இடந்தர மாட்டேன். கண்ட நாய்களும் பேய்களும் இவ் வீட்டில் பெரியதனம் நடத்தக் கொஞ்சமும் முடியாதென்பதை மறக்கவேண்டாம்” என்று வெகு ஆத்திரத்துடன் கூறிவிட்டு ஜானகியைத் தேற்றினர்.

ஜானகி யம்மாளோ வீட்டில் நடக்கும் எந்த விஷயத்தையும் தன் நாயகனிடம் கூருமல் பொறுமையுடன் வகித்து வந்தாள்.

எந்த இயக்கத்தை ஆரம்பித்தபோதிலும் அதற்குத் தூஷணையும் பூஷணை யும் தானுகவே முளைத்து விடுகின்றன. ஆனுல், கள்ளுக் கடையைப் புதிதாக ஆரம்பித்தால் எகோபித்த மனத்துடன் அது நிலைத்து விடுகிறது.

பின்னும் சில மாதங்கள் கழிந்தன; தனபாக்யத்தம்மாள் எல்லோரும் களிப்படையக் கர்ப்பவதி யானுள். அவள் கர்ப்பவதியானது நமது ஜானகி யம்மாளுக்கே முதலில் மிகுந்த சந்தோஷத்தை யளித்தது. தனபாக்யத்தை இருந்த விடத்தை விட்டு அசைய விடாமல் அவளுக்குச் சகல விதமான பணிவிடைகளேயும் தானே செய்து வந்ததுடன் அவளுக்கு வேண்டிய தின்பண்டங்களைத் தையும் செய்துகொடுத்து உபசரிப்பாள். எவ்வளவு பிரியத்துடன் அவள் நடந்தாலும் அந்தப் பிசாசிற்கு அவளிடத்தில் சிறிதும் விசுவாசமென்பதில்லை; த்வேஷ புத்தியே குடிகொண்டிருந்தது. தனபாக்யத்தின் போதனை சக்திக்கு எல்லேயே இல்லை. அவள் செய்த உபதேசங்களே யெல்லாம் ராமஸ்வாமி சற்றும் செவியில் வாங்காது ஜானகி யிடத்தில் அந்தப் பழைய அன்பு மாருமலே யிருந்தார். இப்படி உலகில் திட புத்தியுடனிருப்பவர் வெகு அபூர்வம். எவ்வளவோ நிதான புத்தியுடையவர்களும், கல்வியும் விவேகமு முடையவர்களும், இளையாள் ஒருத்தி வந்துவிட்டால், வந்த அப்பரதேவதையும் வஸ்ய மந்த்ரங்களைப் பிரயோகித்து விட்டால், அவள் வசமாகி, அவள் ஆட்டும் ஆட்டங்களுக்கெல்லாம் ஆடி, தெய்வ வசத்தால் புத்திர சந்தான மற்று மனம் மறுகி மடிந்து, தன் கதியை நினைத்து நினைத்து வருந்திக்கொண்டிருக்கும் மூத்த மனைவியை, நேற்று வந்த நேரிழையின் சொல்லில் மயங்கி, புத்தி கெட்டு நிந்திப்பதும், அடித்துத் துன்புறுத்துவதுமாக, அவள் புண்பட்ட மனத்தில்,எரிகின்ற வீட்டில் எண்ணெய் விடுவது போல் துன்பத்தை அதிகரிக்கச் செய்துவிடுகிருர்கள். இவ்விஷயத்தை உலகில் எத்தனை குடும்பங்களில் பார்க்கிறேம்? இதற்குத் தகுந்தபடி "இளையாளைக் கண்டது போல் இருக்கிறது உன்னைப் பார்த்தால்" என்னும் ஒரு நல்ல பழமொழிக்கு அசட்டு அர்த்தத்தைக் கற்பித்து விடுகிருர்கள், "இளையாளைக் கண்டதுபோல்" என்பதற்கு லக்ஷ்மியைக் கண்டதுபோல்" என்பது தான் பொருள். ஆனுல் நம் ராமஸ்வாமி அவ்விதம் மறந்தும் நடக்கவில்லை.

பலர் கூடிச் செய்யும் காரியந்தான் சித்தி யடையும் என்பது அனுபவ வாக்கு. ஆனுல் வீட்டில் சமயல் விஷயத்தில் பல பெண்கள் கூடிக் காரியம் செய்ய முன் வந்தால் அன்றைய சமயல் கெடாதிருப்பது அரிது.

தனபாக்யம் பின்னும் சில தினங்களில் ஓர் அழகிய பெண் மகவைச் சந்த்ரோதயமானது போல ஈன்ருள். அந்தக் குழந்தை யின் ரூபலாவண்யத்திற்கு இணை என்பதே கிடையாது. பிறந்தது பெண் குழந்தையாக விருந்தபோதிலும் அதைக் கண் பெற்றது போலவே கருதினர்கள். எல்லோருக்கும் அக் குழந்தை மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கிவிட்டது. ராமஸ்வாமி அக் குழந்தைக்கு வெகு பிரியமாக சுலோசனு! என்று பெயரிட் டார். அந்த சுலோசனுவே நாம் முதலதிகாரத்தில் தெரிவித்த மடந்தை என்பதை வாசகர்களுக்கு நினைப்பூட்டுகிருேம்.

அக்குழந்தை விடத்தில் நமது ஜானகியம்மாளடைந்த ஆனந்தத்திற்குக் கங்கு கரையில்லை. தன் வயிற்றில் பிறந்தது போலவே எண்ணிவிட்டாள். அக் குழந்தையே தனது உயிர்நிலை என்று அபிமானித்து மட்டில்லாத சந்தோஷத்துடன் குழந்தையை எடுத்துச் சீராட்டுவாள். தனபாக்யத்திற்கும் கோணவாய்க் கோமளிக்கும் ஜானகி குழந்தையைக் கையில் எடுப்பது சற்றும் பிடிக்காமல் "மலட்டு முண்டங்கள் கையினல் குழந்தையைத் தொட் டாலும் குழந்தைக்குக் கெடுதல் நேரும்; சனியனுக்குச் சற்றும் அறிவு என்பதே இல்லை" என்று நிந்திப்பார்கள். அந்த நிந்தனை யைப் பொறுக்க முடியாமல் குழந்தையைத் தன் கையினுலும் தொடாமல் "சர்வேசா! எனக்கென்றுதான் ஒரு மகவு அளிக்காது மோசம் செய்து இந்தக் கதிக்கும், மலடி என்ற வசைக்கும் என்னை ஆளாக்கி விட்டாய், என் பர்த்தாவிற்குப் பிறந்த குழந்தையைத் தீண்டக் கூடாத பாபியாகவும் என்னைச் செய்துவிட்டாயே. ஹா ஜகதீசா! என்னுடைய பிழைப்புக் கடைசி வரையில் இவ்விதமே தான் நடந்து முடியும்படியாக என் தலையில் விதித்துவிட்டாயா!" என்று கண்ணீர் விட்டுக் கலங்குவாள். என்ன செய்வாள் பாவம்! இந்தக் கஷ்டங்களை யெல்லாம் தன் கணவனிடத்தில் ஒரு சிறிதும் எடுத்துரைக்காமல் மிகுந்த பொறுமையுடன் சகித்து வந்தாள்.

பக்ஷியினங்களின் ஆரவாரம் காலை நேரத்தில் ஓர் அழகு; மாலை நேரத்தில் ஓர் ஆனந்தம், இனிமை; மற்றைய நேரத்தில் தனித்த ஒலி,

தனபாக்யம் ஜானகியை வீட்டைவிட்டுத் துரத்திவிடவேண்டும் என்று எத்தனையோ விதத்தில் முயற்சிசெய்து பார்த்தாள். அதற்கு ராமஸ்வாமி இடங்கொடுக்கவில்லை. ஜானகியும் இவைகளைப் பொருட்படுத்தவில்லை. ஆகையினால் அவள் ஆசை நிறைவேறவில்லை. சுலோசனா வளர்பிறைச் சந்திரனைப்போல் மிகவும் செல்வமாக வளர்ந்துவந்தாள். ராமஸ்வாமி சுலோசனாவை வளர்த்த அருமையைக் கூற சாத்யமன்று. சுலோசனாவின் ஆண்டு நிறைவிழா வெகு சிறப்பாக நடந்தது. பின்னர் சில மாதங்களில் கோணவாய்க் கோமளியும், சுப்பம்மாள், அவள் மகள் ஆக மூவரும் அடுத்தடுத்து சில மாதங்களுக் கொருவராய் இவ்வுலகத்தைவிட்டு உத்தரவு பெற்றுக்கொண்டு எல்லா உரிமைகளையும் தனபாக்யத்திற்கே அளித்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். தனியரசு புரியும் தனபாக்யத்தின் அரசாட்சியிலிருக்கும் ஜானகியம்மாளின் நிலைமையைப்பற்றிக் கூறவும்வேண்டுமா; தனக்கும் தன் புருஷனுக்கும் மட்டும், காணும்படியாக அரிசி முதலிய பண்டங்களை எடுத்துவைத்து அதற்குத் தகுந்த காய்கறிகளையும் கொடுத்து ஜானகியை சமையல் செய்யும்படித் திட்டம் செய்வாள். ஜானகியம்மாள் அந்த அரிசியை அப்படியே வட்டித்துத் தன் கணவருக்கிட்டுத் தனபாக்யத்திற்கும் பரிமாறுவாள். சில தினங்களுக்குத் தனபாக்யத்திற்கே போதாமற்போவதும் உண்டு. ஒரு நாள் அந்த மூதேவி மகா உத்தமியாகிய ஜானகியை நோக்கி "சோறு வடிக்கும்போதே முதலில் நீ நன்றாகத் தின்றுவிட்டு எங்களுக்கு மண்ணடித்து விட்டாயோ!" என்று அதிகாரமாகப் பேசினாள். ஜானகியம்மாள் கண்ணீர் பெருக்குவதைத் தவிர வேறு என்ன செய்வாள் பாவம்! அவைகளைத் தன் நாயகனிடம் தெரிவித்தால் சண்டையும், பூசலும், மனஸ்தாபமும் அதிகமாகும். அதோடு தனபாக்யத்திற்குத் தன்மீது விரோதம் மிகுந்துவிடும். நாம் இவ்வீட்டில் இருக்கவேண்டுமானால் பொறுத்துத் தான் தீரவேண்டுமென்று எண்ணி இவைகளையெல்லாம் சகித்

எந்தப் பண்டத்தைப் பார்த்தபோதிலும் அவைகளை எல்லாம் வாங்கிவிட வேண்டுமென்ற ஓர் கவர்ச்சித்தன்மையும் ஆசையும் உண்டாகின்றது. ஆனால் பணப் பையைப் பார்க்கும் போதோ கவர்ச்சி முற்றும் மன அதிர்ச்சியாகி விடுகின்றது.

துக்கொண்டு, எல்லோரும் உண்டு மிருந்தால் தான் உண்பதும் இல்லேயேல் சோறுவடித்த கஞ்சியில் உப்புப் போட்டுக் கலக்கிக் குடித்துவிட்டுச் சில வேளை பட்டினிகிடந்தும் தன் காலத்தைக் கடத்தலானுள். இந்த சங்கதி ஒன்றையும் ராமஸ்வாமிக்குத் தெரிவிக்காமலே அவர் அறியாதவண்ணம் நடந்துவந்தாள்.

பிறகு தனபாக்யத்திற்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. ராமஸ்வாமி அளவற்ற ஆநந்தத்தை படைந்து அக்குழந்தைக்குக் கோபிநாதன் என்ற பெயர் சூட்டினர். இரு குழந்தைகளுக்குத் தாயாகிவிட்ட தனபாக்யத்தின் அதிகாரங்கள் முன்னிலும் பலத்துவிட்டன. தனக்கு நிகர் எவருமில்லே என்ற அகம்பாவத்தினுல் தன் கணவனேயும் அலக்ஷ்யம் செய்யத் தொடங்கினுள். தன் கணவன் முன்னிலேயிலேயே ஜானகியைத் தாறுமாருக வசைபாடத் தொடங்கினுள். ஜானகியை அவள் செய்யும் கொடுமைகள் அனேத்தையும் ராமஸ்வாமி தானே நேரில் கண்டறிந்து மிகுந்த வருத்தங்கொண்டு தனபாக்யத்தை கண்டித்தால் அந்த இராக்ஷஸி அவரை எதிர்த்து வாயாடிச் சண்டையிட்டு "மலட்டு முண்டைக்கு பரிவு பலத்துவிட்டதே! குலத்தை விளக்கவந்த கோமகள் அவளோ! நானே! நிலத்தில் நிற்பதைபறியாது வளித்துப் பேசி உடம்பை அராற்றிக்கொள்கிறீர்களே! நிறுத்துங்கள்!" என்று பேயாட்டம் ஆடித் திருப்பாட்டுப் பாடுவாள்.

ராமஸ்வாமி அந்தப் பிடாரியை எவ்வளவு கண்டித்தும் அவள் அடங்குவதாயில்லே. அவர் விவாகம் செய்துகொள்ளு முன் இருந்த நிலேமையையும் இப்போது தான் அடைந்துள்ள துன்பத்தையும் எண்ணி மிகுந்த துக்கத்தை படைந்தார். மகா உத்தமியாகிய ஜானகியின் பொறுமையை எண்ணி வியந்தார். குழந்தைகள் வேண்டுமென்ற வேட்கையினுல் மறுமணம் செய்துகொண்டு குழந்தைகளே படைந்தும் மனத்திற்குச் சரியான சந்தோஷமின்றி சதா வீட்டில் விவகாரமும், வெறுப்பும், சண்டையும்,

---

தூங்குவதே சிலருக்குப் பேராநந்தமாக இருக்கின்றது. அவர்கள் விழித்திருக்கையில், ஏதேனும் விஷேதத்தைக் காணும்போதும் இனிமையான சங்கீதத்தைக் கேட்கும் போதும் தூக்கமே அவர்களுக்கு வருகின்றது.

பூசலுமாகவே ஆகிவிட்டது. குழந்தைகள் மீதுள்ள பாசத்தினல் அவ்வீட்டைவிட்டு வெளியேறவும் மாட்டாது தவிக்கின்றூர்; தன பாக்யத்தின் கொடுமைகளைச் சகிக்காது அபாரமான கஷ்டத்தை படைந்து மனமுருகுகின்றூர்.

இந்த மனைவியால் படும் கஷ்டமோ அவரால் சகிக்கக் கூடியதாயில்லை. இந்த வெட்கக்கேட்டை வெளியிடவும் மாட்டாமல் மனத்திற்குள்ளேயே வைத்து மறுகித் தவிக்கின்றூர். நாள் செல்லச் செல்ல தனபாக்யத்தினிடத்தில் பேசுவதையும் விட்டுவிட்டார். குழந்தைகளோடு குலாவுவதும் ஜானகியுடன் பேசுவதுமாகத் தன் காலத்தைக் கழிக்க வாரம்பித்தார். ஜானகிதான் தன் கணவனைத் தன்னோடு பேசவிடாது செய்துவிட்டாள் என்ற ஆத்திரத்தைக் கொண்டு தன பாக்கியம் அவளுக்கு முன்னிலும் அதிகமாகக் கொடுமை காட்டத் தொடங்கினள். "மலட்டு மரமே! இவ்வீட்டைவிட்டுத் தொலைந்து போ!" என்று அடிக்கொருமுறை கூறுவாள். அதற்கு ஜானகி மிகவும் தாழ்ந்த குரலில் "அம்மா! இவ்வீட்டிற்கு நீதான் அரசி. இருந்தாலும் நான் இவ்வீட்டு வேலைக்காரிபோல இருந்தாகிலும் வேலை செய்வேனேயன்றி வீட்டைவிட்டுப் போகமாட்டேன். அம்மா! தன பாக்யம்! நீ ஒரு வேலைக்காரியை வைத்துக்கொண்டால் உனக்குப் பணச்செலவுதானே! அதற்குப்பதிலாக நானே உனக்கு வேலை செய்து பணத்தை மிச்சப்படுத்துகிறேன். நீ என்னை என்ன செய்தாலும் வீட்டைவிட்டுப் போகமாட்டேன்." என்று கூறி முடிப்பதற்குள் ஆவேசங்கொண்ட தனபாக்யம், "என்ன! என்ன! நீ எனக்குப் பணத்தைச் சேர்க்கிருயா! உன் திருட்டுத்தனம் எனக்குத் தெரியாதென்று பார்த்தாயா! தந்திரமாகப் பணத்தைப் புருஷனிடமிருந்து வாங்கி வாங்கிச் சேர்த்து உன் பிறந்தவீட்டிற்கு அனுப்பும் ரகஸியம் எனக்குத் தெரியும். கையிலாகாத கணவன் ஒரு அசடு இருக்கையில் உனக்கென்ன குறைவு, அதிகமாகப் பேசாதேயடி! ஜாக்ரதை. மலடிக்கு வாய்ப்பதட்டம் கூடாது. என் கைச்சோற்றிற்குத்

சங்கீதம் பாடத் தெரிந்த எவர்க்கும் வாய் ஒரு நிமிடமும் சாதாரணமாக இருப்பதில்லை; எதோ ராகத்தை இழுத்து முணு முணுத்தவாறே இருக்கின்றது.

தொங்கிக்கொண்டிருக்கும் உனக்கு வாயெதற்கு?" என்று ஒரே கூச்சலிடுவாள்.

அந்தப் பிடாரியிடத்தில் அதிகமாக எதிர்த்துப் பேசினல் மானம் போய்விடுமென்று மானத்திற்கு அஞ்சிப்பேசாது தன் வேலையைச் செய்துகொண்டு தலைவிதியே என்று கிடப்பாள் ஜானகி. கோபிநாதனும் சுலோசனவும் ஜானகியிடம் வாஞ்சையோடு தாவிக் குதித்துத் தாமாகவே வந்தாலும், தனபாக்யம் அவர்களை வெடுக்கென்று பிடித்து இழுத்துக்கொண்டு போய்விடுவாள். அந்த மூதேவி அறியாவாறு ஜானகி குழந்தைகளை எடுத்துச் சீராட்டி மகிழ்வாள்.

இவ்விதமே சில வருடங்கள் கழிந்தன. ராமஸ்வாமிக்கு விட்டுக்கவலையே அதிகரித்துவிட்டது. "ஐயோ! குழந்தை வேண்டுமென்று ஆசைகொண்டு செய்த காரியம் அனர்த்தமாகி விட்டதே. பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காய் வந்து முடிந்ததே. மகா குணவதியாகிய ஜானகிக்குப் பேராபத்தாக முடிந்ததே! மூத்த மனைவியான ஜானகிக்கு நம்மிட முள்ள அன்பும் ஆசையுங் கூட இப் பிடாரிக்கு நம்மிட மில்லை. அவளிடத்தில் நமக்கு மில்லை. இரண்டாந் தாரம் என்பது கழுத்திற்குத் தாரமாகி (கயிறு) விட்டதே! இவளால் குழந்தைகளை படைந்தும், இவளை மணப்பதற்கு முன்னிருந்த சந்தோஷமும் போய்ப் புது வெள்ளம் வந்து பழைய வெள்ளத்தையும் கொண்டுபோன சங்கதியாகி விட்டதே. தாயின் தீய குணமே குழந்தைகளுக்கு நிரம்பிவிட்டால் அக் குழந்தைகளின் கதியும் கேவலமாகிவிடுமே! இப்போதுள்ள நிலையில் இரு குழந்தைகளின் குணமும் மிகச் சிறந்ததாக விருக்குமென்று தோன்றுகின்றது. சேர்க்கையும் சகவாஸதோஷமும் கூடி இக்குழந்தைகளும் பாழாகிவிட்டால் என் செய்வது? கெட்டது தான் சீக்கிரம் பிடிபடுமாதலால் இந்தப் பிடாரியிடத்திலிருந்து

எந்தக் குடும்பத்தில் சென்று பார்த்தாலும் ஒரு சொட்டும் சிறு திட்டும் இல்லாமலில்லை. தூரத்து மலை பார்வைக்குப் பச்சையாகத்தான் இருக்கிறது. நெருங்கிப் பார்த்தால் சிங்கம் காடிகளெல்லாம் கிளம்புகின்றன.

குழந்தைகளை இப்போதே பிரித்துவிட்டால், அவர்கள் நற்குணம் விருத்தியாகி நல்லவர் என்று பெயரெடுப்பர். இந்தப்பாவியின் பழக்கமும் துர்க்குணமும் அவர்களைத் தொடராது நாம் அவ்வாறு செய்வோமானுல் நம்மை சீரழித்துக் கோர சம்பவங்களை நிகழ்த்திவிடுவாளே! என்ன செய்வேன்? ஜானகியின் அருமையான குணங்கள் சிறிதும் படியவிடாது, அவள் குழந்தைகளைப் பார்க்கவும் கூடாதென்று இச்சனியன் பேத புத்தி கற்பித்துப் போதிக்கின்றதே! இதென்ன சங்கடம்! நாம் இவளை விவாகம் செய்துகொள்வதற்கு முன்னர், குழந்தை இல்லையே என்ற ஒரே விசனத்துடன் இருந்த என்னை, இப்போது சொல்லறியாத துன்பங்கள் சூழ்ந்துவிட்டனவே. ஜானகியின் விருப்பப்படி அவள் மாமன் மகளை நாம் மணந்திருந்தால் அவ்விருவரும் அந்யோன்யமாக ஒற்றுமையுடன் இருந்திருப்பார்கள். ஐயோ! நான் பெரிய முட்டாள்தனம் செய்துவிட்டேன். என் தாயின் தொந்தரவால் இச்சனியனை விலைகொடுத்து வாங்கிவிட்டேனே! கிருஷ்ணவிக்ரஹம்போன்ற குழந்தைகளை அளித்திருந்தும் அவைகளால் என்னை நம்பியுள்ள ஜானகிக்குச் சிறிதும் சுகமில்லாது போய்விட்டதே! "வளர்க்கும் முறைப்படித் தளிர்க்கும் இலை" என்பது போலக் குழந்தைகளுக்கு நல்ல புத்தி படிமானப்படுகிற நாளில், நல்லவிதமாக பழக்கினுலன்றோ அவைகள் புத்தியோடும் நற்குணத்துடனும் விளங்கும். என்ன கஷ்டகாலமிது! நான் அப்போதே நன்ருக யோசித்து ஓர் அன்னிய ஏழைக் குழந்தையை ஆசைக்கு ஸ்வீகரித்துக்கொண்டிருந்தால் எவ்வளவோ மேன்மையாய்—மகிழ்ச்சியாயிருந்திருப்பேன். ஜானகியும் களிப்புடன் இருப்பாளே! இப்போது ஆதியோடந்தமாய் எல்லாம் கெட்டுவிட்டதே! ஜானகியை விட்டுவிட என்னுயிருள்ளளவும் இசையமாட்டேன். குழந்தைகளைப் பிரியவும் என்னுல் முடியவில்லை. ஜானகியும் நானும் தனித்த வாஸம் செய்வோமென்ருலோ இப்பைசாசம் குழந்தைகளைப் பாழாக்கிவிடுவதோடு என் கண்ணிலும் காட்டமாட்டாள். எப்படிப் பார்த்தாலும் கவலையும் சங்கடமுமாக

மாமியின் மனங்கோணுது நடக்கும் மருகியையும், மருகி மனம் வருந்தாது நடக்கும் மாமியையும் இக்கலியுகத்தில் காண்பது அரிதிலும் அரிது.

விருக்கிறதே! என்ன செய்வேன் இத்தொல்லைக்கு? நான் ஆசை கொண்டதெல்லாம் எனக்கு மோசமாக முடிந்ததே! ஐயோ! நான் இவ்வித விவாகம் செய்துகொண்டு படும் துன்பம் போதும்; போதும். இனி யாரும் என்போன்று அல்லற்படவேண்டாம். எனது செல்வத்தை முற்றும் தானம் செய்திருந்தால் எத்தகைய புண்ணியம் கிடைத்திருக்கும்? அந்த பாக்கியமும் நீங்கிவிட்டது. அறிவில்லாத மனைவியுடனும், மக்களுடனும் வாழ்வதைவிடக் கொடிய வன விலங்குகள் இருக்கும் காட்டில் வசிக்கலாம். என்னருமை ஜானகியின் உத்தம குணத்தினுலும், அபாரமான புத்தி விசாலத்தினுலும் இன்புற்று மகிழ்ந்த எனக்கு, இவ்வறிவில்லாத சனியனுடன் அந்திய காலத்தில் அவதிப்படவேண்டிய விதியும் வந்ததே. சனியனை நானே விலை கொடுத்துத் தேடிக்கொண்டதுபோலல்லவா ஆய்விட்டது. வேண்டுமென்று உறவு, உறவு என்று என் கழுத்தை அறுத்து இந்தப் பீடையை என் தாயார் என் தலையில் கட்டி என்னை மீளாத துயரக்கடலில் ஆழ்த்திவிட்டாளே! நான் புத்திர சந்தானமில்லையென்று பட்ட துன்பமெல்லாம் இந்த ஸ்திதியில் நினைக்கின் இன்பமாகவே தோன்றுகின்றன; இப்போதல்லவா எனக்குத் துன்பம் மூண்டுவிட்டது. நாள்முற்றும் படித்துப் படித்துக் கூறினும் அந்த முரட்டுச் சனியனின் மதியில் சிறிதும் ஏறுவதில்லையே! விடாத பிடிவாதமும் அசட்டுத்தனமான பேச்சும் முரட்டுத்தனமும், கண்ணியமற்ற அதிகாரமும், அடங்காத குணமும் ஒன்றுகூடிக் காண்போருக்கும், தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் வெறுப்பும், ஏச்சுக்கும் பேச்சுக்கும் இடமுமாகின்றதே! இந்தத் துக்கத்திற்கு என்ன செய்வேன்? ஐயோ! இரண்டு குழந்தைகளைப் பெற்றும் அவைகளால் நாம் சந்தோஷமடையவில்லையே!'' என்று தினந்தோறும் சிந்தித்து வருந்துவார். அதே ஏக்கத்தினுல் மனந்தளர்ந்து உடல் மெலிந்து மிகவும் பலஹீனமாகிவிட்டார். அவர் சுலோசனுவை அழைத்து அநேக புத்திமதிகள் சொல்லி "உன் தாயாரின் நடத்தையைப் பின்பற்றுதே! ஜானகி அம்மாவின்

சில மதிகெட்ட மருகிகள் பெரியாரின் மனமறிந்து நடக்கும் சக்தியற்று அசட்டுத்தனமாக நடப்பதால், தம் மனத்திற்கும் சுகமில்லை; பிறருக்கும் கஷ்டம்; அத்தகையவர்களை மணந்தவருக்கும் கவலை.

குணம்போல நடக்கவேண்டும்" என்று போதிப்பார். கேவலம் சிறிய குழந்தை! அதற்கு என்ன தெரியும்? அவர் சொல்வது ஒன்றும் விளங்காமல் விளையாட்டுப் புத்தியுடன் அவள் ஓடிவிடுவாள்.

இவ்வித மிருக்கையில், ராமஸ்வாமி மன நோயால் உடல் நோயும் பிடிக்கக் கடுமையாகப் படுத்து விட்டார். ஜானகி யம்மாளின் கவலை அதிகரித்துவிட்டது. அவளுடைய மனத்தில் பெருந்திகில் குடிகொண்டுவிட்டது. பேர்போன வைத்தியர்களைக் கொண்டு சிகிச்சை செய்து வந்தும் அவருடைய பிணி நீங்குவதாகத் தோன்றவில்லை. அவர் இனி நாம் பிழைக்க மாட்டோம் என்று நன்றாகத் தெரிந்துகொண்டார். ஆகையினால் தன்னுடைய ஆஸ்தியில் 25 ஆயிரம் ரூபாயை ரொக்கமாக ஜானகிக்கென்று எழுதி வைத்து அதை அவள் ஏகபோகமாக அனுபவிக்கும் படியான சாஸனத்தையும் சட்டப்படி ஏற்படுத்தி விட்டார். இது தனபாக்யத்திற்குத் தெரியாது. "ஜானகி! நான் உன்னை மணந்தும் பலவிதமான இம்சைகளுக்கு இலக்காக்கி விட்டதோடு நானும் சந்தோஷமென்பதை யறியாது விசனத்துடனேயே மடியப் போகிறேன். மூட மனைவியினால் இத்தகைய கதிதான் நேரும் என்பதை நிதர்சனமாகத் தெரிந்துகொண்டேன். என் பொருட்டாக வல்லவா நீ இத்தகைய ஹிம்சைகளை யெல்லாம் அனுபவித்தாய்? இனிமேல் நீ இந்தக் கஷ்டத்தினின்றும் நீங்கி உன் தாய் வீடு போய்ச் சேர்ந்துவிடு. அவ்வப்போது குழந்தைகளைப் பார்த்துக்கொள். குழந்தை சுலோசனாவை உனது தம்பி விமலநாதனுக்கே திருமணம் செய்யும்படியான ஏற்பாடு செய். நானும் அந்த மூதேவியிடம் சொல்கிறேன்" என்று கூறிவிட்டு, இளையாளான தனபாக்யத்தை யழைத்து "ஹே, புத்தி யில்லாத மூடமே! உன்னுடைய மதியீனத்தினாலேயே நான் மடியப் போகிறேன். உன்னால் நான் பல

வீட்டு வேலைகளைச் சரிவரச் செய்யும் வகையில்லாது பண்டங்களைப் பாழ்படுத்திப் பணத்தையும் செலவிடச்செய்துவிட்டுத் தனக்கும் நகைகள் செய்யவில்லையென்று கணவனை விரோதித்துக்கொள்ளும் மூட மங்கையர்கள் இன்னமும்; இக்காலத்திலுமிருக்கிறார்கள்.

விதத்திலும் துன்ப மனுபவித்து விட்டேன். குழந்தைகளின் முகத்தை நோக்கி இவ்விடத்தில் நான் இருக்கிறேனே யன்றி வேறு எவ்விதப் பற்றுதலும் எனக்கில்லை. குழந்தை சுலோசனு வையும் கோபிநாதனையும் உன்னுடைய துற்குணத்தையே போதித்துப் பழக்கி விடாதே! அவைகளேனும் நல்லறி வுடன் விளங்கட்டும்; என்னுடைய பெயருக்குக் கீர்த்தியைத் தேடி வைக்கட்டும்; உன் மூதேவித்தனத்தைக் காட்டாதே! ஜானகியைப் பகைத்துக் கொள்ளாதே! மகா உத்தமனும் குண பூஷணனுமாகிய விமலநாதனுக்கு என் கண்மணி சுலோசனுவை விவாகம் செய்து கொடு. இதைத் தட்டாதே! ஜாக்ரதை! உன் னுடைய மூடத்தனத்தை எண்ணி, என் குழந்தை 'மைனர்' தீரும் பரியந்தம் என் சொத்துக்களைக் காப்பதற்கு மூன்று காப்பாளிகளை (எக்ஸிகியூட்டர்) நியமித்து மரண சாஸனம் (வில்) எழுதிவிட்டேன். அதன்படித் தான் யாவும் நடக்கவேண்டும். குழந்தைகளைக் கெடுக் காதே! கெடுக்காதே! புத்தியுடன் விளங்கச் செய்'' என்று துக்கத் ராங்தராய்ப் பலதரம் கூறினர். தனது குழந்தைகளை அழைத்துக் கொஞ்சிக் குலாவி மகிழ்ந்தார். பின்னும் சில தினங்களுக்குள் இந்த இரண்டாம் மனைவியாகிய சனியனிடத்தில் இருக்க மனம் சகியாது மேல் உலகம் சென்று விட்டார்.

அந்தோ! தனது மணாளன் உயிர் நீங்கியதும் ஜானகி அவ் விசனத்தைத் தாங்க முடியாமல் கிணற்றில் விழுந்தாள். அவ்வாறு விழுந்ததை யாரோ கண்டு உடனே குதித்து அவளை எடுத்து விட்டார்கள். "ஐயோ! நாம் இன்னும் எத்தனை அனுபவங்களை அனுபவிக்கவேண்டுமோ தெரியவில்லையே! கிணற்றில் விழுந்தும் உயிர் நீங்கவில்லையே'' என்று மிகவும் வருந்தினள்; மூர்ச்சை யானள்; மனந் துடித்தாள்; முட்டிக்கொண்டாள்; என்ன செய்து தான் என்ன பயன்? ராமஸ்வாமிக்குக் கிரமமாகக் கிரியைகளெல் லாம் முடிந்தன. அதன் பின்னரும் ஜானகி சுலோசனுவையும்

அசட்டுப் பட்டத்தைப் பெற்றுவிட்ட பின்னர் அதை அழிக்க எத்தனை முயன்றாலும் அது அழிவதே இல்லை. அதேபோல சில காரியம் கெட்டு விட்டால் எத்தனை முயன்றாலும் சீர் பெறுவதே கிடையாது.

கோபிநாதனையும் விட்டுப் பிரிய மனமிசையாமல் அவ்விடத்தி லேயே இருக்க ஆசைப் பட்டாள். கணவனிருக்கையிலேயே வீட்டை விட்டு விரட்டத் துணிந்த தனபாக்யம் இனிமேல் ஜான கிக்கு இடங் கொடுப்பாளா! உடனே துரத்திவிட்டாள்.

ஜானகியின் தந்தை வந்து அவளை அழைத்துச் சென்று விட்டார். குழந்தைகளைப் பிரிய மனம் சகியாமல் கதறிக் கொண்டே சென்றாள் ஜானகி. பிறகு அவள் குழந்தையைப் பார்க் கும்பொருட்டு வந்தால், வீதிக் கதவையே திறக்காது அடைத்து விடுவாள் தனபாக்யம். இந்தக் கொடுமைக்காக அந்த வீட்டிற்குள் வராமல் எதிர் வீடு, பக்கத்து வீடு முதலிய இடத்தில் நின்று குழந்தைகளைப் பார்த்துவிட்டுப் போகலானாள். ராமஸ்வாமியால் நியமிக்கப் பட்ட காப்பாளர்கள் குழந்தைகளின் போஷணைக்காகவும் குடும்பத்திற்காகவும் கணக்காகப் பணத்தைச் செலவிட்டு குழந்தை களிருவரையும் பள்ளிக்கூடத்தில் படிக்கவைத்தார்கள்.

சுலோசனாவை விமலநாதனுக்குக் கொடுப்பதற்குத் தன பாக்யம் உயிருடன் இசைவாளா! அதற்குச் சற்றும் இடங் கொடாது அந்த இடத்தில் ஆயிரம் குற்றங்களை எடுத்துரைத்து வேறிடத்தில் தன் மகளுக்கு விவாகத்தை முடிக்கத் தீர்மானித்து விட்டாள். அப்போது சுலோசனாவுக்கு எட்டு வயதும் கோபி நாதனுக்கு நான்கு வயதும் நடந்துகொண்டிருந்தது. சுலோசனா விற்கு ஸ்வய புத்தி ஏற்பட்டு வயது வந்துவிட்டால் எங்கே தன் வார்த்தையை மறுத்து விடுகிறாளோ என்று பயந்து அந்தச் சிறிய பிராயத்திலேயே விவாகத்தை நடத்திவிடத் தீர்மானித்து விட்டாள். ஆனால் அவளுடைய அந்த யோசனைக்கு எக்ஸிகி யூடர்கள் இடங் கொடுக்காது மறுக்க வாரம்பித்தார்கள்.

அப்போது விமலநாதனுக்கு 15 வயது தான் நிரம்பி யிருந்தது. அவனும் தன் தமக்கையாகிய ஜானகி யுடன்

யந்திரங்களுக்கும் சற்று ஓய்வு கிடைக்கின்றது. மனத்திற்கோ நிமிடமும் ஓய்வென்பதேயின்றிச் சதா ஏதோ சிந்தித்துக்கொண்டே இருக்கிறது. நித்திரையிலும் ஸ்வப்பனவஸ்தை உண்டாகி விடுகின்றது.

அடிக்கடி குழந்தைகளைப் பார்க்க வருவான். சுலோசனாவின் எழில் அவனுடைய சிறிய பிராயத்திலிருந்து அவன் மனத்தைக் கவர்ந்தது. சுலோசனா பள்ளிக்கூடம் செல்கையிலும் வருகையிலும் விமலநாதன் அவளைச் சந்தித்து, அவளுக்குத் தின்பண்டங்கள் வாங்கிக் கொடுத்து அவளுடன் பேசி விளையாடி விட்டுச் செல்வான். இது தனபாக்யத்திற்குத் தெரியாது. விமலநாதன் யார் என்பதே சுலோசனாவுக்கும் தெரியாது. அவனிடத்தில் சிறு வயது முதல் பழகுவதால் குழந்தை சுபாவத்திற்குத் தின்பண்டங்கள் கொடுப்பவர்களிடம் பிரிய முண்டாவது இயல்பாகையால், இவளும் அவனிடத்தில் அத்யந்த ப்ரீதியுடன் இருந்தாள். தினந்தோறும் விமலநாதனைச் சந்தித்துத் தின்பண்டங்களை வாங்கி யுண்டு விளையாடி விட்டுப் பிறகு வீடு செல்வாள். இவ்விதமே சுலோசனாவும் இவனும் சந்தித்துக்கொண்டே வந்தார்கள்.

விமலநாதனின் தந்தையைத் திடீரென்று வெளியூருக்கு மாற்றி விட்டார்கள். அவ்வாறு மாற்றியதால் ஜானகி, விமலநாதன் முதலிய எல்லோரும் வெளியூர் செல்ல நேர்ந்து விட்டதால் அதற்கு மேல் அவர்கள் சந்திக்க ஏதுவில்லாது போய் விட்டது. விமலநாதன் சுலோசனாவைச் சந்தித்து "சுலோசனா! நான் நாளைக்கு ஊருக்குச் செல்கிறேன். ஆகையால் இனிமேல் நாம் முன்போல சந்திக்க இயலாது. நான் ;சென்று வரட்டுமா!" என்றான்.

இதைக் கேட்ட சுலோசனா, "ஏன் மாமா! ஊருக்குப் போகிறீர்கள்? எனக்கு பிஸ்கோத்தும் பெப்பர்மெண்டும் இனிமேல் கிடையாதா மாமா!" என்று குழந்தை சுபாவத்துடன் கொஞ்சிக் கேட்டாள்.

விமல:—சுலோசனா! என் பிதா வேறு ஊருக்குச் செல்லவேண்டிய அவசிய மேற்பட்டுவிட்டதால் நாங்களும் கூடச் செல்கிறோம். உனக்குப் பிஸ்கோத்து இல்லை என்று நினைக்காதே! இந்தக் கடை

சில மனிதர்கள் எப்போதும் பேப்பரும் கையுமாகவே இருக்கிறார்கள். அவர்களை விஷயங் கேட்டாலோ விழிக்கிறார்கள். இது என்ன கலியாணப் படிப்போ தெரியவில்லை.

யில் நீ தினம் வழக்கம்போல வந்து வாங்கிச் சாப்பிடு. நான் ஊரிலிருந்து பணம் அனுப்பிவிடுகிறேன். நீ வாங்கும்போது இந்தக் கணக்குப் புத்தகத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டுப் போய்விடு. நான் வரட்டுமா! என்னை மறந்துவிடுவாயா! நீ இதில் எதையும் உன் தாயாரிடம் தெரிவிக்காதே!

சுலோ:—என்ன மாமா! இப்படிக் கேட்கிறீர்கள். உங்களை நான் மறக்கவேமாட்டேன். இந்தக் கடையில் நான் பிஸ்கோத்து வாங்கிக்கொள்கிறேன். நீங்கள் சென்றுவாருங்கள்'' என்றாள். விமலநாதன் சுலோசனாவைத் தூக்கி எடுத்து முத்தமிட்டு "என் கண்மணி! சுலோசனா! நான் சென்றுவருகிறேன். நான் எப்போதேனும் ஊரிலிருந்து வந்தால் உன்னைப் பள்ளிக்கூடத்தில் வந்து சந்திக்கின்றேன்.'' என்று கூறி அன்று கொண்டுவந்த தின்பண்டங்களையெல்லாம் கொடுத்துவிட்டு, சுலோசனாவைப் பிரிய மனமில்லாமல் நீங்கிச் சென்றான். சுலோசனாவும் விமலநாதன் சென்றபிறகு தின்பண்டங்களைத் தின்றுகொண்டே வழக்கம்போல கோபிநாதனுக்கும் எடுத்துக்கொண்டு வீடு திரும்பினாள்.

சுலோசனா விமலநாதன் தெரிவித்ததுபோலத் தினந்தோறும் அந்தக் கடைக்குச் சென்று தின்பண்டங்களைத் தின்றுவிட்டுத் தம்பிக்கும் கொடுப்பது வழக்கம். விமலநாதன் கடைக்குத் தொகை செலுத்திவந்தான். தனபாக்யத்திற்குப் பித்தகாச நோய் திடீரென்று உண்டாகி அதுபீடிக்கவாரம்பித்துச் சில மாதங்களுக்குள், வலுத்துவிட்டது. இதையே ஒரு சாக்காகக்கொண்டு, தன் மகளுக்கு உடனே விவாகத்தை முடித்துவிடவேண்டும் என்று எக்ஸிகியூட்டர்களைத் தொந்தரவு செய்ததால், அவர்கள் "ஒருகால் இவள் இறந்துவிடுவாளோ; என்னவோ; ஆகையினால் இவள் ஆசையைப் பூர்த்தி செய்வோம்'' என்று இசைந்து, விமலநாதனுக்கு சுலோசனாவை ராமஸ்வாமி கன்னிகாதானம் செய்துகொடுக்கும்படி இறக்கு

கணவன் முகங் கோணாது நடக்கும் உத்தமிகளைக் கண்டால் பதிபக்தியற்றப் பாவைகளுக்கும் தானாகவே பக்தி யுண்டாகி விடுகிறது. இக்காலத்து நவ நாகரிக நங்கையர்கள் மேற்குறித்தவர்களைக் கண்டால் நகைத்துப் பரிகஸிக்கின்றார்கள். இது கலியின் கூற்று.

முன் கூறிய வார்த்தைகளைப் பிரஸ்தாபித்தார்கள். அதற்குத் தன பாக்யம் ஏற்கெனவே தயார் செய்திருந்தபடி அநேக அவதூறுக ளைக் கூறி, மேலும் அவனுக்கும் இவளுக்கும் பொருத்தமில்லை. நல்ல சகுனங்களுமாகவில்லை யென்று ஒரே பிடிவாதமாக மறுத்து நாட்டுப்புறத்திலிருக்கும் தனது சிறிய தாயின் குமாரன் ஒரு வனுக்குக் கொடுக்கவேண்டுமென்று ஒரு காலால் நின்றாள்.

பெற்றதாயின் வார்த்தைக்கு விரோதமாகச் செய்யமாட்டா மல் அதற்கு இசைந்தார்கள். தனபாக்யம்மாள் உடனே பையனை வர வழைத்து விவாகத்திற்குச் சகல ஏற்பாடுகளையும் செய்துவிட்டாள். இதைக்கண்ட சுலோசனா தன் தாயை நோக்கி "அப்பா யாரையோ! சொன்னாரே! அவரை ஏன் மணக்கலாகாது?" என்று கேட்டதற்கு அநேக ஆசை வார்த்தைகள் கூறிக் குழந்தையை மணக்கச் சம்ம திக்கும்படியாகச் செய்துவிட்டாள். இந்தச் செய்தி ஜானகிக்குத் தெரிந்தால் கல்யாணத்தைக் கலைத்துவிடுவாள் என்று பயந்து, ஒரு வருக்கும் சொல்லாது கல்யாணத்தை ரகசியமாக முகூர்த்தம் வைத்து நடத்திவிட்டாள்.

வெளியூரிலிருக்கும் பந்துக்களுக்கு இந்த விஷயமே தெரி யாதுபோய்விட்டது. பெப்பர்மெண்டு கடைக்காரன் பணத்திற் காக விமலநாதனுக்குக் கடிதம் எழுதும்போது "பெப்பர்மெண்டு வாங்கும் குழந்தைக்கு இன்று கல்யாணம் நடந்தது. அதற்கு நீங்கள் வருவீர்கள்; நேரில் பணம் வாங்கிக்கொள்ளலாம்" என்று எண்ணினேன். அதற்கு நீங்கள் வரவில்லையென்று தெரிந்ததால் இக்கடிதம் எழுதநேரிட்டது'' என்று குறிப்பிட்டிருந்தான்.

இந்தக் கடிதத்தைக் கண்டதும் விமலநாதன் திடுக்கிட் டுப்போனான். 'இது உண்மையாக இருக்குமா!' என்று ப்ரமித்தான். உடனே தமக்கையிடம் ஓடி விஷயத்தைத் தெரிவித்தான். இதைக் கேட்டதும் ஜானகியும் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து இதன் உண்

'சேரிடம் அறிந்துச் சேர்' என்கிற மூதுரைக்கு—சேர் இடை மருந்து சேர்—என்று ஒரு வித்வான் அர்த்தம் செய்தாராம்.

மையை நேரிற் கண்டறியவேண்டுமென்று தீர்மானித்து அன்றே புறப்பட்டு விமலநாதனையும் அழைத்துக்கொண்டு ஊருக்கு பிரயாணமாகி, அன்று பிற்பகலில் சென்றடைந்தார்கள். ஜானகி வழக்கம்போல எதிர் வீட்டிற்கு வந்து விசாரித்ததில் கல்யாணமாய்விட்டது உண்மைதான் என்பது நிச்சயமாகத் தெரிந்தது. விமலநாதனுக்குத் துக்கம் பொங்கிவிட்டது. சுலோசனுவைத் தான் மணக்க வேண்டுமென்று நெடுநாளாக எண்ணியதற்கு விரோதமாக "காத்திருந்தவன் பெண்ணை நேற்றுவந்தவன் கொண்டுபோன கதையாக, அவளை வேறு ஒருவன் மணந்துவிட்டதானது அவனுக்குத் தாங்க முடியாத துக்கத்தை உண்டுபண்ணிவிட்டது. அவன் தன் தமக்கையுடன் எதிர் வீட்டிலேயே இருந்தான்.

விமலநாதன் இன்னுரென்பதே சுலோசனுவுக்குத் தெரியாது. சுலோசனு அகஸ்மாத்தாக வீதியில் வந்தாள். அவ்வாறு வந்தவள் எதிர்வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த விமலநாதனைக் கண்டு ஆச்சரியமடைந்து அங்கு ஓடி, விமலநாதனின் கரத்தைப்பற்றிக்கொண்டு "மாமா! எனக்குக் கல்யாணமாயிற்றே. என் கல்யாணத்திற்கு நீங்களேன் வரவில்லை? இன்று வந்தீர்களே! எங்கள் வீட்டிற்கு வாருங்கள்". என்று பலவந்தமாக அழைத்தாள். அப்போது கோபிநாதனும் அங்கு ஓடிவந்து விமலநாதனை இன்னொரு கையைப் பிடித்துக்கொண்டு இழுத்தான்.

விமலநாதனுக்கோ துக்கம் தொண்டையை அடைக்கின்றது. சுலோசனு கல்யாணக்கோலத்துடன் இருப்பது வெகு அழகாக இருந்தது. இப்படிக் குழந்தைகள் இங்கு நிற்கையில் தனபாக்யம் ஏதோ அவசரமாக வெளியே சென்றுள். அதைக்கண்ட விமலநாதன் அக்குழந்தைகளுடன் அவர்கள் வீட்டிற்குச் சென்றுன். சுலோசனு ஏதேதோ தின்பண்டங்களைக் கொணர்ந்து விமலநாதனிடம் கொடுத்தாள். அவைகளை அவன் வாங்கிக்கொண்டு உடனே எழுந்து வந்துவிட்டான். பிறகு அன்றிரவே ஜானகியுடன் ஊருக்குத் திரும்பிப்போய்விட்டான்.

சிறு குழந்தைகள் நவ நவமாக விளையாடுவதையும் அர்த்த மில்லாது தன் போக்காகக் கூச்சலிட்டு கத்துவதையும் கவனிக்கையில் மனதிற்குத் தாளுகவே ஓர் உற்சாகமும் மகிழ்ச்சியும் உண்டாகின்றது.

சுலோசனுவை மணந்த மாப்பிள்ளை ஓர் நாட்டுப்புறத் தானுகையால் அவன் சுலோசனு பள்ளிக்கூடம் செல்வதைக் கண்டித்து "அடுப்பங்கரைப் பெண்ணுக்குப் படிப்பெதற்கு" என்றும், படித்தால் கெட்டுவிடுவாளென்றும் கூறியதால் கல்யாணமான உடனே சுலோசனு பள்ளிக்குச் செல்வதை அவள் தாயார் நிறுத்திவிட்டாள். சுலோசனுவுக்குப் படிப்பதிலேயே பிரியம் அதிகம்; தாயாரிடத்தில் பயமாகையினல் பேசாதிருந்துவிட்டாள். படிப்பை நிறுத்தியபின் அவளுக்குப் பொழுதே போவதில்லை. இவ்விதம் சில தினங்களாயின. ஒரு தினம் திடீரென்று 'மாப்பிள்ளை இறந்துவிட்டான்' என்று தனபாக்யத்திற்குத் தந்தி கிடைத்தது. உடனே அவள் அலறியடித்து முட்டி மோதிக்கொண்டு சுலோசனுவையும் அழைத்துக்கொண்டு அவன் இறந்த ஊருக்குச் சென்று கர்மாதி கிரியைகளை முடித்துவிட்டு ஊர் திரும்பினுள்.

அப்போது சுலோசனுவுக்கு சிறு வயதாகையினல் கணவனை இழந்த துக்கம் அவளுக்குச் சிறிதும் தெரியாமலிருந்தது. தன் தாயார் ஏதோ என்னவோ முன் வழக்கம் போல் அழுகிருள் என்று எண்ணி பிருந்துவிட்டாள். இச் செய்தியைக் கேட்ட ஜானகியும் விமலநாதனும் நெருப்பிடை பகப்பட்ட புழுவைப் போலத் துடித்துப் போனுர்கள். அநியாயமாய் ஒரு குழந்தையைப் பாழ்படுத்தி விட்டாளே' என்று துக்க சாகரத்தி லழுந்தியவர்களாய் சுலோசனுவின் வீட்டிற்கு வந்து துக்கம் தீரக் கதறி யழுதுவிட்டுப் போய் விட்டார்கள்.

சுலோசனுவை வீட்டை விட்டு வெளியே செல்ல விடாமல் தனபாக்யம் வீட்டினுள்ளேயே அடைத்து வைத்திருந்தாள். நாட்கள் சென்று, மாதங்கள் கழிந்து, வருடங்களுமாகி விட்டன. சுலோசனுவுக்கு வயது ஏற ஏறத் தான் நாதனற்றவள் என்பதையும்

மனத்தில் ஒரு கோபத்தை வைத்துக்கொண்டு மேலுக்கு எல்லோரிடத்திலும் முகத்தாலடித்துத் துடுக்காகப்பேசிவிடுகிருர்கள் சிலர். அந்த சிலரிடத்தில் சில நிமிடங்கூடப் பிறர் இருப்பதற்கு இயலவே இயலாது.

அவன் இறந்த விருத்தாந்தத்தையும், தனக்கு 'விதவை' பட்டம் வந்துவிட்டதென்றும், கூடவிருந்தவர்கள் பேசிக்கொள்வதிலிருந்து ஊகித்துத் தெரிந்துகொண்டாள். தனபாக்பத்திற்கும் அதே வேதனையினால் தேகப்பிணி அதிகரித்துவிட்டது. ஜானகியும் தன் உயிருக்குயிராக இருந்த சுலோசனாவின் தலைவிதியையும் அவளுக்கு வந்துவிட்ட தீராத துக்கத்தையும் கண்டு மனம் சகிக்காமல் அதே ஏக்கத்தினாலும் வியாகூலத்தினாலும் சில மாதங்களுக்குள் நோய் கண்டு படுத்துப் பின்னும் கொஞ்ச நாளில் தன்னுதனின் இருப்பிடத்தை நாடித் தானும் சென்றுவிட்டாள். விமலநாதனின் வருத்தத்திற்கு அளவே இல்லை.

சுலோசனா தனது தலைவிதியின் கொடுமை நன்றாகத் தெரிய வாரம்பித்த நாள்முதல் துக்கக் கடலில் மூழ்கியவளாய் கண்ணீர் சிந்திய வண்ணமிருந்தாள். அவ்விதம் அழுவதால் பலக்குறைவு பட்டுத் திடீர் திடீரென்று அடிக்கடி மயக்கம் வர ஆரம்பித்தது. தனபாக்பத்தின் தேக நிலையும் மிகக் கேவலமாக பாயும் படுக்கையுமாகிவிட்டது. தான் முன்நாளில் செய்த அக்ரமங்களெல்லாம் தோன்றி அவளை வதைத்தன. அந்தக் கொடுமைதான் தன் மகள் தலையில் வந்து விடிந்தது என்று வருந்தினாள். அதே வேதனையினால் அவளும் இவ்வுலகத்தாரிடம் செலவு பெற்றுக் கொண்டாள். அந்தோ! பறக்கும் சக்தி யற்ற இரு பறவைகளைப் போல ஆதரிப்பாரற்று அநாதையாக நின்ற சுலோசனாவின் கதியைப் பற்றியும்—குழந்தை கோபிநாதனின் கதியைக் குறித்தும் கூறவேண்டுமா! திக்கற்ற பரதேசிகளாகி விட்டார்கள். எக்ஸிகியூடரின் பாதுகாப்பிலிருந்து வருகிறார்கள். சுலோசனாவின் வயது கொடிய விஷம் போல ஏறி 11 ஆகிவிட்டது. அவளுக்கு நல்ல பகுத்தறிவு உண்டாகிவிட்டது. அவள் தன்னுடைய பிறவி அடியோடு பாழாகி விட்டதை எண்ணி யுணர்ந்து நொந்து சதா புலம்புவாளானாள்.

ஒருவர் போகிற வழியில் ஒருவர் போகாமல் முரண்டுகொள்ளுகிற சம்சாரத்தில் உள்ளவர்களுக்கு சதா மனக்லேசந்தான். அவர்கள் படும் பாட்டைக் கூறவியலாது.

சுலோசனாவுக்கு நல்லறிவுள்ள இரு சினேகிதைகள் உண்டு. அவர்கள் சுலோசனாவுக்குப் பலவித தேறுதல்கள் கூறித் தாங்களே முயன்று சிபார்சு பெற்று அவளைப் பெண்கள் கலாசாலையில் சேர்த்தார்கள். மகா புத்திசாலியான சுலோசனா கல்வி கற்க ஆரம்பித்ததும் வெகு விரைவில் படித்து மேன்மையடைந்து வந்தாள். அவள் தனக்கு ஆதியில் அன்புடன் தின்பண்டங்களை வாங்கிக் கொடுத்த உருவத்தை ஒரு சிறிதும் மறக்காமல் நினைத்துக் கொண்டேயிருந்தாள். அவளுக்கு நன்றாக விவரம் தெரிந்த பிறகு, விமலநாதனைச் சந்திக்கவே இல்லை. கடையில் பெப்பர்மெண்டு வாங்குவதையும் விட்டு நாளாயிற்று. அவ் வுருவத்தை நினைக்குந்தோறும் சுலோசனாவுக்கு அப் பழங் காலத்து நினைவுகளெல்லாம் தோன்றிக் கனவு போன்று மறைந்து விடும். அவனை நேரிற் காணாமல், உருவத்தை மனத்தில் எண்ணிச் சிந்திக்கும் போதே அவள் ஒருவிதமான மாறுதலையடைந்து அந்த மாற்றத்தின் காரண மறியாது, அதை வெளியிடவும் மாட்டாது மனதிற் குள்ளேயே வைத்திருந்தாள்.

கோபிநாதனுக்கு 11 வயதும் சுலோசனாவுக்கு 15 வயதும் ஆயிற்று. அந்தக் காலத்தில்தான் நமது கதை ஆரம்பமாயிற்று. சுலோசனா, தன் தம்பி கூறிய வார்த்தைகளைக் கேட்டு மனக்லேச மடைந்து அதை வெளியிடாமல் தன் தம்பியை அழைத்துக் கொண்டு தோட்டத்திலிருந்து வீட்டிற்கு வந்தாள். அன்று முற்றும் ஏதேதோ சிந்தையோடு இரவைக் கழித்து விட்டு மறுநாள் இருவரும் கலாசாலைக்குச் சென்றார்கள்; மாலை நேரத்தில் சுலோசனா வீடு திரும்பி வந்ததும் தன் மேஜையின் மீது ஒரு கடிதம் வைத்திருக்கக் கண்டு அதைப் பிரித்துப் படித்தாள். படித்தது தான் தாமதம். அப்படியே அவள் மூர்ச்சையடைந்து சாய்ந்துவிட்டாள்.

எந்த திக்கை நோக்கினாலும் எம்பெருமானின் தோற்றமே தெரிகிறதென்கிறார் ஓர் யோகீச்வரர். எந்த திக்கிலும் ஸ்திரீகளின் உருவமே தெரிகிறதென்கிறான் காமுகன். எந்த திக்கிலும் [illegible] தென்படுகின்றது என்கிறான் வாயாடி வம்பன், அவனவனுக்கு அவனவன் புத்தி யோசனைகள்.

216566.

3—வது அதிகாரம்

நாதனற்ற நங்கையின் நாதியற்ற தன்மை

தோட்டத்தில் கோபிநாதனைக் கண்டு பேசி விட்டுச் சென்ற விமலநாதன், அங்கு அவனோடு வந்திருந்த சிநேகிதர்களுடன் போய் விட்டான். அவன் கோபிநாதனைக் கண்டதும் பழங் காலத்து வர்த்தமானங்களெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாய் நினைவிற்கு வந்தன. தான் சுலோசனாவுடன் தனித்துப் பேசியதும், தின்பண்டங்களை அன்புடன் அளித்ததும் அப்போதே நிகழ்வன போன்ற தோற்ற முண்டாகியது. அவ்வாறு உண்டாகிய தோற்றத்தினால் சுலோசனா தன் கண்ணெதிரில் நிற்பது போலவே தோன்றுகின்றது. அவளைக் காண்பது போலான தோற்றத்தினால் மிகுந்த சந்தோஷமும் தன்னையறியாத ஆநந்தமும் பொங்கி எழ அதே நினைவுடன் இரவைக் கழித்தான்.

மங்களகரமான உதயமாயிற்று. எங்கும் பக்ஷிகளின் இனிமையான தொனிகள் வெகு ரமணீயமாக ஒலிக்கின்றன. எல்லா வீடுகளிலும் வீதியில் சாணமிட்டு அழகிய கோலங்களை சுந்தரவதிகள் போடுகிறார்கள். பால்காரர்கள் தமது அழகிய பசுக்களையும், கன்றுகளையும்—சிலர் வைக்கோல் அடைத்தச் சவத்தையும்—கொணர்ந்து பால் கரந்து வார்ப்பதும், சில வீடுகளிலுள்ள கிழவர்கள் பகவன்னாமத்தை ஸ்மரித்து ச்லோகம் பாடுவதும், சில பெண்மணிகள் உதய ராகம் பாடுவதும், தொழிலாளர்கள் தமது தொழிலை எண்ணி விரைவாகச் செல்வதும், வீட்டுப் பணி செய்

எந்த வீட்டிலும் பல மனிதர்கள் இருக்கிறார்கள். யாரைப் பார்த்தாலும் ஏதோ ஒரு வேலையில் இருக்கின்றார்கள். வேலையற்று வீற்றிருப்பவர்களும் கையில் பேப்பரோ, புத்தகமோ வைத்திருக்கிறார்கள்.

யும் மாதர்கள் கும்பல் கும்பலாகச் செல்வதும், காலையில் கால் நடைக்காகச் செல்வோரும், கோயில் ப்ரதக்ஷணத்திற்காகச் செல்வோரும் குளத்திற்கு நீராடச் செல்வோரும், புஷ்பத் தோட்டங்களிலிருந்து புஷ்பங்களைப் பறித்துக்கொண்டு செல்வோரும், சங்கீதம் கற்கும் சிறுமிகள் அதிகாலையில் உட்கார்ந்து அப்பாசம் செய்வதும், சங்கீதக் கருவிகளை வாசித்துப் பழகுவோரும், பாடங்களைப் படிப்போரும், ப்ராதக்காலப் பூஜைகளைச் செய்வோரும், சிறிய குழந்தைகளின் விளையாட்டுகளும், கரி காய்கள் விற்போரும், தயிர் விற்போரும், இன்னும் இதுபோன்ற எத்தனையோ விதமான கோலாகலங்கள் நடக்கின்றன.

அத்தகைய அருமையான—அழகான—காலை வேளையில் நமது விமலநாதன் (மார்னிங்கு வாக்கு) கால் நடையாக நடந்து வீதிதோறும் மேற்குறித்த வைபவங்களைக் கண்டு களித்தவாறு நடக்கின்றான். லக்ஷ்மீகரமான காலை நேரத்தின் அழகையும், அவ்வியற்கையின் அற்புதங்களையும் கண்டு களித்து மன உல்லாசத்துடன் செல்கையில் நன்றாக உதயமாகி எங்கும் ப்ரகாசம் நிரம்பிவிட்டது. விமலநாதன் கால் நடையாகச் சென்று அருகிலிருந்த ஓர் சிங்கார வனத்திற்குள் நுழைந்தான். அதைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு அங்கு அமைக்கப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்தான். அவன் அமர்ந்திருந்த இடத்திற்கு எதிர் முகமாக ஒரு வரிசை நிறைந்த ரோஜாச் செடிகளில் ரோஜா மலர் புஷ்பித்திருந்த காக்ஷியானது அவன் மனத்தைப் பரவச முறச் செய்தது. மீண்டும் எழுந்து அந்த செடியின் அருகில் சென்று அந்தப் புஷ்பத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். சிவந்திருக்கும் அழகிய நிறமும் மிருதுவான தன்மையும், அபாரமான பரிமளமும், கண் கொள்ளா வனப்பும் விமலநாதனை முற்றிலும் கவர்ந்துவிட்டன. "இந்த ரோஜா மலரின் நிறத்தையே சுலோசனாவின் அழகிய இதழ்

மாமி நாத்திகள் கொடுமை செய்கிறார்களென்று கணவனிடம் மனைவி முறையிடுகிறாள். மருகி தன்னை அலக்ஷ்யம் செய்கிறாள் என்று மகனிடம் மாதா கூறுகிறாள். இரு பக்கமும் உதை வாங்கும் மத்தளம் போன்ற புருடனின் கதிதான் என்னவோ!

கொண்டிருந்ததல்லவா! இதன் மிருதுத் தன்மையைப் போல அவளுடைய தேகமும் இருந்ததல்லவா! இதன் பரிமளத்தைப் போல அவளுடைய நற்குணம் விளங்குகின்றது. இதன் அழகைப் போல அவளுடைய அபாரமான அழகு பொலிகின்றது. உம்! எது இருந்து என்ன உபயோகம்! காட்டில் பூத்த மலர் போலவும், மண மில்லாத மலர் போலவும் அவள் கதியாகிவிட்டது. ஐயோ! இன்னும் அவளுக்குப் பதினாறு வயது நிரம்பவில்லை. இதற்குள் அவளுடைய பிறவியே பாழ் பட்டுவிட்டதே! என்ன கொடுமை! என்ன அநியாயம்! சேச்சே! உலகத்தில் இவ்விதமான அக்ரமமே எங்கும் மிஞ்சிவிட்டதே! கலியின் கூற்று என்பதில் இதுவும் ஒன்றாக இருக்கும் போலும். சுலோசனாவைப் பார்க்க வேண்டு மென்கிற அவாவும் இருக்கின்றது. அவளுக்கு நம்முடைய நினை விருக்கின்றதோ, இல்லையோ! அவளுடைய விவாக காலத்தில் தான் நாம் கடைசியாகக் கண்டது. அக்காலம் சென்று இத்தனை வருடங்களாய் விட்டனவே! இப்போது அவளுடைய விசனகர மான நிலைமையில் நம்முடைய நினை விருப்பது சந்தேகந் தான்........ எதற்கும் இப்படிச் செய்து பார்ப்போம்.'' என்று தனக்குள் ஒரு தீர்மானத்தைச் செய்துகொண்டு உடனே அங்குள்ள ஆசனத்தில் அமர்ந்து ஒரு கடித மெழுதினான். அதைத் தன் சட்டைப் பைக் குள்ளேயே வைத்துக்கொண்டு அந்த தோட்டத்தை முற்றும் சுற்றி பார்த்தான். அங்குள்ள வனப்புகளை எல்லாம் கண்ணுற்று மகிழ்ந்தான். வெகு நேரம் அவ்விடத்திலேயே சுற்றி பார்த்து விட்டுப் பின் தான் இறங்கி இருந்த வீட்டிற்குச் சென்று போஜனத்தை முடித்துக்கொண்டு படுத்துவிட்டான்.

பிறகு பிற்பகல் எழுந்து சுலோசனாவின் வீட்டுப் பக்கமாகச் சென்றான். அப்போது சுலோசனாவும் கோபிநாதனும் பள்ளிக்குச் சென்றிருந்தமையால் விமலநாதன் வீதிப் பக்க மிருந்த ஜன்னலின் வழியால் உள்ளே கவனித்தான். அங்கு புடவைகள். ரவிக்கைகள்

உள்ளூருக்குள் இருக்கையில் சிநேகிதரைக் கண்டு பேசும் இன்பத்தை விட வெளியூருக்குச் சென்றுவிட்டால் மனம் அவர்களையே அவாவி நிற்கின்றது.

முதலியன இருக்கக் கண்டு இது தான் சுலோசனுவின் அறையாக விருக்குமென்று எண்ணி தான் ஏற்கெனவே எழுதி இருந்த கடிதத்தை அங்குள்ள மேஜையின் மீது வீசி எறிந்து விட்டுப் போய்விட்டான்.

நாம் முன்னதிகாரத்தின் இறுதியில் தெரிவித்தபடி சுலோசனு படித்த கடிதம் இதுவே என்பதை வாசகர்களுக்கு நினைப் பூட்டு கிரும். நமது மங்கையர்க்கரசியாகிய சுலோசனு அங்குள்ள கடிதத்தை எடுத்து இரண்டு வரி படித்ததுமே மனம் தாங்காத சோகத்தினுல் விழுந்துவிட்டாள். அவ்வாறு விழுந்தவள் மறுபடி சிறிது நேரத்திற்குப் பின் தெளிந்து எழுந்து மீண்டும் அக் கடிதத்தை முதலிலிருந்து படிக்கத் தொடங்கினுள். அது பின் வருமாறு:—

மாது சிரோன்மணி சுலோசனு அம்மாள் அவர்களுக்கு விமலநாதன் எழுதியது. இக் கடிதம் எழுதும் யான் இன்னுன் என்று உனக்குத் தெரியாது மறந்திருக்கலாமோ என்று சந்தேகிக்கின்றேன். உனது பால்ய காலத்தில் உனக்குத் தின்பண்டங்களை வாங்கிக் கொடுத்ததும், நீ அவற்றை ஆவலோடு தின்றதும், பிறகு உனது கல்யாண காலத்தில் நீ என்னை உன் எதிர் வீட்டுத் திண்ணையில் கண்டு அழைத்துச் சென்று பலகார மளித்ததும் ஆக எல்லாம் உனக்கு நினை விருக்கலாம். அதன் பிறகு உன் பர்த்தா இறந்த காலத்தில் உன்னைக்காண வந்தேன். ஆனுல் உன்னைப் பார்க்கும் பாக்கியம் பெற்றிலேன். அந்தப் பாவியே யான். நேற்று உனது தம்பியை சிங்கார வனத்தில் கண்டு பேசியதை அவன் தெரிவித்திருப்பான். உன்னையும் பார்க்க வேண்டு மென்ற அவா தூண்டுவதால் நான் உன் வீட்டிற்கு வரலாகுமா, கூடாதா! என்பதைத் தெரிந்துகொள்ளும் பொருட்டாக இதை

சில குடும்பங்களில் 10 பேர்கள் ஓடி சம்பாதித்தாலும் கடன் தீருவதில்லை. குடும்பக் கஷ்டமும் நிவர்த்தியாவதில்லை. அப்படியே சில குடும்பங்களில் 10 பெண் பிள்ளைகள் வேலை செய்தாலும் ஒருவருக்கேனும் வேலை ஓய்ந்தபாடில்லை.

எழுதுகிறேன். வித்யாசமாக எண்ணுதே! நான் கேற்றிருந்த இடத்திலேயே இன்று மாலையிலும் இருப்பேன். நான் வரலாமா என்பதை கோபிநாதனிடத்தில் தெரிவிக்கவும்.

இங்ஙனம்
விமலநாதன்.

அதைப் படித்ததும் ஒன்றுமே தோன்ருதவளாய் சாய்மான நாற்காலியில் சாய்ந்துவிட்டாள். ஆதி காலத்திய நினைவுகள் அவள் மனத்தில் ஒன்றன் பின் ஒன்ருகத் தோன்றலாயின. நமக்கு தின்பண்டங்களை வாங்கிக் கொடுத்தவரைக் கடைசியாகக் கலியாண காலத்தில் கண்டோமா! என் கல்யாண மென்பது எனக்குச் சிறிதும் நினைவில்லையே! அவருக்குப் பலகாரங்கள் கொடுத்தது நினை விருக்கிறது. அப்போதா நமக்குக் கல்யாணம். நமக்கு ஏன் அப்போது கல்யாணம் செய்தார்கள். இவ்வித கதியை அடைவதற்காகவா கல்யாணத்தைச் செய்தார்கள். அவ்விதம் செய்ததா கல்யாணம்! அந்த ஒரு கனவு கண்டது போலான விஷயத்திலா என் பிறவி பாழாகி விட்டது. கல்யாணம் என்ருல் கூட ஓர் ஆண் மகன் உட்கார்ந்தான். பிறகு இறந்து விட்டான் என்ருர்களே! அவன் யார்? அவன் இறந்தால் நமக்கென்ன காரணத்தினுல் இவ்வித சிறுமை உண்டாகிவிட்டது. இதற்கு அர்த்தமே தெரியவில்லையே! இனிமேல் நமக்கு இப்பிரபஞ்சத்தில் ஒன்றுமே கிடையாதாம். நாம் இப்படியே இருந்து மடியவேண்டுமாம் என்று என்னைக் காண்போர் கூறுகின்ருர்களே! இவைகளெல்லாம் என்ன வேடிக்கை. அந்த மனிதனின் முகங் கூட எனக்குச் சரியாகத் தெரியாதே! அப்படி இருக்க அவன் இறந்தால் நான் ஏன் புஷ்பமணியலாகாது. கல்யாண வீட்டிற்குச் செல்லலாகாது. இவ்விதம் ஏன் சொல்கிருய் என்று நான் எனது சிறிய பிராயத்தில் என் தாயாரைக் கேட்ட கேள்விகளெல்லாம் இப்போது எனக்கு நினைவிற்கு வருகின்றனவே! அந்த காலத்தில் அறியாமலிருந்த யாவும்

நமக்கு மிகவும் வேண்டியவர்கள் நம்மை விட்டு ஊருக்குப் போய் விட்டால் அப்போ தடையும் வருத்தத்தைக் கூறத் தாமன்று. அன்று முற்றும் ஏதோ பித்தம் பிடித்தது போல விருக்கிறது.

போது நன்கு விளங்கிவிட்டனவே! முகமறியாத ஒருவனை வலிய இழுத்து அருகில் அமரச் செய்துவிட்டுப் பிறகு சிலதினங்களுக்குள் உனக்கு எல்லாம் தீர்ந்துவிட்டதென்று கூசாமல் கூறிவிட்டார்களே! என்ன அநியாயம்! இந்த வயிற்றெரிச்சலை எத்தனை தரம் நினைத்துப் பார்த்தாலும் என் மனம் நிம்மதியும் அடையவில்லை. இதன் காரணமும் விளங்கவில்லையே. முகமறிந்தாலும் அறியாவிட்டாலும், பாலுண்ணுங் குழவி யானாலும், சேலை கட்டும் சிறுமியானாலும் கல்யாண மென்ற சடங்கை செய்த மறுதினமே அந்த மணமகன் இறந்துவிட்டால் அந்த மகளுக்கு எல்லாம் அற்றுவிட்டதாமே! இதென்ன உலக வழக்கம். இதென்ன அநியாயம்! இவ் வுலகத்தில் எல்லாம் அற்றுவிட்ட பாவியா நான். இனி எனக்கு கடவுளால் படைக்கப்பட்ட சிங்காரங்களிலும், ஆகந்தங்களிலும், மனோகரமான தோற்றங்களிலும், மங்களகரமான அலங்காரங்களிலும் ஒன்றுங் கிடையாதா! நான் தனித்த கட்டையா! மங்கள மற்ற பாவியா! ஐயோ! இதை நினைக்க எனக்கு பகீர் என்கின்றதே!

அஃதோ! நான் ஆதியில் உண்ட தின்பண்டங்களையும், அவற்றை எனக்களித்த அவ்வுத்தமரையும் நான் மறப்பேனா! மறந்திருப்பாயோ! என்று எழுதி யிருக்கிறாரே! அவருடைய உருவம் எனது மனத்தில் சதா வீற்றிருந்து வேலைசெய்கின்றதே! அவரை நேரில் காணுமலிருக்கையில் இத்தகைய மாறுபாட்டத்தைக் கொண்ட நான் நேற்று நேரில் கண்டதும் மூர்ச்சையாகிவிட்டேனே! எதற்கும் உபயோகமற்ற ஓர் விதவை இனி யாரைத் தான் பார்க்கவேண்டும். யாருடன் தான் பேசவேண்டும். அவைகளால் துன்பமே யன்றி இனி இன்ப மில்லை. எல்லாவற்றையும் யோசிக்கு மிடத்தில் நான் காவி வஸ்திரம் அணிய வேண்டியது தான் பாக்கி. அத்தகைய நான் இனி என்னை எவ்விதம் காத்துக்கொள்ளவேண்டுமோ அவ்விதம் காப்பதை முதலில்

சிலர் மோட்டார்காரில் போய்க்கொண்டிருக்கையில் வீதியில் ஸ்வாமி வந்தாலும் வண்டியினின்றும் இறங்கி தரிசிக்க முடிவதில்லை. அதே மனிதருக்கு ஏதேனும் ஆபத்து வந்துவிட்ட காலை "ஐயோ! கடவுளே" என்கிறார்.

கவனிக்கவேண்டும். பிறரைப்பார்ப்பானேன். பார்த்து மன வேதனை அடைவானேன். அதனால் துன்பமுற்றலைவானேன். ஒன்றும் வேண்டாம் அவரை வரவேண்டாமென்றே சொல்லி யனுப்பிவிடுவோம்'' என்று பலவிதமான யோசனைகளினால் தத்த ளித்துப் பின்னர் ஓர் கடித மெழுத உட்கார்ந்து,

"ஆதிகாலத்தில் அரும் பண்டங்களை அன்புடன் வாங்கி யளித்து ஆதரித்துதவிய பெரியவருக்கு அனேக வந்த னங்கள். இப்பாவி தங்களை ஒருபோதும் மறக்கவில்லை. தமது தின் பண்டங்கள் முற்றும் இவ்வுடலில் ஊனும் உதிரமு மாக இருக்கின்றன. இவ்வுலகத்தில் உள்ள சகலமான பாக்கி யங்களையும் இழந்துவிட்ட கொடிய பாவியாகிய என்னைப் பார்க்கத் தாங்கள் ப்ரியப்படுவதைவிட ஓர் கனவின் தோற்றத் தில் உண்டாகும் பொருள்களைக் காணலாம்; களிக்கலாம். இப் பாவியைப் பார்க்கவேண்டு மென்கிற ஆசையை அடியோடு விட்டுவிடலாம். நிர்தாக்ஷண்யமாக எழுதியதற்கு மன்னிக் கவும்.

இப்படிக்கு

சுலோசனா''

என்று எழுதி உறையிலிட்டு ஒட்டி கையில் வைத்துக்கொண்டு கோபிநாதனின் வரவை எதிர் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அப்போது கோபிநாதன் பள்ளிக்கூடத்திலிருந்து 'அக்கா!' என்று கூவிக்கொண்டே வந்தான். அவனைக் கண்ட சுலோசனா மிகுந்த களிப்பை முகத்தில் வருவித்துக்கொண்டு பேசத் தொடங்கி "என்னருமை கோபிநாத்! இத்தனை நேரம் ஏனப்பா! வா! கை கால்களை சுத்தி செய்துகொண்டு பலகாரங்களைச் சாப்பிடு'' என்று கூறினாள். உடனே கோபிநாதன் தனது பள்ளிக்கூட உடை

கடையில் சாக்கு வாங்கும்போது சாக்கு நயமாயும் சுத்தமாயும் இருக்க வேண்டு மென்று வாங்குபவன் எண்ணம். காசு தேய்ச்சலில்லாமலும் விலை நிறைய வரவேண்டுமென்றும் கடைக்காரனின் எண்ணம்.

களைக் களைந்து விட்டு தமக்கை அளித்த தின்பண்டத்தை வாங்கி யுண்டவாறு, "அக்கா! உன் முகம் ஏன் ஒருவாறு வாட்டமடைந் திருக்கிறது. உன் கண்களைப் பார்த்தால் கண்ணீர் விட்டது போல சிவந்திருக்கின்றனவே!" என்று கேட்டான்.

சுலோ:—என் கண்ணே! எனது மாறுதலைக் கேட்கவேண்டுமா! மயக்கம் வந்தது. அதனால் இவ்விதமாகி விட்டது. நீ இந்த பண்டத்தைத் தின்றுவிட்டு நாம் நேற்று சென்ற தோட்டத்திற்குச் சென்று அதே இடத்தில் நேற்று வந்த மாமா இருப்பார். அவரிடம் இதைக் கொடுத்துவிட்டு ஓடி வந்துவிடு. எனக்கு இன்று மிகவும் பலஹீனமாக இருக்கிறது. ஆகையால் நான் வரவில்லை. நீ சென்று சீக்கிரம் வா!—என்று கூறினாள். உடனே கோபிநாதன் அக் கடிதத்தை வாங்கிக்கொண்டு ஒரே ஓட்டமாக ஓடினான்.

விமலநாதன் மாலை நேரத்தில் தனக்கு என்ன விதமான பதில் கிடைக்குமோ என்று எதிர் பார்த்தபடியே அத் தோட்டத்தில் ஓராசனத்தில் வீற்றிருந்தான். மனத்தில் சொல்லவறியாத பல எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாக உதிக்கப் பெற்றவனாய் வழியை வெகு ஆவலுடன் எதிர் பார்த்திருந்தான். அப்போது அங்கு கோபிநாதன் வருவதைக் கண்டு தானே எழுந்து அவனெதிரில் சென்று "கோபிநாத்! இதோ இப்படி வா!" என்று கூறியவாறு பையனை மடக்கி நிற்கவைத்தான். உடனே கோபிநாதன் சுலோசனா அளித்த கடிதத்தை விமலநாதனுக்குக் கொடுத்துவிட்டு "நான் வருகிறேன்" என்று கூறிக்கொண்டே ஓட்ட மெடுத்தான்.

கடிதத்தை வெகு ஆவலுடன் வாங்கிப் படித்த விமலநாதனுக்கு மனத்தில் பெருந் துக்கமும், வயிற்றில் சங்கடமும் உண்டாகி

ஒரு காலத்தில் நமக்கு மிகவும் வேண்டியவர்களாய், ஈன்றோர்கள் போலவும் இருந்தவர்களை காலக் கொடுமையால் பிரிந்துப் பார்க்காமலிருக்க நேர்ந்த நாளின் துயரத்தை விட அவர்களைக் கடைசி நாளாகக் கண்டதேதி மறு வருடத்தில் வந்தபோது தன்னை யறியாமலேயே, ஆ! இன்று சரியாக ஒரு வருட மாயிற்று என் ஆப்த நண்பர்களைப் பார்த்து! என்ற துக்கம் பொங்கி விடுகின்றது.

விட்டன. அப்படியே ஓராசனத்தில் சாய்ந்தான். அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. "ஐயோ! இத்தகைய பதிலா கிடைத்தது! சுலோசனு! உன்னைப் பார்ப்பதற்கும் பஞ்சமாகிவிட்டதா! உம். இனி பார்த்து என்ன, பார்க்காவிட்டால் என்ன! நீ எழுதி இருப்பது மிகவும் சரியானதுதான். உம். உன் விதி அது; என் விதி இது" என்று நினைத்தவாறு அவ் வாசனத்திலேயே குப்புறப் படுத்து விட்டான்.

இங்கிருந்து ஓட்ட மெடுத்த கோபிநாதன் நேரே வீட்டுக்குச் செல்லாமல் தோட்டத்தின் மற்றொரு புறத்திற்குச் சென்று விட்டான். விளையாடும் பிள்ளைகளுடன் ஆடுவதிலும் வேறுவித மான பராக்கிலும் தனது தமக்கை கூறியதை அடியோடு மறந்து விட்டான். வீட்டிலிருக்கும் இளங்கொடியாகிய சுலோசனு கோபி நாதனை அனுப்பிவிட்டுப் படுத்தவள் படுத்தவளே! அவளுக்குள்ள துக்கம் ஒன்றிரண்டாயின் கூறலாம். அவளையே ஆழ்த்தி விடக் கூடிய விசனத்தில் அவள் எதை எண்ணி அழுதால் தீரும். தன்னை யறியாது கண் கலங்கியவாறு படுத்திருக்கும் சுலோசனுவின் அருகில் அவளது ப்ரிய தோழியாயும், க்ளாஸ்மேட்டாயும் இருக்கும் சரோஜனி என்ற மடந்தை நல்லாள் வந்து அவள் பக்கலில் அமர்ந்து அவளுடைய தோளைப் பிடித்துக்கொண்டு "சுலோசனு! என்ன இது அஸ்தமிக்கும் சமயத்தில் நித்திரை செய்கிருய்!" என்று கூறிக்கொண்டே அவள் தலையை ஆட்டினுள். அப்படி ஆட்டிய சமயம் சுலோசனு நித்திரை செய்யவில்லை என்று அவள் கண்ணிலிருந்து வழிந்துள்ள கண்ணீர் நன்கு கூறிற்று. அவ்வாறுண்டான கோர காக்ஷியைக் கண்டு திடுக்கிட்டவளாய் சுலோசனுவை அப்படியே அணைத்துக்கொண்டு "என்னருமைத் தோழி! சுலோசனு! சுலோசனு! இதென்ன விதி? ஏனம்மா கண்ணீர் விடுகிருய்! ஐயோ! உன்னைக் காண என் மனம் பதறு கின்றதே! திடீரென்று என்ன நேர்ந்தது? நீ கலாசாலையிலிருந்து

ஒருமனப்பட்டுப் பழகியவர்கள் பிறகு நம்மை எத்தனை விரோதிகளாக எண்ணியபோதிலும் அவர்களுடன் பழகிய காலத்து கதைகளையும், நிகழ்ந்த சம்பவங்களையும் உயிர் நீங்கும் வரையில் மறக்கக்கூடுவதில்லை.

வரும்போது நன்றாக வந்தாயே! இப்போது ஏன் இவ் விதம் புலம்புகின்றாயம்மா! எழுந்திரு! எழுந்திரு!" என்று நிரம்பவும் அனபாய்க் கூறினள்.

அப்போது சுலோசனாவின் துயரம் தாங்காமல் விக்கி மூச்சுத் திணறியது. அவளால் பேசக்கூடவில்லை. தன் சினேகிதை வந்திருப்பதைக் கண்டும் அவள் கூறிய அன்பார்ந்த மொழிகளைக் கேட்டும் மிக்க வருத்த மதிகரிக்கின்றதே யன்றி அவளுக்குப் பதில் கூற சாத்யப்படவில்லை. அத்தகைய நிலைமையில் சுலோசனா தன்னைத் தான் தேற்றியவாறு மெல்லப் பேசத்தொடங்கி "சரோஜனி! என்னுடைய துயரம் ஒன்றா, இரண்டா! நான் என்னவிதமென்றுதான் கூறுவேன்? இனி இப்பிரபஞ்சத்தில் கடவுளால் படைக்கப்பட்ட சகலமான மங்களகரத்தினின்றும் விலக்கப்பட்ட மகா கொடிய பாபியாகிய எனக்கு புலம்பாத நேரமும் உண்டோ! ஐயோ! நான் இன்று பள்ளியிலிருந்து வீடு வருகையில் அடுத்தத் தெருவில் இருவர் வீட்டிலிருந்து கீழே இறங்கினார்கள். உடனே என்னைப் பார்த்ததும் "ஐயோ! காரியம் கெட்டுவிட்டது. விதவை எதிரில் வந்துவிட்டாள். பாழாய்ப்போன இக்காலத்தில் விதவைகள் வீட்டோடு முற்காலம் போல அடைத்துக்கொண்டிருக்காமல் வெகு ஷோக்காகவும் மங்களகாமுள்ளவர்களைப்போலவும் அலங்கரித்துக்கொண்டு சிறிதும் அச்சமின்றி தமது நிலைமையை மறந்து ஒரு அடுக்குப் புத்தகத்தையும் எடுத்துக்கொண்டு, பூமியில் புரளும்படியான சேலையையும் தரித்துக் கொண்டு இழவெடுத்தப் பள்ளிக்கூடத்திற்குக் கிளம்பிவிடுகிறார்கள். காலை ஒன்பதிலிருந்து 10மணிவரையும், மாலை நான்கு மணியிலிருந்து ஐந்து மணிவரையிலும் வீதி எங்கும் ஒரே விதவைகள் தாண்டவம் புரியும் காட்சிதான் கண்முன்படுகின்றது. இத்தகைய சங்கடத்தில் சகுனம் பார்ப்பதற்கு எவ்விதம் முடியும். இந்தப் பெண் விதவை என்பது நமக்குத் தெரியுமாகையால் நாம் தியங்குகிறோம். தெரியாத அன்னியர் கண்டால் இந்த அலங்காரநாயகியை சுமங்கலி

சிலருக்குத் தமது ரகஸியங்களை சினேகிதர்களிடம் கூறுவதுபோல பெற்ற தாயாராயினும் கூச்சமின்றிச் சொல்வதற்கு முடிவதில்லை. இது கண் கண்ட அனுபவம்.

என்று எண்ணியல்லவா எதிரே செல்வார்கள். சேச்சே! என்ன அக்ரமக்காலம்" என்று என் செவியில் நன்றாக விழவேண்டுமென்கிற கருத்துடன் கூறிக்கொண்டே வீட்டினுள்ளேயே சென்றுவிட்டார்கள்.

அந்த வார்த்தையைக் கேட்டதும் என் மனம் எவ்விதம் துடித்திருக்கும் என்பதை நான் கூறவேண்டுமா! "இவ்வுலகத்தில் எல்லா விஷயத்திலும்—எல்லா மனிதர்களாலும்—சகலமான போக பாக்யத்திலும்—சர்வ மங்களத்திலும்—விலக்கப்பட்டுப் பரிகாஸம் செய்து ஏசும்படியான பாப ஜென்மாவை எடுத்துவிட்டோமே! இந்த ஜென்மத்திற்கு இனிமேல் விமோசனமும் காணுமா! மறு பிறவியும் விரைவில் கிடைக்குமா!" என்ற சோகத்தினால் மனம் நொந்து துயர மிகுந்து, வயிறு வெந்து புலம்பியபடியே படுத்துவிட்டேன். ஐயோ! எனக்கு இன்னும் 15வயது நிரம்பவில்லையே! இதற்குள்ளாகவா நான் இத்தனைப் பட்டங்களுக்கும் இலக்காகிவிட்டேன். நான் என்ன ஷோக்கு செய்துகொள்கிறேன். எனக்கு இருந்த சகலமான விலைபெற்ற ஆபரணங்களையும் இரும்புபெட்டிக்கு அலங்காரம் செய்துவிட்டேன்! சாதாரணமான இச்சேலைகளைத் தவிர நான் படாடோபமான ஆடை தரிக்கின்றேனா! இப்பொழுதும் கூந்தலை பிச்சோடா போடுவதும், சைடு வகுடு எடுப்பதும் காலில் ஸ்லிப்பர் போடுவதும் நான் தப்பிதமென்றெண்ணாமல் சகஜமாகச் செய்து வருகிறேன். அதுவும் தப்பிதம் என்றால் நான் அவைகளை இன்று முதற்கொண்டே விலக்கிவிடுகிறேன். இச்சண்டாள ஜென்மத்தை நான் ஏன் எடுத்தேன். ஐயோ! இவ்வுலகத்தில் உள்ள சகலமான வற்றிலும் கழிபட்டவள் நான்தானா! இந்த சுவர்கூட மறைவிடமாகவிருந்து மதிப்புப் பெறுகிறது. நான் எதற்கும் உபயோகமற்று பிறரால் வசைகூறி விலக்கும் கேவலமான பண்டமாகிவிட்டேனே என்பதை எண்ணியே நான் வருத்தமுறுகிறேன்" என்று நிரம்பவும் விசனத்துடன் கூறினாள்.

பரிந்துபேசி அன்பாயிருப்பவர்களுக்குத்தான் சொட்டுச்சொற்கள். தடால் புடால் என்று உள்ளொன்றும் புறமொன்றும் பேசுபவர்கள் வெகு ப்ரியவந்தர்களாகிவிடுகிறார்கள்.

இதைக்கேட்ட சரோஜனி என்கிற மாது அபாரமான விசனத்தை அடைந்து "ஹா சுலோசனு! உன்னையா கண்டு அவ்விதம் கூறினர்கள்? ஐயோ! வைதவ்யம் என்கிற காற்று உன்மீது அடித்திருப்பது உண்மையாயினும் உன் முகத்தை நோக்கினல் அத்தகைய கொடூரமான சொல்லுக்கு நீ சிறிதும் உரிமையாகியவளாக என் மனத்திற்குத் தோன்றவில்லையே! விதவை என்கிற பெயரால் உன்னைக் குறிப்பிட்டால் என் அங்கம் பதறுகின்றதே! உன்னைக் கடவுளே அபரிமிதமான அலங்காரத்துடன் பிறப்பித்து விட்டான். நீ செய்துகொள்ளும். சிங்காரம் உனக்கு எதற்கு? நீ எந்த விதமான சேலையை தரித்த போதிலும் உன்னுடைய எழிலானது கண் கொள்ளாத வெள்ளமாகி விடுகின்றது. உன்னுடைய பிச்சோடா உனது பின்னழகை பதினயிரம் மடங்கு அதிகரிக்கச் செய்கின்றது. உன்னுடைய உருவமோ எல்லாவற்றையும் தோற்கச் செய்கின்றது. நீ நடக்கும் அற்புதமோ பெண்ணுகிய நானே ப்ரமித்து விடும்படியாக இருக்கின்றது. உனது தேக அமைப்பானது கண்களையே நிலைக்க விடாது தத்தளிக்கச் செய்கின்றது. இத்தகைய அருமையானவைகளைக் கடவுள் உனக்கு அளித்திருந்தும் எல்லாவற்றையும் அநியாயமாக்கிவிட்டார். இந்த வயிற்றெரிச்சலை என்னென்பேன்? சுலோசனு! நாம் அன்று மாலையில் சுவாமி தரிசனம் செய்வதற்காக சன்னிதானத்திற்குச் சென்றிருந்தோமல்லவா! அன்று நீ காஷாயக் கலர் சேலையும் அதே கலரில் ஜாக்கெட்டும் அணிந்து பிச்சோடா போட்டுக் கொண்டிருந்தாய். நாம் சுவாமி தரிசனம் செய்யச் சென்றவிடத்தில் வந்திருந்த பாவிகளில் ஒருவரின் கண்களாவது கடவுளின் மீதில்லாது அத்தனை நேத்திரங்களும் உன் மீதே பதிந்துக் கிடந்தன. அதில் சிலர் "ஹா! இந்த மின்னலிடையாளைக் கண்டு தான் ரவிவர்மா சித்திரம் எழுதினனே!" என்றும் சிலர், "ஆகா! இந்தப் பெண்ணை மணந்தவனின் அதிர்ஷ்டந்தான் என்னவோ!" என்றும் தம் தம் போக்காகக் கூறிக்கொண்டதை நான் கேட்

நமது ஊரைவிட்டு வரும்போது உள்ள மகிழ்ச்சிக்கும் நமது ஊருக்குத் திரும்பும்போதுள்ள ஆநந்தத்திற்கும் வெகு பேதமிருக்கின்றது. நமது சொந்தமென்னும் பதத்தின் மகிமையே தனித்தது.

டேன். அதை உன்னிடம் தெரிவிக்க அஞ்சி வாளாவிருந்துவிட்டேன். இன்று நீ கூறிய வார்த்தையினால் இதுவும் வெளியாகிவிட்டது. நீயும் நானும் அனேகமாய் வெளியில் செல்லும்போதெல்லாம் நான் கவனிக்கின்றேன். உன்மீது கண் வலை வீசாதவர்களும் தன் போக்காகப் பேசாதவர்களும் கிடையாது. இவைகளை நீ அறிந்தால் வருத்தப்படுவாய் என்று அஞ்சி உன்னிடம் கூறாதிருந்தேன். பாழும் எழில் முற்றும் உன்னிடத்திலல்லவா குடி புகுந்திருக்கிறது. சுலோசனா! பிறர் கூறுகிறார்கள் என்று ஏன் சொல்லவேண்டும். பெண்களுக்கே உன்னைக் கண்டால் ப்ரமிப்பு உண்டாகிவிடுகிறது. அன்று நீ எங்கள் வீட்டு விசேஷத்திற்கு வந்திருந்தாயல்லவா! அன்று நீ உனது லேட்ரோஸ் புடவை கட்டிக்கொண்டிருந்தாய். அந்தக் கல்யாணத்திற்கு வந்திருந்த ஆண் பெண் இருபாலரும் உன்னைப் பார்ப்பதைத் தவிர வேறு வேலையில் நாட்டங் கொள்ளவில்லை. அவர்களில் சில வாலிபர்கள் உன்னை மணந்து கொள்வதற்கு இச்சித்து என் பிதாவிடத்தில் வார்த்தை யாடினார்களாம். உன்னுடைய தலை விதியை எடுத்துரைத்து வருந்தினாராம் என் பிதா. "நீ விடோ (விதந்து) வானாலும் பாதக மில்லை. நான் விவாகம் செய்துகொள்கிறேன்." என்று வாதம் செய்தார்களாம். அதற்கு என் பிதா அவள் அத்தகைய மனுஷியல்லவென்றும் இன்னும் ஏதேதோ கூறி விட்டு அவ் வார்த்தையை அம்மட்டுடன் அடக்கி விட்டார். உன்னை இவ்விதம் பாழுபடச் செய்யும் பொருட்டு அழகு வெள்ளத்தை ஒரு உருவ மாக்கிவிட்டார் கடவுள். உன்னுடைய ஒவ்வொரு எழிலையும் நோக்கின் வயிறு பற்றி எரிகின்றது. என்ன செய்வது?" என்று சரோஜனி கூறி முடிக்கு முன் சுலோசனா பேசத் தொடங்கி, "ஆ! சரோஜனீ! என் கால விதியினால் இத்தனை அநியாயங்களா நடக்கின்றன. இவ்வுலகத்தில் எழில் மிக்க ஏந்தெழிலார் எத்தனையோ பேர் இருக்கின்றனரே! அவர்களை எல்லாம் விட நான் எந்த வகையில் அழகுற்று விளங்குகிறேன். என்னை அழகென்று வருணிக்க அதைக்

ஆதிநாராயணா! அடிமலர் போற்றினன். அடியேனைக் காத்தருளுவாய் ஜோதிச்வருபனே! சுந்தராகாரனே! தூயவெண்டாமரை நாதனே!

கேட்கும்போது என் அங்கம் அனலாக எரிகின்றதே! இப் பாழும் வனப்பும், அழகும் எதற்கு? அக்கினி பகவானுக்கு இரையாவதற்காகத் தானே இன்னும் சிறந்து செழித்து வளருகின்றது. ஐயோ! நினைத்தால் என்னை யறியாத விதமான சித்திரவதை செய்கிறதே! நான் எல்லோராலும் இச்சிக்கப்பட்டு வருந்துவதற்கா பிறந்தேன்? என் பிதா எத்தனையோ தவ மியற்றி மறுமணம் செய்து கொண்டு புத்திரப் பேறை அடைந்து மகிழ வேண்டியதெல்லாம் இவ் விதமாகவா முடிந்தது! என் பிதா செய்த தவமெல்லாம் ஓர் பாப ரூபமாயும் அமங்களகரமாயும் ஒன்று கூடி இவ் வடிவுடன் வந்து ஜெனித்ததா? அடாடா! என்ன அனியாயம்! யான் இப்புவியில் பிறந்தும் ப்ரபஞ்ச விலாசங்கள் ஒன்று மறியாத பேதையாக விருக்கையில் எனக்கெல்லா வித முடிவும் தீர்ந்து விட்டதென்றும் விதவை என்றும் கூறுகின்றார்களே! இந்த வயிற்றெரிச்சலை நான் எவ்வாறு ஆற்றுவேன்? ஐயோ! வித விதமான புஷ்பங்களைப் பார்க்கும்போது அவற்றின்மீது என் மனம் தாவுகின்றதே! பாவியின் சிகை பரிமள தைலத்தையும் நறுமண புஷ்பங்களையும் அணியலாகாதாமே! இதென்ன வயிற்றெரிச்சல்! எல்லோருடைய கூந்தலைப் போலல்லவா எனது கூந்தலும் இருக்கின்றது. என் கூந்தலுக்கு மாத்திரம் ஏன் அவைகள் கூடாது என்ற ஏக்கம் என் இதயத்தை வெடித்துவிடச் செய்கின்றதே! சரோஜனீ! நான் படிக்கும் படிப்பினால் எல்லா விஷயங்களும் என்னுடைய அறிவிற்குப் புலனாகின்றன. எனினும் சிற்சில சமயத்தில் என்னை யறியாது என் மூளையே மழுங்கிப் போய் "நாம் ஏன் புஷ்ப மணியலாகாது, பொட்டணியலாகாது?" என்கிற மூட யோசனை உண்டாகி விடுகிறது. இதற்கு என்ன செய்வேன்? நான் இவ் வுலகத்தில் பிறந்தும் உலக இன்பத்தினின்றும் தள்ளப்பட்ட பாவியா! ஆகா! வைதவ்யம் என்கிற கொடிய பதத்தையும் அதற்கேற்ற கோலங்களையும் அனியாயச் செய்கைகளையும் யார் நிர்ணயித்

ஸ்ரீமந்நாராயணா! எத்த கோமும் கான ரூபமாயும், தியான ரூபமாயும் உனது நாமத்தையே உச்சரித்துக் கொண்டிருக்கும் என்னைக் கைவிடாதே! காத்தருள். உன்னருளுக்கே அடியேன் எதிர்நோக்குகின்றேன்.

தார்களோ! என்று என் மனம் தவிக்கின்றது. நான் என்ன செய் வேன்?" என்று மீண்டும் புலம்பினாள்.

இதைக் கண்ட சரோஜனி சுலோசனாவை அணைத்தவாறு பேசத் தொடங்கி, "சுலோசனா! உன் தலை விதி இவ்விதமாகி விட்டது. இதை எண்ணி இனி சிந்தித்துப் பலன் யாது. ஒன்று மில்லை. உன் மூளைக்கு படிப்பாகிய ஆகாரத்தையே ஊட்டு வதைத் தவிர இனி வேறு வழி யில்லை. வீணான எண்ணத்தில் மனத்தைச் சிதற விட்டு ஏன் வருந்தவேண்டும். உனது அபார மான புத்திசாலித் தன்மையினால் இவ் வருடம் உன்னை டபிள் ப்ரமோஷன் செய்துவிட்டார்கள். இவ்விதமே படித்துக்கொண்டு போனால் நீ அதிசீக்கிரத்திலேயே மேன்மைக்கு வந்துவிடுவாய். பிரபஞ்ச விஷயத்தைச் சிறிதும் மனத்தில் நினையாமல் மறந்து விடுவதே சாலவும் நன்று. சுலோசனா! உனக்குத் தெரியாத விஷயங்களை நான் சொல்வதாக நினைக்காதே! அவரவர் விதி வழி தான் யாவும் நடக்கும். நீ உன் மனத்தில் விதவை என்றே நினைக்காமல் நீ ஒருவிதமான பிறவி பிறந்து விட்டதாகவே எண்ணு. விளக்கு வைக்கும் நேரத்தில் நீ வருந்தாதே!" என்று கூறித் தேற்றினாள்.

பிறகு சுலோசனா எழுந்து படுத்திருந்த இடத்திலேயே உட் கார்ந்தாள். அவள் மனத்தில் அன்று தனக்கு வந்த கடிதத்தின் நினைவும், தன்னை சிலர் தூஷணையாகக் கூறியதின் துக்கமும் ஒன்று கூடி அவளை வருத்திக்கொண்டே இருந்தன. தனக்கு எவ்வளவு ஆப்தமான சிநேகிதியாயினும் தனது அந்தரங்க விஷயத்தைக் கூறாமலேயே ஒளித்துவிட்டாள். சரோஜனியும் சுலோசனாவும் இன்னும் ஏதேதோ விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்த பிறகு சரோஜனி தன் வீட்டிற்குப் போய்விட்டாள். சுலோசனாவின் மனத் துயரத்தில் அவளுக்குப் பொழுது போவதே தெரியவில்லை யாகை

அணையப்போகும் விளக்கிற்கு எப்படி ஜோதி அதிகரிக்கின்றதோ அதே போல மஞ்சள் கடிதம் (இன்ஸால்வெண்டு) கொடுப்பதற்கு முன்னர் பேர் வழியின் வீட்டு வாயலில் 10 மோட்டார்கள் நிற்கின்றன. வீட்டில் சமைக் கமலமும் சரிகைப் புடைவையுமே நிறைந்து விடுகின்றன.

பினால் அது பரியந்தம் கோபிநாதனுடைய நினைவே அவளுக்கு வரவில்லை. அகஸ்மாத்தாக மணியைப் பார்த்தாள். கோபிநாதன் வெளியில் சென்று வெகு நேரமாகிவிட்டதை அறிந்து திடுக்கிட்டு "ஐயோ! குழந்தை வெளியில் சென்று வெகு நேரமாகிவிட்டதே! இன்னும் ஏன் வரவில்லையோ, தெரியவில்லையே! உடனே வந்து விடும்படியாகக் கூறி இருக்கின்றேனே! ஒருகால் விமலநாதன் அகப்படாமல் அவனை தேடிக்கொண்டிருக்கிறானோ! நன்றாக அஸ்தமித்து விட்டதே! இத்தனை நேரம் எங்கு சென்றிருப்பான். குழந்தையைத் தனிமையில் பள்ளிக்கூடம் அனுப்புவதற்கே பயமாக இருக்கின்றது. இத்தனை நேரம் நான் எனது துயரத்தில் கவனியாது இருந்து விட்டேனே! என்ன செய்வேன்? குழந்தை இன்னும் வரவில்லையே!" என்று மிகுந்த கவலையை அடைந்து வீதியில் சென்று அவன் வரும் வழியை எதிர் பார்த்துக்கொண்டிருந்தாள்.

பொழுது ஏறிக்கொண்டே இருக்கின்றது. நன்றாக இருட்டி விட்டது. நிலவு பளிச்சென்று கிளம்பிவிட்டது. இன்னும் கோபிநாதன் வராமையினால் சுலோசனா நிரம்பவும் நடுங்கிப்போய் அவளுடைய சமயல்காரியைக்கூட துணைக்கு அழைத்துக்கொண்டு கோபிநாதன்சென்ற தோட்டத்தை நோக்கி நடக்கலானாள். கோபிநாதன்மீதே மனம் சென்று கலக்கத்தையுண்டாக்கிவிட்டது. இவளுடைய வீட்டிற்கும் தோட்டத்திற்கும் சற்று தூரமிருப்பதால் வழியில் ஓர் வண்டியமர்த்திக்கொண்டு சிறிது நேரத்திற்கெல்லாம் தோட்டத்தை அடைந்தாள்.

அத்தோட்டத்தில் எங்கு பார்த்தாலும் கும்பல் கும்பலாக ஜனங்கள் வெகு உல்லாசமாக வார்த்தையாடிக்கொண்டே வீற்றிருப்போரும், நடப்போரும், நிற்போருமாக கோலாகலக் காக்ஷியாகவிருக்கின்றது. சிறிய தம்பதிகளின் கூட்டம் கண்களைக் கவரச் செய்து மனத்திற்கு உற்சாகத்தை யளிக்கின்றது. சந்தோஷமாயும் விசாரமற்றத் தன்மையாயும் குதூகலத்துடன் சிறிய குழந்

குழந்தைகள், பெரியவர்கள், கிழவர்கள், யார் கீழே விழுந்தாலும் பார்ப்பவர்களுக்கு உடனே நகைப்பு எப்படியோ வந்துவிடுகிறது. நகைத்த பிறகு தான் "ஐயோ பாவம். அடிபட்டதா!" என்ற கேள்வி பிறக்கிறது.

தைகள் கூட்டங்கூட்டமாக விளையாடுங் காட்சியானது எத்தகைய துயரமிருந்தபோதிலும் மறந்திடச்செய்கின்றது. நக்ஷத்திரத்திற்கு ஒப்பான மின்சார விளக்குகளின் ஒளியும், பூர்ண சந்திரனின் ஜோதியும், விதவிதமான செடிகளும், மரங்களும், புஷ்பங்களும் கூடிய நந்தவனத்தின் சிறப்பை பதின்மடங்கு பெருக்கிக் காட்டின. அத்தகைய உல்லாச வனத்தின் மத்திய பாகத்தில் நாற்புறமும் செடிகொடிகளினாலேயே சுவர்போன்று படரச்செய்து அதற்கு அழகிய வேலைகளைச் செய்து ஒரு தனித்த அறைபோலாக்கி அதற்குள் கற்களினால் பெஞ்சுக்களும் சோபாக்களும் அமைத்து அதற்கு வெளி பாகத்தில் பெருத்த மரங்களை வைத்து அம்மரங்களை அவ்வறையின் மேல் கூரையைப்போலப் பரவச்செய்து அந்த அறைக்குள் பலவிதமான செடிகளை அலங்காரமாக வைத்து அழகுக்கு அழகு செய்துள்ள காட்சியைக் காண மனத்திலுண்டாகும் உற்சாதிற்கு அளவே இல்லை.

நமது மின்னற்கொடியாளாகிய சுலோசனா தனதருமைத் தம்பியை "கோபிநாத்! கோபிநாத்!" என்று கூவி அழைத்துக் கொண்டே தேடியவாறு இவ்வழியாக வந்தாள். நாம் மேற்கூறிய அலங்கார அறையினருகில் வந்து அவ்வற்புதத்தைக் கண்டு அங்கு சிறிது தங்கினாள். அவ்வறையின் உட்புறத்தில் மிகவும் எழில் வாய்ந்தவர்களாயும் இளமையுடையவர்களுமான தம்பதிகள் தம்மையே மறந்து கோலகலமாய்ப் பேசுவதும் பாடுவதும் நகைப்பதுமாக விருப்பதை அறிந்த நமது சுலோசனா தன்னையே மறந்து அவ்வறையின் வெளிப்புறத்திலேயே நின்று தான் வந்த காரியத்தையும் மறந்து அங்கு நடக்கும் காட்சிகளைப் பார்த்துக் கொண்டே நின்றுவிட்டாள். அப்போது அங்கு உள்ளிருந்தவர்களில் மனைவியைப் பாடும்படியாகக் கணவன் கேட்க அத்தருணமே மனைவி பாடத்தொடங்கி,

---

சிலர் உபயோகமற்ற பாட்டுப் பாடினாலும் அதைக் கேட்க ப்ரம்மாநந்தமாக இருக்கிறது. சிலர் தடபுடலாகப் பாட உட்கார்ந்து பல்லவி ஸ்வரத்துடன் பாடினாலும் கேட்கப் பிடிப்பதில்லை. அவரவர் செய்த புண்ணியமது.

உம்மைவிட் டொருகணம் உயிர் தரித்திருப்பேனோ!
என்னருமை நாதா!
இம்மைக்கும் மறுமைக்கும் என்னை யாதரித்திடும்
உண்மைக்காதலுடைய ஒப்பற்ற நாதனே!—உ—
நாதனில்லாநங்கை நாயினும் கடையன்றோ!
ஏதமில்வாழினும் தீதே வந்திடு மன்றோ!
மாதா பிதா மற்ற மக்களிருப்பினும்
ஆதரித்திட ஒரு நாதனுக் கிணையாமோ—உ—
சீரும் சிறப்பும் யாவும் ஆறுய்ப் பெருகிடினும்
கோரிய நாதனில்லாக் குமரியின் பிறவி பாழே!
தீராத துயர் அணுகும் மாருத சொற்கள் பிறக்கும்.
நீரைச்சொரிந்தகண்ணாய் நிலத்தில் தவித்திடுவார்—உ—

என்ற பாடலை காம்போதி ராகத்தில் (பேயாண்டிதனைக் கண்டு) என்ற மெட்டில் வெகு இனிமையாகப் பாடினாள்.

அங்கு மறைந்து நின்றுகொண்டே இப்பாடலைக் கவனித்த சுலோசனாவுக்கு அடங்காத துக்கம் தொண்டையை அடைத்துவிட்டது. அந்த பாடலின் அர்த்தமானது அவள் மனத்தை உருக்கி சித்திரவதை செய்துவிட்டது. “ஐயோ! நாதனில்லாத நங்கை நாயினும் கடையவளா! பெற்றோர், உற்றோர் யார் இருப்பினும் ஒரு நாதனுக்கு நிகர் யாரும் ஆகமாட்டார்களென்கிற கருத்தை இப்பாடல் எத்தனை அருமையாக போதிக்கின்றது.. ஹா! அத்தகைய நாதனில்லாத பாவியாக இப்புவியில் நான் ஒருத்தி இருக்கின்றேனே! நான் நாயினும் கடையவளா! நான் எத்தகைய குற்றமற்றதன்மையில் நடந்துகொண்டாலும் என்னைக் குற்றமே அணுகி நிற்குமாமே! என்ன அநியாயம்! உலகத்தில் மங்கையர்கட்கு ஒரு நாதனில்லாவிட்டால் அவர்களின் கதி அதோகதியாகிவிட்டதே! ஐயோ! இந்த பாடலிலுள்ள ஒவ்வொரு பதத்தின் அர்த்தமும் என் மனத்தைத்

குழந்தைகளின் விளையாட்டுச் சண்டையே சில சமயத்தில் தீராத பகையாய் மூண்டு விடுகின்றது. அதனால் நேரிட்ட மனஸ்தாபம் மூன்று தலைமுறை யானாலும் ஒழிவதில்லை.

துளைக்கின்றதே! பாவி பிறப்பு நான் ஏன் பிறந்தேன்? எனக் கென்று ஒரு நாதன் ஆதரிக்க இல்லாத அநாதை ஜென்மமெடுத் தேனே! ஹா! சர்வேசா! எனது பிறவியும் துயரமும் எனக்கு நாளாக ஆக அதிகமாகத் தெரிகின்றதே! நான் என்ன செய்வேன்? கேவலம் இவ்விளம் பிராயத்தில் என்னைப்போன்ற பாபிகள் உலகில் இருப்பார்களா!" என்று தனக்குள்ளேயே வருந்தியவாறு சற்று நின்றாள். அப்போது தன்து தம்பியின் நினைவு வந்துவிட்டதால் உடனே அவ்விடத்தைவிட்டு "கோபி! கோபி!" என்று அழைத்துக் கொண்டே சென்றாள். அவளுடைய பாதங்கள் மட்டும் நிலத்தில் நடக்கின்றனவேயன்றி மனதும் ஆவியும் பலவகைப்பட்டுத் தவிக் கின்றன. துவண்டு துவண்டு காற்றிலசையும் மாந்தளிர்போன்று சுலோசனை செல்கையில் அவளுக்கு வலதுபுறத்திலிருந்து "சுலோ சனை! சுலோசனை!" என்ற குரல் கேட்டதும் திடுக்கென்று சுலோசனை நின்றாள்.

குரல் வந்தவழியாக விமலநாதன் நிரம்பவும் விசனக் குறிப் புடன் அவ்விடம் வந்து நின்று "சுலோசனை! சவுக்யமா! உன்னிஷ்டத் திற்கு விரோதமாக நான் உன் வீட்டிற்கு வரவில்லை. பொது ஸ்தலத்தில் தற்செயலாக உன்னைக் கண்டதால் இங்கு வந்தேன். வித்யாசமாக எண்ணாதே! நீ இவ்வேளையில் யாரைத் தேடிக்கொண்டு வந்தாய்?' என்று வெகு வணக்கத்துடனும் வாஞ்சையுடனும் கேட் டான்.

தான் சற்றும் எதிர்பாராத விதமாக விமலநாதன் இங்கு வந்து நின்றதைக் கண்டு சுலோசனை வியப்புற்றாள். அவளையறியாத பலவித மான மாறுதல்களையும், தன் வாழ்க்கையில் வெறுப்பையும் அடைந்து பேசத்தொடங்கி, "சவுக்கியத்திற்கு என்னகுறைவு! நான் இவ்வுல கில் ஜெனிக்கும்போதே சகலமான சவுக்கியங்களையும் அனுபவிக்கத் தான் பிறந்திருக்கிறேன். தாங்கள் இவ்விதம் என்னைச் சந்தித்துப்

எந்த கடையில் சென்று பார்த்தாலும் அங்குள்ளவற்றை அப்படியே வாங்கிவிட ஆசைப் பிசாசு ஆடுகின்றது. காசுக் கூத்தாடியைத் தான் காணவில்லை.

பேசுவது நன்ருக இல்லை. இனி இவ்விதம் நடக்காதென்று நினைக்கின்றேன். என் தம்பி கோபிநாதனைத் தேடிக்கொண்டு வந்தேன்; நான் செல்கிறேன்''. என்று கூறிக்கொண்டே விற்ற் என்று அவ்விடத்தைவிட்டுப் போய்விட்டாள். அப்போது விமலநாதனுடைய நிலைமை எவ்விதமிருந்ததென்று நாம் விவரிப்பதைவிட யூகித்தறிதலே நலம்.

அங்கிருந்து சென்ற சுலோசன கோபிநாதனைக் காணுமல் மனந் தவித்தவாறு தேடிக்கொண்டே செல்கையில் அங்கு ஒரு பக்கத்தில் சில பாலர்களுடன் விளையாடிக்கொண்டிருந்த கோபிநாதனைக் கண்டாள். அப்போதுதான் அவள் உயிர்பெற்றவள்போலச் சந்தோஷமடைந்து கோபிநாதனின் கரத்தைப் பிடித்துக்கொண்டு ''கோபி! உன்னை நான் உடனே வரும்படியாகக் கூறியனுப்பி இருக்கையில் என் வாக்கை மறந்து விளையாட்டில் கலந்துகொண்டு என்னைத் துன்பத்திற்கிலக்காக்கி இவ்விடத்திற்குத் தேடியலைந்துவரும்படியாகச் செய்துவிட்டாயே! இப்படித்தான் நீ செய்வதா! உன்னைக் காணுமல் நான் வீட்டில் என்ன செய்வேன்? நமக்கு எந்த மனிதர்கள் இருக்கிருர்கள்? உன்னைத் தேடியலைய என்னையின்றி வேறு யார் செல்வார்கள்? வீட்டுக்கு வா!'' என்று அன்பாகக் கூறிக்கொண்டே அவன் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டே நடக்கலானுள்.

அப்போது அங்கு கூடியிருந்த பிள்ளைகளில் ஒருவன் ''மாமீ! கோபிநாதனைக் காணுமல் நீங்கள் பயப்படவேண்டாம். நாங்கள் எல்லோரும் ஒன்ருகத்தான் இங்கு விளையாடுகிறேம். எங்கள் உபாத்தியாயர் எங்களை தினம் விளையாடும்படியாகக் கூறி இருக்கிருர். ஆகையினுல் இனி தினந்தோறும் கோபிநாதனை இங்கு அனுப்புங்கள். நாங்களே அவனை வீட்டில் கொண்டுவிட்டுவிட்டுப் பிறகு நாங்கள் செல்கிறேம்.'' என்று மிகுந்த வாஞ்சையோடு சொன்

அண்ணன் தம்பிகள் விச்வாசமெல்லாம் மனைவி வரும் வரையில் தான். பிறகோ, அண்ணன் அனதை என்கிருன் தம்பி, தம்பி தத்தாரி என்கிருன் அண்ணன். இவ்விதமில்லாத சோதரர்கள் எங்கோ ஒருத்தர்தான்,

ளுன். அதைக் கேட்ட சுலோசனு "சரி அவ்வாறே செய்கின்றேன்." என்று கூறிவிட்டு கோபிநாதனை அழைத்துக்கொண்டு தன் வீட்டை நோக்கி நடக்கலானுள்.

அப்போது நாலைந்துபேர்கள் நிறைந்த ஓர் கூட்டம் சுலோசனுவைப் பின்பற்றிக்கொண்டே சென்றது. இதை நமது நங்கை நல்லாள் சிறிதுமறியமாட்டாள். அவள் வீட்டிற்கு வந்து சேர்ந்ததும் வழக்கம்போல தனது வேலைகளை முடித்துக்கொண்டு சயனித்தாள். படிப்பதில் மகா புத்திகூர்மையுடைய சுலோசனு தன்னுடைய சகலமான சங்கடங்களையும், துயரங்களையும் மறந்துவிட்டுத் தனக்கு இப்பிறவியில் கலைமகளின் ப்ரசாதமாகிய கல்விதான் முக்கியம் என்கிற நோக்கத்துடன் தனது படிப்பின்மீதே தனது முழு கவனத்தையும் செலுத்திப் படிக்கலானுள். அவளுடைய அதி தீவிரமான மதி நுட்பத்தைக் கண்டு கலாசாலையின் அதிகாரிகள் ஒரு வருடத்தில் இரு வகுப்புக்களில் (டபிள் ப்ரமோஷன்) ஒன்ருக பாஸ் செய்யும்படியாகச் செய்தார்கள். சுலோசனுவின் மன வெறுப்பினுல் அவள் தனது சினேகிதையாகிய சரோஜனியினிடத்தில்கூட அதிகமாகப் பேசுவதையும் அவள் வீட்டிற்குச் செல்வதையும் நிறுத்திக்கொண்டு தன் வேலையே ப்ரதானமாகக் கவனிக்கலானுள். கோபிநாதனின் படிப்பையும் தானே கவனித்து அவனை நன்ருகப் படிக்கும்படியாகச் செய்துவந்தாள்.

இவ்விதமே சில நாட்களாயின. சுலோசனுவின்மீது கண்வலை வீசாத காமுகர்களில்லை. அந்தக் கூட்டம் வலுத்துப்போய் உள்ளுக்குள்ளேயே வேலை செய்துவருகின்ற வஞ்சத்தைச் சுலோசனு ஒரு சிறிதும் அறியவில்லை. எனினும் அவளுக்குத் தினந்தோறும் அநாமதேயக் கடிதங்கள் வரத் தொடங்கின. அவைகளைக் கண்டு மிகுந்த துயரத்தை அடைந்து வருந்தி தவிப்பாள். இவ்விதம் செய்பவர்கள் யார் என்பதே அவளுக்குத் தெரியாதாகையால் அத்

அடுத்த வீட்டில் மாமி மருகி சண்டை இடுவதைக் கண்டு நியாயங் கூற முன் வந்த மாது தன் வீட்டிலேயே அந்த சண்டை நேர்ந்தவிட்ட காலத்தில் தான் முன் கூறிய நியாயம் எங்கேயோ ஓடி ஒளிகின்றது.

தகைய கடிதங்களைக் கண்டதும் அவைகளை தனது கைப்பெட்டியில், அடக்கஞ்செய்துவிட்டு "இவ்வித கடிதங்கள் எழுதியது யாராக விருக்கலாம்?" என்ற பெரும் கவலைக்குள் ஆழ்ந்திருப்பாள். இவைகளைப் பிறரிடம் வெளியிடவும் மனம் சகியாதவளாயிருந்துவிட்டாள். சுலோசனாவுக்கு அனேக சினேகிதைகள் இருப்பினும் சரோஜனியைப்போன்ற உயிர்த்தோழி யாரும் இல்லை. மற்ற சினேகிதிகளிடத்தில் அவசியமானவரையில் பேசுவதும் மற்ற நேரங்களில் வாளாவிருப்பதுமாக விருந்தாள்.

இவ்விதமிருக்கையில் ஒருதினம் சுலோசனா, அன்று விடுமுறையாகையினால், காலையில் தனது பாடங்களைப் படித்துவிட்டு சர்க்காவில் நூற்றுக்கொண்டே உட்கார்ந்திருந்தாள். கோபிநாதன் தக்ளியில் நூல் நூற்றவாறு சுலோசனாவுடன் ஏதோ பேசிக் கொண்டே இருந்தான். அச்சமயத்தில் வீதியில் ஒரு மோட்டார் கார் வந்துநின்ற சப்தம் கேட்டது. உடனே கோபி வீதிக்கு ஓடிச் சென்று பார்த்துவிட்டு "அக்கா! யாரோ, இரண்டு பெரிய மனிதர்கள் வந்திருக்கிறார்கள்" என்று கூறினான். இதற்குள் வண்டியிலிருந்து இறங்கிய இருவரும் உள்ளேவந்து நடையில் நின்றுகொண்டு "அம்மா! அம்மா!" என்று கூப்பிட்டார்கள்.

இதைக் கேட்ட சுலோசனா "இங்கு வந்து கூப்பிடுகிறவர்கள் யாராகவிருக்கலாம்?" என்று யோசித்தவாறு கோபியை நோக்கி, "கோபி! யாரைத் தேடுகிறார்கள் என்றும், அவர்கள் யார் என்றும் விசாரித்துக்கொண்டு வா!" என்றாள். உடனே கோபி சென்று அவ்வாறே விசாரித்தான். வந்தவர்கள் ஒரு சிறிய கார்டைக் கொடுத்து 'இதைக்கொண்டு கொடு' என்று அனுப்பினார்கள். கோபிநாதனும் அந்த கார்டை அவ்வாறே சுலோசனாவிடம் கொடுத்தான். சுலோசனா அதை வாங்கிப் பார்த்தாள். அதில் "சாமளா பிலிம் கம்பெனி, சுதேசி சினிமா, ப்ரோப்ரைடர் சாமசுந்தர்." என்று

"தினந்தோறும் தேசபக்தர்கள் சிறைக்கூடம் செல்கிறார்கள்." என்று பலரும் அனுதாபமாகப் பேசுகின்றார்களேயன்றி அவர்களைப் பின்பற்றி நடப்பதற்குப் பலர் முன் வரத் தியங்குகின்றார்கள், சிலர் மறுக்கின்றார்கள்,

எழுதப்பட்டிருந்ததைக் கண்டதும் சுலோசனுவின் மனம் திடுக்கிட்டது. அவர்கள் இவ்விட்டில் தன்னை நாடி வரவேண்டிய காரணம் யாது தெரியவில்லையே என்று நடுங்கியவாறு எழுந்து நடைக்கத வருகில் உள்புறமாக நின்றுகொண்டு, "தாங்கள் யாரைத் தேடிக் கொண்டு வந்திருக்கின்றீர்கள்? அப்படி உட்காருங்கள்". என்று கூறி தலைகுனிந்து நின்றுள்.

வந்தவர்களும் மரியாதையாக நடைத்திண்ணையில் உட்கார்ந்து கொண்டார்கள். அவர்களுள் ஒருவர் நிரம்பவும் பணிவாகப் பேசத் தொடங்கி, "அம்மா! நான் தங்களைத்தான் தேடிக்கொண்டுவந்தேன். எனக்குத்தெரிந்த ஒருவர் மூலமாகத் தமது சரித்திர சுருக்கத்தை அறிந்தேன்; மிகவும் விசனமடைந்தேன். நமது இந்து சமூகத்தில்தான் இத்தகைய அநியாயங்களும், கொடிய பழக்கங்களும் நடக்கின்றன. பால்மணம் மாருத குழந்தையாயினும் அதன் தலையில் பேரிடியை விழும்படிச்செய்து அதற்கு விதவை என்கிற பட்டத்தையும் அளித்து அக்குழந்தையின் பிறவியையே பாழ்படுத்தி அதன் ஆயுள்காலம் வரையில் அவதிக் குள்ளாக்கிவிடுகிருர்கள். இத்தகைய கொடிய பழக்கத்தை அடியோடு தொலைத்திடவேண்டியே உலகத்தில் இப்போது சில சீர்திருத்தங்கள் நடக்கின்றன. தங்களுடைய கலாசாலையின் வருடக்கொண்டாட்டத் தினத்தன்று கலாசாலையின் மாணவிகளையும், உபாத்தியாயினிகளையும் ஓர் பெரிய (க்ரூப்) போட்டோ எடுத்தார்களல்லவா! அதை நான் கண்ணுற்றேன். அந்த படத்தில் உபாத்தியாயினியின் பக்கலில் நீங்கள் நின்றிருக்கின்றீர்கள். அதைக் கண்டதும் நான் உங்களுடைய அழகையும் தேக அமைப்பின் அற்புதத்தையும் கண்டு கட்டுமீறிய வியப்பையும் திகைப்பையும் அடைந்தேன். 'இத்தகைய ரூபவதியும் உலகில் இருக்கிருர்களா!' என்று ப்ரமித்தேன். அப்போதே உங்களை நேரில் பார்க்கவேண்டுமென்று நிரம்பவும் ஆவல்கொண்டு

மகாத்மா காந்தியடிகளை அறியாதார் உலகத்திலில்லை. போற்ருதாரும் ஆயிரத்தில் ஒருவர் கிடைப்பது அரிது. சிலருக்கு வாய் காந்தியை வாழ்த்திக் கொண்டே இருக்கின்றது. அதே வாய் சத்யாக்ரகத்தையும், கதரையும் தூற்றுகின்றது.

உங்கள் கலாசாலையின் வீதியில் நின்றேன். நீங்களும் உங்கள் தோழியும் கலாசாலைக்கு வந்ததைக் கண்டேன். புகைப்படத்தில் பார்த்ததைவிடப் பதின்மடங்கு அதிகரித்த ஆச்சரியமடைந்தேன். அதன்பிறகே உங்களைப்பற்றி விசாரித்ததில் உங்கள் சரித்திரத்தை அறிந்து வருந்தினேன். உங்களுடைய இத்தகைய எழில் வெள்ளமானது பாழாகிப்போவதைக் கண்டு அதைப் பயன்படுத்தவேண்டி உங்களிடம் தெரிவிக்க வந்தேன். நாங்கள் சாமளா பிலிம் கம்பெனி என்ற பெயரால் சுதேசி சினிமா படங்கள் தயாரிக்கின்றோம். எனக்கு சுதேசியத்தில் அதிக பக்ஷமிருப்பதால் அந்த பெயரால் கம்பெனி நடத்துகின்றேன். நாங்கள் அபூர்வமான நாவல்களையும், புராண சம்மந்தமான கதைகளையும், சரித்திர சம்மந்தமான வைகளையும்தான் தயார்செய்துக் காட்டுகின்றோம். இங்கிலீஷ் கதையே நாங்கள் ஆடுவதில்லை. நாங்கள் இந்த படம் பிடிக்கும் தொழிலை சுமார் 10 வருடங்களாகச் செய்து வருகிறோம். அதில் ஸ்திரீகள் வேஷத்திற்கு ஸ்திரீகளை நடித்துப் படம் எடுப்பதே எங்கள் தொழில். அவ்வாறு நடித்த படங்கள் அனேகம் தயார் செய்துக் காட்டியும் வருகின்றோம். சிந்தாமணி, இந்துமதி, மாலதி, கமலவேணி, அம்புஜாக்ஷி, வனஜாக்ஷி, பத்மாக்ஷி, நளினாக்ஷி, விசாலாக்ஷி, காமாக்ஷி, மீனாக்ஷி, குமுதரஞ்சனி, மைதிலி, லலிதா, இந்திரகுமாரி இவர்கள் எல்லோரும் நல்ல அழகுடையவர்கள் தான். ஆனால் தங்களைப் பார்த்த பிறகு அவர்களின் அழகை இனி அழகு என்று கூறுதல் வெட்கமேயாகும். தங்களைப் போன்று யாவும் பதிந்த நங்கையர்களை நான் கண்டதில்லை. தாங்கள் எங்கள் கம்பெனியில் நடிக்கச் சேரவேண்டுமென்பதைக் கேட்கும் பொருட்டாகவே நான் வந்தேன். நீங்கள் எங்கள் கம்பெனியில் நடித்தால் எங்கன் கம்பெனிக்கும், உங்களுக்கும் கிடைக்க விருக்கும் புகழும் கீர்த்தியும் அளவிட்டுக் கூற வியலாது. நீங்கள் சினிமா உலகிற்கே ஒரு ராணியாக ஆய்விடுவீர்கள். எங்களுக்குள்ள சல்லியக்

சங்கீதப்ரியர்களின் காதுகள் சங்கீதத்தையே தேடுகின்றன. காமுகரின் கண்கள் யௌவன ஸ்திரீகளையே தேடுகின்றன. சாப்பாட்டுராமனின் வயிறு ஆகாரத்தையே தேடுகின்றது. தேசாபிமானிகள் சிறைவாசத்தையும், கதர் வஸ்திரத்தையும் தேடுகின்றார்கள்.

களெல்லாம் நில்லா தொழியும். உங்களால் சகல விதத்திலும் நாங்கள் மேன்மை பெறுவோம். நீங்கள் எங்கள் வேண்டு கோளுக்கு இசைவீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன். எங்கள் கோரிக்கையை நிறைவேற்றவேண்டும்'' என்று நிரம்பவும் மரியாதையாயும், நயமாயும் கூறினர்.

இந்த எதிர்பாராத வார்த்தைகளைக் கேட்கும்போதே சுலோசன தனக்கு ஏதோ பெருத்த ஆபத்துத் தான் நேர்ந்து விட்டதாக எண்ணி விட்டாள். இம் மொழிகளை செவிக் கொள் வதற்கே அவள் மனம் சம்மதிக்கவில்லை. இவர்கள் கூறுவதைக் கேட்காது உள்ளே போய்விடவும் தீர்மானித்தாள். அவ்வாறு உள்ளே சென்றால் அவர்களும் பின் தொடர்ந்து வந்து விடுவார் களோ! என்று பயந்து பேசாது நின்றிருந்தாள். அவர்களின் ஒவ் வொரு வார்த்தையும் அவள் மனத்தைத் துளைக்கின்றது. "ஐயோ! இதென்ன கர்மகாண்டம்! நம்மைப் பிடித்த சனியன் இவ்வகை யிலும் இழுத்தாட்டுகின்றதா!'' என்று தனக்குள்ளாகவே துக் கித்துக்கொண்டே தலை குனிந்து நின்றாள். அவர்களின் வார்த்தை முடிந்ததும் சுலோசன தான் என்ன பதில் கூறுவ தென்பதை யறியாது குழம்பிப் போய் ஒன்றும் தோன்றாது நின்றாள். பிறகு சற்று தெளிவடைந்து பேசத் தொடங்கி, "ஐயா! தாங்கள் சிரமத்தைப் பொருட் படுத்தாது இவ்வளவு தூரம் வந்ததைப் பற்றி நான் மிகவும் விசனிக்கின்றேன். தாங்கள் தெரிவித்தபடி நடப்பதற்கு இங்கு யாரும் தயாராக இல்லை என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். தயவு செய்து எழுந்து செல்லலாம். என்னைப் படைத்த கடவுளே என்னைப் பாழ் படுத்திவிட்ட பிறகு மனிதரால் இனி அவற்றைப் புதுப்பிக்க முடியாது. கர்மாவின்படிதான் யாவும் நடக்கும். கர்மாவைக் கடப்பது இக்கலியில் இல்லை. ஆகை யினால் இது விஷயத்தைப் பற்றி இனிமேல் பேசவேண்டாம்'' என்று சற்று முடுக்காகவும், சிறிது கோபத்துடனும் கூறினாள்.

வயோதிகராகியபின்புதான் சிலர் ஜீவியகாலத்தில் செய்துவிட்ட தீமை களை எண்ணி வருந்துகின்றார்கள். அவைகளைச் செய்யலாகாதென்று பிறருக் கும் போதிக்கின்றார்கள்.

சாம:—அம்மணி! கோபிக்காதீர்கள். உங்களுடைய காப்பாளர்களிடத்திலிருந்தும் நாங்கள் அனுமதி பெற்று விடுகிறோம். அதற்காகத் தாங்கள் கவலை கொள்ளவேண்டாம். கர்மத்தை அனுபவிப்பதென்பதும், கர்மமென்பதும் முற்காலத்திலிருந்ததே யன்றி இக் கலியில் ஒன்றுமே கிடையாது. இக் காலத்தில் கண்டதே காட்சி; கொண்டதே கோலம்; உண்டதே மிச்சம். இதுதான் உண்மை. அதெல்லாம் கிடக்கட்டும். உங்களை அறியாமலேயே உங்கள் மீது மாயமோக வலை வீசி உங்களை அவ் வலையில் பிடிக்க எண்ணி இருப்பவர்கள் பலர் இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். உங்களுக்கு அத்தகைய ஆபத்துக்கள் அணுகா வண்ணம் காப்பதற்கு நானே ஜவாப்தாரியாக இருக்கின்றேன். உங்களுக்கு ஒரு நாதனில்லாமையினாலேயே பலவிதமான இடுக்கண்கள் நேரலாம். இது உலகானுபவம். இவ்வாறான அனுபவங்களை நான் நேரில் எத்தனையோ கண்டும், கேட்டு மிருக்கிறேன். எங்கள் கம்பெனியில் நடிக்கும் நளினாக்ஷி என்பவளுக்கு யாருமே மனிதரில்லாமையினால் எண்ணரிய இடர்கள் அவளைத் தாக்கின. அவைகளைச் சகிக்கமாட்டாமல் தவிக்கையில் எங்களுடைய விளம்பரத்தைக் கண்டு அவளாக வந்து எங்கள் கம்பெனியில் சேர்ந்தாள். இப்போது ஒருவித தீங்கு மின்றி வெகு சந்தோஷமாயும் குதூகலமாயும் இருக்கிறாள். எங்கள் கம்பெனியில் நடிக்கும் பெண்கள் எல்லோரையும் நாங்களே ஒரு தனித்த பங்களாவில் வைத்துப் பாதுகாத்து வருகிறோம். எல்லோரும் நடிக்கும் சமயத்தில் வந்து நடித்துவிட்டு அந்த பங்களாவிற்குச் சென்று விடுவார்கள். உங்களுக்கும் அங்கு அவர்களின் துணை இருப்பதால் யாதொரு குறைவு மில்லை. ஆகையினால் நீங்கள் தீங்கின்றி சுகமாகவும் சந்தோஷமாயும் இருக்க வேண்டுமாயின் எங்களுடைய விருப்பப் படியே வாருங்கள்.

சுலோசனா:—ஐயா! நீங்கள் வயதிலும், பார்வையிலும்

சங்கீதத்தை விரும்புகிறவர்கள் வீதியில் செல்லும் பிச்சைக்காரர்கள் பாடுவதையும் ஆநந்தமாகக் கேட்கிறார்கள். சில அகம்பாவம் பிடித்தவர்கள் சங்கீத வித்வான்களையே தூஷிக்கின்றார்கள்.

பெரிய* மனிதராகக் காணப்படுகின்றீர்கள். தாங்கள் இவ்விதம் அனுவசியமான வார்த்தைகளையாடி என் பொழுதை வீணுக்க வேண்டாம். எனக்கு நாதனில்லை என்றதனுல் நான் உங்கள் கம்பெனியில் கூடி கூத்தாடிகள் போல நடிக்க வேண்டு மென்ற நிபந்தனை எதுவு மில்லை. மனித ரூபமுள்ள ஒரு நாதன் எனக்கு இல்லாவிடினும் உலகாளும் ஆதிநாதன் ஒருவனிருக்கின்றுன் என்பதை மறந்து விடாதீர்கள். அவனுடைய ஆளுகைக்குள் இருக்கும் எனக்கு ஒருவிதமான குறைவும் வாராது. கர்மா என்பதையும் கடவுள் என்பதையும் மறந்து பேசுகின்றவர்களுக்கு நீங்கள் சொல்லியது போலவே யன்றி, என் போன்று மறக்காது துதிக்கும் பேர்களுக்கு நீர் சொல்லியது போலாக மாட்டாது. லோகநாதன் என்னைக் கைவிடமாட்டான், என் தலையில் எழுதி யிருப்பது போலத் தான் யாவும் நடக்கும். அந்த நாதனின் பாதுகாப் பிலேயே நான் இருக்கிறேன் என்பதை மறக்காதீர்கள். தாங்கள் செல்லலாம். நான் உங்கள் கருத்திற்கு இசையமாட்டேன்" என்று கோபத்துடன் கூறிவிட்டு சடக்கென்று உள்ளே சென்று, "கோபி! அவர்களை அனுப்பிவிட்டுக் கதவைத் தாளிடு," என்று கூறினுள்.

இதைக்கேட்ட சாமசுந்தருக்கு கோபமும், சுலோசனு அலக்ஷிய மாகப் பேசியதால் அவள்மீது சிறிது அசூயையும் உண்டாகி விட்டது. அதற்குமேல் அவர் அங்கு நிற்காது எழுந்து சற்று உரத்த குரலால் "சுலோசனு! அடுக்கான சொற்களே கெடுக்கும் என்பதை மறக்காதே" என்று கூறிவிட்டுப் போய்விட்டார். அவர் கடைசியாகச் சொல்லிச் சென்ற வார்த்தைகள் சுலோசனு வின் மார்பில் அம்பு எய்தது போல விருந்தன. அந்தப் பாவி தனக்கு நாதனில்லாமையினுல் தனது விருப்பத்திற்கு இணங்கும் படியாகக் கூறிய மொழியானது கூரிய ஈட்டி கொண்டு குத்துவது போலாயிற்று. அந்த சமயத்தில் முன்னர் தோட்டத்தில் ஒரு

சிலர் தமது பேர் ப்ரபலமாகும் விஷயங்களில் தனத்தைத் தாராளமாகச் செலவிட முன்வருகிருர்கள். ஏழைப் பரதேசி, மொண்டி, முடம் முதலியவர் களைக் கண்டால் சீறி விழுகிருர்கள்.

மாது பாடிய பாடல் நினைவிற்கு வந்தது. அப் பாடலின் கருத்து எத்தனை உண்மையாக விருக்கின்றது, என்று அதே சிந்தனை செய்துகொண்டு மனந் தவித்தவாறு வந்து படுத்துவிட்டாள்.

இங்கு நடந்த சகலமான விஷயங்களையும் கவனித்துக்கொண்டிருந்த கோபிநாதனுக்கு விவரமாக எதுவும் விளங்கவில்லை எனினும் வந்தவர்கள் தனது தமக்கையின் மனம் நோகும்படியாக வார்த்தையாடியதையும், அதனால் தனது சகோதரி கண்ணீர் சிந்துவதையும் கண்டுகொண்டு சுலோசனாவின் அருகில் வந்து "அக்கா! ஏன் நீ விசனப்படுகிறாய்? உன்னை அவர்கள் என்ன சொன்னார்கள்? ஏதோ; சினிமா என்றார்களே, அதற்கு நம்மை அழைத்தார்களா! என்ன அக்கா! ஏன் நீ புலம்புகின்றாய்?" என்று கொஞ்சலாகக் கேட்டான்.

இதைக் கேட்ட சுலோசனா "ஒன்றுமறியாத பாலகனுக்கு நாம் ஏன் விவரத்தை அறிவிக்கவேணும். அவனுக்கு ஏதோ தகுந்த வார்த்தைபைக் கூறிவிடுவோம்" என்று எண்ணி கோபிநாதனை அருகில் அழைத்து உட்காரச்செய்து "என் கண்ணே! கோபி! நீயோ சிறிய பாலகன். உனக்கு உலக விவகாரமே ஒன்றும் தெரியாது. வந்திருந்தவர்கள் நமது பிதாவுக்கு எப்போதோ தெரிந்தவர்களாம். அவர்கள் ஏதோ புதிய சினிமா தயார் செய்கிறார்களாம். அதற்காகப் பணம் பத்தாயிரம் ரூபாய் வேண்டுமாம்; அதைக் கேட்க வந்தார்கள். நான் பணம் இல்லை என்று கூறிவிட்டேன். அவர்கள் போய்விட்டார்கள். நமது பிதா இல்லையே இறந்துவிட்டாரே என்று நினைத்தேன். துக்கம் வந்தது. வேறொன்று மில்லை. இந்த விஷயங்களை யாரிடத்திலும் சொல்லாதே!" என்று சமாதானமாக வார்த்தைகளைக் கூறிவிட்டாள்! "துடுக்கான சொற்களே கெடுக்கும்" என்று அவர்கள் சொல்லிச் சென்ற வார்த்தைகள் சுலோசனாவின் மனத்தை விட்டு அகலவே இல்லை. அவர்களால் தனக்கு எத்தகைய துன்பங்கள்

விலைகொடுத்து வாங்கிய பண்டத்தின்மீதும் இனாமாகவந்த பண்டத்தின் மீதும் உள்ள வாஞ்சையில் வித்யாசம் தானே உண்டாகிவிடுகிறது.

நேருமோ! என்கிற ஓர் பீதி அவள் மனத்தைக் கப்பிக்கொண்டு வதைக்கின்றது. தனது துயரத்தை வெளியிடமாட்டாது தவித்தவாறு மீண்டும் சர்க்கா சுழற்ற வாரம்பித்தாள். "இப் பூவுலகில் ஒரு மனிதரும் அற்ற அனாதையாகவா நாம் ஜெனித்தோம்!" என்றதை நினைக்கும்போது அவளை யறியாது துக்கம் பொங்கி வழிகின்றது. எல்லாவற்றையும் உள்ளடக்கிக் கொண்டுத் தனது வேலையைக் கவனிக்கலானாள்.

சுலோசனா கலாசாலையில் முதன்மையாகப் படித்து டபிள் ப்ரமோஷன் பெற்று வருவதோடு உபாத்தியாயினிக்கு அவள் மீது மிகுந்த ப்ரிய மிருப்பதால் அவளது வகுப்பிலுள்ள சில பெண்களுக்கு இது வயிற்றெரிச்சலாகவே இருந்தது. ஆனால் அவைகளை வெளியிடாது மனத்திலடக்கிக்கொண்டு சுலோசனாவிடத்தில் அதிக நேசமாக உள்ளவர்கள் போலவே அவர்கள் நடித்து வந்தார்கள். கலாசாலையின் உபாத்தியாயினி அடிக்கடி சுலோசனாவின் உன்னத குணத்தையும், பொறுமை நிறைந்த தன்மையையும், புத்தியின் விசாலத்தையும் பற்றிப் பேசுவாள். முன் கூறிய சில பெண்களைத் தவிர மற்றையோர் அப் புகழ்ச்சியை வெகுவாய்க் கேட்பதுடன் தாங்களும் அத்தகைய பெயரெடுக்க வேண்டும் என்று முயற்சித்துச் சுலோசனாவுடன் நெருங்கிப் பழகுவார்கள்.

இவ்வித மிருக்க சுலோசனா ஒரு தினம் தன் பாடங்களைப் படித்துக்கொண்டிருக்கையில் தபால்காரன் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அதை வாங்கி சுலோசனா படிக்க வாரம்பித்தாள். அதனுள்ள விஷயமாவது:—

எந்தப்பொருளையும் இரவல் வாங்குவதிலேயே நாட்டம். இரவல் வாங்கிய பண்டத்தில் ஏதேனும் பழுதி ஏற்பட்டு அதைக் கண்ட சொந்தக்காரர் ஏதேனும் கேட்டால் மனஸ்தாபம், சண்டை, பணக்கொழுப்பென்ற சொட்டுச் சொல் எல்லாம் வந்துவிடுகின்றன.

"எனது காதல் கண்மணியாகிய சுலோசனா!

உன்னைக் கண்ட நாள் முதலாக இரவு பகல் நித்திரை இன்றி நான் சதா தவிக்கின்றேன். உனது காதல் வலையில் நான் சிக்கி விடுபட சக்தியின்றித் தத்தளிக்கின்றேன். இதற்கு முன் நான் உனக்கு எழுதியுள்ள கடிதம் உன் கைக்கு வரப் பெற்றிருப்பாய் என்று நம்புகிறேன். நான் தினந் தோறும் உன் வீட்டு வாசலின் வழியாகச் சென்று உன்னைப் பார்த்துக்கொண்டே போகிறேன். நீ கலாசாலையிலிருந்து வீடு திரும்பும்போது நானும் உன்னுடன் பின்பற்றியே வரு கிறேன். என்னை நீ பார்த்திருந்தாலும் இருக்கக் கூடும். நான் உன்னை எப்பொழுது சந்திக்கலாம் என்றதை இதில் காணும் விலாசத்திற்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன். நீ சினிமாகம்பெனியில் நடிக்கப்போவதாகக் கேள்விப் பட்டேன். நீ நடிக்கும் கம்பெனியில் நானும் சேருகிறேன். இருவரும் எந்த நாடகத்திலும் தம்பதிகளாகவே நடிக்கலாம். இவ் விஷயத்தில் நான் மிகவும் ஆவலுடன் எதிர் பார்க்கிறேன். நானே உன் வீட்டிற்கு நாளைய தினம் வந்து சந்திக்கலா மென்று நினைக்கின்றேன். அநேகமாய் வருகிறேன்.

இங்ஙனம்
உன்னைக் கனவிலும் மறவாத
காதலன்"

அதைப் படித்தாள். அதுபோன்ற கடிதங்கள் தினந்தோறும் சுலோ சனாவிற்கு வருகிறபோதிலும் அக் கடிதம் எழுதியவன் மறுநாள் வருவதாகத் தெரிவித்திருப்பது அவளுக்கு மிகுந்த பயத்தையும்

பத்திரிகை நடத்துவதால் உண்டாகும் சிரமத்தை நடத்துபவர்கள்தான் அறிவார்கள். பத்திரிகையில் ப்ரசுரித்துள்ள தாமத விளம்பரத்தைப் படிக்காம லேயே சிலர் "என் இன்னும் பத்திரிகை வரவில்லை?" என்று ஒன்று, இரண்டு. மூன்று கடிதங்கள் தமது பணத்திற்கு நஷ்டமாயும், நமது மனத்திற்குக் கஷ்ட மாயும் எழுதிவிடுவதோடு "சந்தாத் தொகைத்தவிர மாதம் ஒரு கடிதமும் எழுத நேருகிறது" என்ற சொட்டுச் சொல்லையுங்கூட அணியாக வரைகின்றார்கள்.

விசனத்தையுமளித்தன. "ஐயோ! நானு சினிமா கம்பெனியில் நடிக்கப் போகிறேன்! இதென்ன அநியாயம்! அனாதையாகிய என்னை இவ்விதமாகவா துன்பம் தொடரவேண்டும். அவன் என்னைக் கலாசாலையிலிருந்து தொடர்ந்து வருகின்றானமே! இந்த மோசத்தைக் கண்டறியாது நான் இருக்கின்றேனே! என் விதி என்னை இவ்வித மெல்லாம் ஆட்டவேண்டுமா! இந்தப் பாவி யாரோ! இவன் இன்று வந்து நின்றால் நான் என்ன செய்வேன்? என்னுடைய ஆபத்தில் என்னைக் காப்பதற்கு அந்தக் கடவுளை இன்றி வேறு யாரேனும் உண்டா! ஒருவருமில்லையே! ஐயோ! உலகத்தில் பெண்ணாயும் பிறந்து இவ்விதம் திக்கின்றி விதவையாயும் உயிர் வாழும் மற்றொரு மங்கை என் போன்று கிடைப்பாளா! என்ன பாபத்தைச் செய்து இவ்விதம் பிறந்துவிட்டேன். ஹா! இந்தப் பாவியைப் பெறுவதற்காக என் பிதா அடைந்த துன்பமும், பட்ட சிரமமும் கணக்கிட வியலாதே! அத்தகைய அருந்தவம் செய்து என்னை அடைந்ததற்கு என் கதி இவ்விதமாகவா ஆகவேண்டும்! உலகத்தில் பெண் மக்களுக்கு எத்தனை மனிதர்கள் இருந்தபோதிலும் ஒரு கணவனுக்கு நிகர் வேறு யாரேனும் ஆவார்களா! இந்த அனுபவத்தைக் கண்டு அறியாமலா ஆன்றோர்கள் இது விஷயமாக பல பாடல்களைப் பாடி இருக்கின்றார்கள். "நாயகனில்லா நங்கையின் பிறவி பாழ்" என்று பெரியார்கள் பழமொழியாகக் கூறுகின்றார்கள். அடாடா! என்ன அக்ரமம். எனக்கு நாதன் யார்! என்னைக் காப்பாற்றிக் கடைசி வரையில் ஆதரிக்கத்தக்க காப்பாளி யார்! நான் நாதனற்ற அநாதையா! கல்யாணம் ஆயிற்றென்பதும், எவனோ தாலி கட்டினானும்; அவன் இறந்துவிட்டான், என்பதும் உண்மையில் நடந்ததா! அன்றி கனவு கண்டதா! உண்மையில் எனக்கு எதுவும் தெரியவில்லையே! எனக்கு நாதன் என்று ஒருவரையும் அறியா முன்னரே நாதன் இறந்துவிட்டான் என்பது என்ன வேடிக்கை. நீ நாதனற்ற நங்கை! நாதனற்ற நங்கை! என்றல்லவோ என்னைப்

பத்திரிகையிலுள்ள நாவலை ஆர்வமுடன் படிப்பதைப்போல அப்பத்திரிகையில் ப்ரசுரிக்கும் தனி விளம்பரங்களையும் தயவுசெய்து படித்தால் இருதாத்தினருக்கும் மிக்க நலமாகும்.

பேசி என்னைத் தீக் குழியில் தள்ள முற்படுகின்றார்கள். எனது நினைவே எனக்கு அறியா முன்னர் நாதனுவது! இறந்துவிட்ட தாவது! வைதவ்யமாவது! என்கதி யாவும் முடிந்துவிட்ட தாவது! இதெல்லாம் என்ன அக்ரமம்! ஐயோ! சண்டாள உலகமே! இவ் வுலகத்தில் இத்தகைய கொடிய நீதியும் உண்டோ!" என்று தனக்குள் தான் எண்ணியபடியே அந்த கடிதத்தைக் கையில் வைத்துக்கொண்டு புலம்பியவாறு படுத்திருந்தாள்.

அவளுடைய கலாசாலையில், நாம் முன்னர் தெரிவித்தது போல பொறுமையுடைய சிறுமிகளில் ஒருத்தியாகிய காவேரி என்பவள் சுலோசனுவினிடம் ஏதோ பாட விஷயமாகப் பேசுவதற்காக அங்கு வந்தாள். அப்போதுதான் சுலோசனு நாம் முன்னர் கூறிய நிலைமையிலிருந்தாள். காவேரி என்ற கபட குணமுடைய மாது அவ் விடத்திற்கு வந்தும் நேரே சுலோசனுவிடம் செல்லாது மறைந்து நின்று அவளுடைய நிலைமையைக் கவனித்துப் பின்னர் "என்ன சுலோசனு! என்ன உடம்பு! ஏதோ ஒருவாறுகப் படுத்துக்கொண் டிருக்கின்றுய்?" என்று விசாரித்துக்கொண்டே அருகில் வந்தாள்.

நமது நற்குணமணியாகிய சுலோசனு தனது அலங்கோல மான நிலைமையினின்று எழுந்து உட்கார்ந்து காவேரியை நோக்கி, "வா, காவேரி! உட்காரு. ஏது இப்போது வந்தாய்?" என்றுள். இதைக் கேட்ட காவேரி "சுலோசனு! நான் இரண்டு நாட்களாய் கலாசாலைக்கு வரவில்லையல்லவா! ஆகையால் பாடங்களைத் தெரிந்து கொண்டுபோவதற்காக வந்தேன்". என்று கூறிக்கொண்டே பக்க லில் உட்கார்ந்தாள்.

சுலோ:—உனக்கு இப்போது உடம்பு முற்றும் குணந்தானே.

காவேரி:—குணந்தான். உனக்கென்ன உடம்பு? உன்னைப் பார்த்தால் ஏதோ ஒருமாதிரியாக இருக்கின்றுயே!

மாதிரிக் காப்பிக்கு எழுதுகிற கடிதத்தைச் சிலர் புகபோஸ்டில் அரையணு ஸ்டாம்பு ஒட்டி அனுப்பிவிட்டு வாங்குபவருக்கு ஒரு அணு செலவை வைத்து விடுகிறுர்கள்.

கலோ:—ஒன்றுமில்லையே! எனக்கென்ன கேடு வரப்போகிறது. பாபிக்கு சதாயுஸ் என்பதுபோல எனக்கு நோயும் வராது. நான் இறக்கவுமாட்டேன்—என்று கூறிப் பிறகு பாடவிஷயங்களை எல்லாம் தெரிவித்தாள்.

காவே:—சுலோசனு! உனது (நான்டீடேயில்ட்) புத்தகத்தை சற்றுக்கொடு; அதில் ஒரு விஷயம் பார்க்கவேண்டும். பார்த்துவிட்டு நாளைக் காலையில் கொண்டுவந்து கொடுத்துவிடுகிறேன். அதோ மேஜைமீது இருக்கிறது; எடுத்துக்கொள்கிறேன். நான் சென்று வருகிறேன்.'' என்று கூறிக்கொண்டே அந்த புத்தகத்தை எடுத்துக் கொண்டு சுலோசனுவிடம் சொல்லிவிட்டுப் போய்விட்டாள். சுலோசனு அவளை யனுப்பிவிட்டு முன்புபோலவே படுத்துவிட்டாள்.

புத்தகத்தை எடுத்துச்சென்ற காவேரி தன் வீட்டிற்குப் போய் தன்னறையில் பிரித்துப் படிக்கலானுள். புஸ்தகத்தைப் புரட்டிப் பார்த்துக்கொண்டே வருகையில் அதிலுள்ள ஒரு கவர் பொத்தென்று கீழே விழுந்தது. அந்தக் கடிதத்தை உடனே எடுத்து மேல் விலாசம் பார்த்தாள். அது சுலோசனுவின் பேருக்கு இருக்கக்கண்டாள். அவ்வெழுத்துக்கள் ஆண்பிள்ளையின் கை யெழுத்தாகவிருப்பதை அறிந்து ஆச்சரியங்கொண்டு கவரின் உள் ளிருந்த கடிதத்தை எடுத்து வெகு துணிகரமாகப் படிக்கலானுள். அது சுலோசனுவுக்கு வந்த அநாமதேயக்கடிதங்களில் ஒன்று. அது பின்வருமாறு:—

''என் கண்மணி சுலோசனு!

நீ பார்ப்பதற்கு மகா பரிசுத்தவதி என்று எண்ணும்படி யாக நடிக்கின்றாய். ஆனால் உனக்குள்ள கள்ளக்காதலர்களின் எண்ணிக்கை மிகுந்துவிட்டது. அவர்களைப்போலவே என்னை யும் ஏற்றுக்கொள்வாய் என்று நினைக்கிறேன். நான் தகுந்த

நமக்கு வந்த எந்த கடிதத்தையும் படித்துவிட்டுப் புத்தகத்தின் மத்தியில் வைத்துவிடுவது மகா பிசகு. அவசியமான கடிதங்களை பெட்டியில் உடனே வைப்பதுதான் நலம். புத்தகத்தில் வைத்து பிறர் கையில் அகப்பட்டால் போபத்தில் கொண்டுவிடும்.

செல்வந்தன். எனக்குள்ள செல்வங்களை உன்னையின்றி அனுபவிக்க வேறு யாருமில்லை. ஆகையால் பின்னடையாது எனக்குப் பதில் உடனே தெரிவி.

இங்ஙனம்
அன்பன்"

இதைப் படித்ததும் காவேரிக்குண்டான வியப்பிற்கும் திகைப்பிற்கும் எல்லையே இல்லை. "ஆகா! சுலோசனு இத்தகைய குணமுடையவளாகவா ஆய்விட்டாள்! சேச்சே! என்ன பேமானிப் பிழைப்பு. இத்தகைய அசுத்தாத்மாவுக்கு கலாசாலை முற்றிலும் தடபுடலான பெயர் விளங்குகின்றதே என்ன அநியாயம்! அவளைப் பார்க்கும்போதே எனக்குமட்டும் சந்தேகந்தான்..........சரிதான். இருக்கட்டும்." என்று தனக்குள் ஏதோ சொல்லிக்கொண்டே அக் கடிதத்தை பன்முறைப் படித்து உரையிலிட்டாள். அன்று ஞாயிற்றுக்கிழமை யாகையினுல் விடுமுறை தினமாகிவிட்டது. காவேரி அந்த புத்தகத்தையும் கடிதத்தையும் எடுத்துக்கொண்டு வெகு பரபரப்புடன் கலாசாலையின் உபாத்தியாயினியின் வீட்டைநோக்கிச் சென்ருள்.

அப்போது கமலாஸனி என்கிற உபாத்தியாயினி பேப்பர் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். காவேரி உபாத்தியாயினிக்கு அடிக்கடி ஏதேனும் தின்பண்டங்கள் கொடுக்கும் வழக்கமுண்டு. அவ்வாறே இன்றும் வந்திருப்பதாக எண்ணிய கமலாஸனி "என்ன காவேரி! இன்று என்ன கொண்டுவந்தாய்?" என்று நகைத்துக்கொண்டே கேட்டாள்.

காவேரி:—அம்மா! இன்று ஒரு முக்கியமான விஷயத்தையே கொண்டுவந்தேன். இவ்விஷயத்தை நீங்கள் காணவேண்டியது அத்யாவச்யமாகையினுல் கொண்டுவந்தேன்.

பத்திரிகை குறித்த தேதியில் வெளிவராது பின்னும் சில தினங்கள் தாமதமாகிவிட்டால் பத்திரிகாலயத்தின் தபால்பெட்டி கடிதங்களால் நிறைந்துவிடுவதோடு தபாலாபீஸ் பணப்பெட்டியும் நிறைகின்றது. பத்திரிகை மானேஜருக்குக் கடிதம் படிக்கும் வேலை பூர்ணமாகிவிடுகிறது.

கமலா:—ஓகோ! அதென்ன அத்தகைய அவச்யமான விஷயம்! உடனே தெரிவி.

காவேரி:—இதோ இக்கடிதத்தைப் படித்துப்பாருங்கள். இக்கடிதமே தங்களுக்கு யாவற்றையும் சவிஸ்தாரமாகச் சொல்லிவிடும். பிறகு பேசுவோம்—என்று கூறியவாறு அந்த கடிதத்தை உபாத்தியாயினிடம் கொடுத்தாள். உபாத்தியாயினியும் வெகு பரபரப்புடன் அக்கடிதத்தை வாங்கிப் படித்தாள். அவளுக்குண்டான ஆச்சரியத்திற்கு எல்லையே இல்லை. அக்கடிதத்தைத் திருப்பித்திருப்பிப் பல முறை படித்தாள். பிறகு காவேரியை நோக்கி, "காவேரி! இக்கடிதம் உனக்கு எவ்விதம் கிடைத்தது? இதை நீயும் படித்தாயா! நீ என்ன நினைக்கின்றாய்?" என்று வியப்புக் குறிப்புடன் கேட்டாள்.

காவேரி:—அம்மா! நான் கலாசாலைக்கு இரண்டுநாட்களாக வராமையால் கலாசாலை விஷயமான பாடங்களை சுலோசனை விடம் கேட்பதற்காகச் சென்றிருந்தேன். அப்போது சுலோசனை கையில் ஒரு கடிதத்தை வைத்துக்கொண்டு அபாரமான துக்கத்துடன் தன்போக்காக ஏதோ பேசிக்கொண்டும், புலம்பிக்கொண்டுமிருப்பதை நான் தூர நின்று கவனித்தேன். என்ன காரணத்தினால் புலம்புகின்றாளோ என்பதை நானறியமாட்டேன். பிறகு நான் அவளெதிரில் சென்று விசாரித்ததில் சரியான விடை பகரவில்லை. நான் சென்ற காரியத்தை முடித்துக்கொண்டு, இதோ இந்த புத்தகத்தை அவளைக்கேட்டு அவளிடமிருந்து பெற்றுக்கொண்டு வந்தேன். வீட்டில் நான் பிரித்துப் பார்க்கையில் இந்த கவருடன் இக்கடிதமிருக்கக்கண்டேன். எடுத்துப் படித்ததும் எனக்கு மிகுந்த வியப்புண்டாகிவிட்டது. எக்காலமும் மிக்க புகழுடன் கொண்டாடும் உங்கள் சுலோசனையின் அமிருத குணத்தையும், அரிய நடத்தையையும் உங்களுக்குக் காட்டும்பொருட்டாகவே நான் இங்கு வந்தேன். பார்ப்பதற்கு என்ன தளுக்காக குனிந்த தலை நிமிராமலும்,

---

பத்திரிகையின் தாமதத்தைக் குறித்து முன்னரே ப்ரசுரித்தாலும் அனேகர் கவனிப்பதே இல்லை. பின்னர் ப்ரசுரித்தாலும் அதே கதிதான் ஆகிறது. விளம்பரத்தைக் கவனிக்காமலேயே கடிதமெழுதிவிடுகிறவர்களுக்கு எவ்விதம் பதிலளிப்பது?

உரத்த குரலால் பேசாமலும் வேஷம் போட்டு எல்லோரையும் மயங்கும்படியாயும், அவளை மகா உத்தமி என்று கருதும்படியாயும் செய்துவிட்டாள். அவளுடைய உண்மையான யோக்யதையை அறியாமல் ஏதோ குருட்டாம்திசையாகப் படித்துவிடும் பெருமையைக்கண்டு இத்தகைய அயோக்ய குணமுடையவளுக்கு கலாசாலை மாணவிகளுக்கெல்லாம் முதன்மை ஸ்தானம் கொடுத்திருக்கிறீர்களே! இது அழகுதானு என்பதை உங்களிடம் கேட்கவே வந்தேன்.

கமலாசனி:—என்ன காவேரி! தடபுடலாகப் பேசிவிடுகிருயே! இக்கடிதத்திலிருந்து சுலோசனவை நீ கெட்டவள் என்று நிச்சயித்துவிட்டாயா! எனக்கு அவ்வாறு தோன்றவில்லையே!

காவேரி:—நீங்கள் கூறுவதுதான் எனக்கு வேடிக்கையாகவிருக்கிறது. கடிதத்தைப் பலதரம் படித்தும் உண்மை விளங்கவில்லையா! அந்த உத்தமி தனக்கிஷ்டமான சிலரைமட்டும் அங்கீகரித்துக்கொண்டு மற்றவர்களை அனுதரித்துவிடுவதால் அக்கோஷ்டியில் சேர்ந்தவன் இதை எழுதியிருக்கிருன். அதோடு இன்னெரு செய்தியும் கேள்விப்பட்டேன். "சாமளா பிலிம் கம்பேனி" என்ற சினிமாப்படக்காட்சிச்சாலையில் இவள் நடிப்பதாகவும் இன்னும் சில தினத்தில் அவ்விடத்திலேயே நிரந்தரமாகப் போய்விடப்போவதாகவும் செய்தி உலாவுகின்றது. சினிமாவில் நடிப்பதென்ருல் அவள் எத்தகைய நிலைமையை உடையவளாகவிருக்கவேண்டும். கண்ட ஆண் பிள்ளைகளுடன் புருடன் மனைவியாயும், பிதா மகளாயும், அண்ணன் தங்கையாயும், காதலன் காதலியாயும், பலவிதமாக நடிப்பதற்கு மனத்திடமும், அச்சமற்ற தன்மையும் இல்லாவிடின் எவ்விதம் நடிக்கக்கூடும்? நீங்களே யோசித்துக்கூறுங்கள். அவளுடைய அழகின் மகிமையினல் சினிமாக்காரனுக்கு லக்ஷலக்ஷமாகப் பணம் சேர்ந்துவிடுமல்லவா! அதற்காகத்தான் அவனும் அவளைப் பிடித்

கண்ணஸ்பத்திரிக்குச் சென்ருல் சிறிய குழந்தைகளின் கண் பாதையும் அழுகுரலும் அண்டத்தை அளாவுகின்றன. கலிகாலத்தின் கோலம் சிறிய குழந்தைகளுக்கெல்லாம் கண்ணிற்கு வந்துவிடுகிறது. கண்ணடி உதவி வேண்டி இருக்கிறது.

திருக்கின்றான் அதோடு அவளுடைய வீட்டுக்கெதிரிலுள்ள கடையில் சதா 10 சோதாக்கள் கூடிக்கொண்டு அவளைப்பற்றியே பேசுவதையும் அவ்விடத்திலேயே சுற்றி அலைவதையும் என் தமயன் கண்டு என்னிடம் கூறினான். அவளை நேசித்துவரும் பிரமுகர்களே அவளுடைய கல்விக்குத் துணைபுரிந்து இரவு பகலாக போதிக்கின்றார்கள்; அதனால் அவள் படிப்பில் மேன்மையடைந்து வருகிறாள். நாங்கள் எல்லோரும் அவ்வாறு ப்ரைவேட் டியூஷன் வைத்துக் கொள்ளச் சக்தியற்றவர்கள். ஏதோ எங்களுக்குள்ள ஆசையினால் படிக்கின்றோம். உங்களுக்கு சுலோசனாவைக் கண்டுவிட்டால் அவளைப் பாடச்செய்வதிலும் அவளோடு பேசுவதிலும்தானே ப்ரியம். எங்களைக் கவனிப்பதுகூட இல்லை என்று பயமின்றிக் கூறுகிறேன். மேலும் அவளை நீங்கள் பாடச்சொல்லியபோதெல்லாம் "மருவு கோன்னுதிரா", "மேரகாது லேசிரார! ஏரா நா சாமி!" "சாவுரா மோகமு சகிம்பகலேனே!" என்கிற தெலுங்கு ஜாவளிகளையே பாடுகின்றாளே யன்றி கீர்த்தனங்களைப் பாடுகின்றாளா? அவற்றின் அர்த்தத்தை நன்றாகக் கவனித்துப் பார்த்தீர்களா! உங்களுக்குத் தெலுங்கு தெரியாதாகையால் "ஆகா! பேஷ். பேஷ்!" என்று தலையாட்டிவிடுகிறீர்கள். நாங்கள் தெலுங்கு ஜாதியினராகிய படியால் அவற்றின் அர்த்தத்தை நன்குணர்கின்றோம். "மரியாதை இல்லை எழுந்து வாடா! என் சாமி" "போதும் இந்த மோகத்தைப் பொறுக்கக் கூடவில்லை; உன்மீது மோகங்கொண்டிருக்கிறேன்" என்றும் இவ்வித ஆபாசமான பாடல்களைப் பாடும்போதே எனக்கு மட்டும் சந்தேகந்தான். அர்த்தம் எப்படி இருக்கிறது பார்த்தீர்களா! சுலோசனாவைப்போன்ற நங்கை இனி இவ்வுலகத்திலேயே இல்லை என்று நீங்கள் நினைக்கிறீர்களே! இத்தகைய ஆபாஸமான பாடல்களைப் பாடியதன் கருத்து இப்போது விளங்குகின்றதா!

கமலாசனி:—ஏதேது! நீ பேசுவது அசாத்யமாகவிருக்கின்றதே! சுலோசனாவை இப்பாடல்களை நானாகவன்றோ பாடச்சொல்

காவல் எழுதுகையில் சிலர் அதை வெகு வினோதமாக நின்று பார்க்கிறார்கள். சிலர் வேண்டுமென்று சோதிப்பதற்காகப் பார்க்கிறார்கள். சிலர் வம்பளப்பதற்குப் பார்க்கின்றார்கள். சிலர் அன்புடன் ஆநந்தமாகப் பார்க்கிறார்கள்.

வது வழக்கம். அவளாக ஒருபோதும் பாடியதில்லையே! மேரகாது என்கிற பாடல் அவள் வாயினல் பாடிக் கேட்டபிறகு அதை வேறு யார் பாடியபோதிலும் ருசிக்கவே இல்லை. இப்பாடல்கள் எனக்கு மிகவும்ப்ரியம். ஆகையினல் பாடச்சொல்லுவேன். இதற்கெல்லாம் தப்பிதம் கூறுவது சரியல்ல, எனக்குத் தெலுங்கு தெரியாதென்பது உண்மையே; எனினும் இத்தகைய பாடல்களின் எளிய அர்த்தங்கூட ஆகாத மூடமன்று நான். தெலுங்கு பாஷையை போதிக்கக்கூடிய பயிற்சி இல்லையேயன்றி மற்றபடி எனக்கு அர்த்தம் தெரியும். இந்தமாதிரியான பாடலுக்கு ஜாவளி என்று பெயர் கூறுவார்கள். ஜாவளி என்பதானது க்ருஷ்ணவதாரத்தின் லீலைகளில் ஒன்றுகிய கோபிகைகள் க்ருஷ்ணபரமாத்மாவின்மீது பாடியதாகும். கோபிகைகள் சாக்ஷாத் எம்பெருமானின் சரணகமலங்களில் ஐக்கியமாகும் பாவத்தை மனத்தில்கொண்டு மோக்ஷசாம்ராஜ்யத்தை நாடிப்பாடிய பாடல். கேவலமான பாமரஜனங்களே இப்பாடல்களை விகல்பமாக எடுத்துப் பேசுகிறுர்கள். இதுவிஷயமாக நான் பல பெயர்களுடன் வாதம் செய்திருக்கின்றேன். ஆகையினல் இவ்விஷயத்தை நீ அதிகமாகப் பேசவேண்டாம். மற்றபடி சினிமாவில் ஆடுவதாகக் கூறுகின்றுயே! அது உண்மை என்பதற்கு என்ன அத்தாக்ஷி?

காவேரி:—அம்மா! பாடலுக்கு வேண்டுமானல் கடவுளை புணை கட்டிவிடலாம். இந்த புத்தகத்தை எடுக்கும்போது அவளுடைய மேஜையின்மீது ஒரு சிறிய கார்டு இருந்தது. அதை நான் படித்தேன். "சாமளா பிலிம் கம்பெனி" "சுதேசி சினிமா" ப்ரோப்ரைட்டர் சாமசுந்தர்—என்று பெயர் அச்சிடப்பெற்ற விஸிடிங் கார்டைக் கண்டேன். அதற்கு முன்னரே எனக்கு இவ்விஷயம் செவியில்பட்டது; அதைப் பார்த்ததும் நிஜமாகிவிட்டது. சரி; நீங்கள் இங்கேயே சற்று இருங்கள். நான் மீண்டும் சுலோசனவின் வீட்டிற்குச் சென்று வேறு புத்தகத்தை வாங்கிவருவதாக நடித்து

எந்ததேசத்தினராயினும் ஜாதியினராயினும் சில பழக்கங்களும் அனுபவங்களும் ஒன்றுகவே நடக்கின்றன. அவைகளை மாற்ற முயன்றும் சாத்யப்படுவதில்லை. அதற்கே கடவுளின் ச்ருஷ்டி என்று கூறிவிடுகிறுர்கள்.

அந்த கார்டை எடுத்துக்கொண்டு வருகிறேன்.—என்று கூறிக் கொண்டே வேகமாக நடந்து சுலோசனாவின் வீட்டிற்கு வந்தாள். அப்போதும் சுலோசனா விசனத்துடன் படுத்திருந்தாள். மீண்டும் காவேரி வருவதைக் கண்ட கமது கள்ளமற்ற காரிகையான சுலோசனா எழுந்து உட்கார்ந்து "என்ன காவேரி! எங்கு வந்தாய்?" என்று கபட மறியாத தோற்றத்துடன் கேட்டாள்.

காவேரி:—உன்னிட மிருந்து கோட்புக்கு வாங்கிக்கொண்டு போக எண்ணி அப்போது வந்தேன்; மறந்துவிட்டேன். சற்று கொடு. இன்று இரவே கொண்டுவந்து கொடுக்கிறேன்—என்றாள். உடனே சுலோசனா எழுந்து புத்தகங்கள் வைக்கும் (Shelf) அலமாரியிலிருந்து கோட் புத்தகத்தை எடுத்துக் கொடுப்பதற்குள் காவேரி மேஜையின்மீதிருந்த விசிடிங்கு கார்டை மெல்ல எடுத்துக்கொண்டாள். பிறகு சுலோசனா கொடுத்த புத்தகத்தையும் வாங்கிக்கொண்டு "நான் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றாள். வீதியில் செல்கையில் தபாற்காரன் வருவதைக் கண்ட காவேரி அவனை யணுகி "ஐயா! சுலோசனா அம்மாளுக்கு ஏதேனும் கடித மிருக்கிறதா என்று கேட்கச் சொன்னார்கள். இருந்தால் கொடுங்கள்." என்றாள்.

அந்த தபாற்காரன் காவேரியினுடைய வஞ்சகத்தை யறியான். மேலும் சுலோசனாவின் வீட்டில் காவேரியை அடிக்கடி பார்த்திருப்பதால் அவளை நம்பி கடித மிருக்கிறதென்று கூறி ஒரு கவரை அவளிடம் கொடுத்தான். கபடி சுலோசனாவின் வீட்டிற்குப் போவதுபோல அப் பக்கமாகச் சென்று தபாற்காரன் வேறு வீட்டினுள் சென்றிருக்கையில் உபாத்தியாயினியின் வீட்டிற்கு ஓடிவந்து, "அம்மா! ஒரு சாக்ஷி பிடிக்கச் சென்று இரு சாக்ஷிகள் கொண்டுவந்தேன்; இதோ பாருங்கள்" என்று கவரையும், கார்டையும் கொடுத்து அவற்றைத் தான்பெற்ற விவரத்தையும் கூறினாள்.

நாளை மறுநாள் ஊருக்குப் போகவேண்டுமெனத் தீர்மானமாகிவிட்ட பிறகு இடையிலுள்ள மறுநாள் எப்போது தொலையும் என்ற வேட்கை மனத்தில் புகுந்து வேலை செய்கின்றது.

கமலாசனி சுலோசனாவினிடத்தில் இயற்கையாக எத்தகைய அன்புகொண்டிருந்த போதிலும் காவேரி கூறிய வார்த்தைகளும், காட்டிய கடிதங்களும் அவள் மனத்தைத் தளர விடுவதற்குக் கருவிகளாக அமைந்தன. கமலாசனி வெகு ஆவலுடன் அந்த கவரை உடைத்துப் படிக்கலானாள்:—

“என் கண்ணாட்டியாகிய சுலோசனாவுக்கு!

நீ நடிக்கும் படக் காட்சி என்று வெளிவரும் என்று நான் ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன். முதலாவதாக ஓர் நாவல் நடிக்கப் போவதாக கம்பெனி முதலாளி தெரிவித்தார். நான் அதில் ஒரு நடிகனாக நேற்றுத் தான் சேர்ந்தேன். உன்னோடு கூட நடிக்கும் புண்ணியம் கிடைக்கும் என்ற நம்பிக்கையே கொண்டிருக்கிறேன். கூடிய சீக்கிரத்தில் சினிமா கொட்டகையில் சந்தித்து யாவையும் நேரில் பேசுவோம். இரவு பகலாக உன்னையே எண்ணி இருக்கிறேன்.

இங்ஙனம்

உன் அன்பன்”

இந்த விபரீதமான கடிதத்தைப் படித்ததும், கமலாசனியின் மனம் சடக்கென்று மாறுகின்றது. மீண்டும் ‘சுலோசனா இவ்விதமிருப்பாளா!’ என்ற எண்ணமும் கூடவே உதிக்கின்றது. இருவகையிலும் தத்தளிக்கின்றாள்; எனினும் சுலோசனாவின் மீது மாறுதலும் சந்தேக எண்ணமுமே தலை தூக்க வாரம்பித்துவிட்டன. “சுலோசனாவின் உண்மை கண்ணியம் இவ்விதமாகவா இருக்கின்றது. இன்று சினிமாவில் நடிக்கின்றாள். பிறகு அழகிய உருவமும் சாரீரமும் வீணாகுவானேன் என்று நாடகத்திலும் நடிக்கச் செல்லுவாள். சிச்சி! என்ன அநியாயம். பார்ப்பதற்குப் பூனையைப் போலிருந்து அந்தரங்கத்தில் அசுத்தம் நிறைந்துவிட்டதே! காவேரி சொல்வது போல இத்தகைய துன்மார்க்கியை கலாசாலையில் முதன்மை ஸ்தானத்தில் வைத்தது எனது தவறுதல் தான். இருக்கட்டும்; நானே பார்த்துக்கொள்ளலாம்.” என்று எண்ணியவளாய், காவேரியின் முகத்தைப் பார்த்தாள்.

காவேரி:—ஏனம்மா! இனியும் சந்தேகமா! உங்களுக்கு வேண்டிய—அன்பான—சுலோசனாவின் பவிஷைப் பார்த்தீர்களா!

பிச்சை வாங்குவதிலும் தந்திரமிருக்கிறது “அம்மா! தாயே!” என்று கெஞ்சினால் உடனே பிச்சை கிடைத்துவிடுகிறது. சற்று அதிகாரமாயும் ஆத்திரமாயும் கேட்டால் கிட்டுதான் கிடைக்கின்றது.

இத்தகையவளை இனி எங்களுக்கு நீங்கள் தலைமை மாணவியாக நியமித்தால் நாங்கள் இனி கலாசாலைக்கு வராது நின்றுவிடுகிறோம். மகா அயோக்ய சிகாமணியாகிய அவள் எங்களை மேல் பார்வை பார்ப்பதாவது! இதை நான் இனி ஏற்றுக்கொள்ளமாட்டேன். சுலோசனவின் சீலத்தை எல்லோருக்கும் எடுத்துரைத்துவிடுகிறேன்.

கமலா:—என்ன இது! இப்படி எல்லாம் அவசரமாகப் பேசுகிறாய்! நான் ஒருத்தி இருக்கையில் நீ ஏன் தலை துள்ளுகிறாய்? எனக்குத் தெரியும். நீ பேசாதிரு. அதிகப்பிரசங்கித்தனம் செய்யாதே; வீட்டிற்குப்போ! இந்தக் கடிதங்கள் என்னிடத்திலேயே இருக்கட்டும்—என்று கூறி காவேரியை அனுப்பிவிட்டாள்.

பிறகு கமலாசனி வெகு நேரம் வரையில் ஒன்றுமே தோன்றாமல் மனங் குழம்பிக்கொண்டே பலவிதமான யோசனையிலாழ்ந்திருந்தாள். காவேரியும் இரு புத்தங்களையும் சுலோசன விடத்தில் ஒன்று மறியாதவள் போலக் கொடுத்துவிட்டாள். மறுநாள் காலையில் வழக்கம் போல சுலோசன கலாசாலையை அடைந்தாள். சுலோசனவின் நிரபராதித் தன்மையும், உத்தம குணமும் கடவுளறிவாரே யன்றிக் கபட உள்ளத்தினரும், வஞ்சக நெஞ்சுடையவர்களும் அறிவார்களா! ஒரு குற்றமும் அறியாத சுலோசன நிஷ்களங்கமான மனத்துடன் தனது வகுப்புக்குச் சென்று வழக்கம்போல உபாத்தியாயினியை வணங்கிவிட்டு (ஷேக்ஹாண்ட்) கைகுலுக்கக் கையை நீட்டினாள்.

கமலாசனி அன்று வழக்கத்திற்கு விரோதமாக சுலோசனவை நேராகப் பார்க்காமலும், கை குலுக்கக் கரந்தராமலும், வழக்கம் போல நகைத்தவாறு அவளுடன் பேசாமலும், ஒருவிதமான கடுகடுத்த முகத்துடன் பேசத் தொடங்கி, "இவ்விடத்தில் கை குலுக்குவதை உடனே படம் பிடிப்பதற்கு சினிமாக்காரர்கள் இங்கு இல்லை. அதோடு கை குலுக்க ஆண் பிள்ளைகளுமில்லை" என்ற வார்த்தைகளைக் கூரிய ஈட்டி நாட்டியது போலக் கூறினாள். இந்த விபரீதமான மாறுதலைக் கண்டும், அம்பு பாய்வதற்கொத்த சொற்களைக் கேட்டும் நமது மங்கையர் மாணிக்கமாகிய சுலோசன விவரமே ஒன்றும் தெரியாமல் திடுக்கிட்டு நடுங்கி, வியப்பும் திகைப்பும் குடிகொண்ட முகத்துடன் கண்ணீர் பெருகப் பதுமை போல நின்றுவிட்டாள்.

தபாற்காரனை தினந்தோறும் எதிர்பார்த்துத் தனக்கு வேண்டிய மனிதர்களிடமிருந்து கடிதமோ, மணியார்டரோ வராவிடில் தபாற்காரனைத் திட்டுகிறார்கள் சிலர்.

முக்கிய அறிவிப்பு

நாம் 6-வது சஞ்சிகையில் தெரிவித்தவாறு நமது நூலாசிரியரின் தேக அசுகத்தை முன்னிட்டு அவர் வெளியூருக்குச் சென்றிருந்தமையாலும், எதிர்பாராத விதமான இடைஞ்சலினுலும் நமது 7-வது சஞ்சிகை வெளிவர தாமதமாகிவிட்டதுபற்றி வருந்துகிறோம்.

நிற்க ஆருவது சஞ்சிகையில் "சஞ்சிகை வெளி வருவதற்குச் சிறிது தாமதமானுல் மன்னிக்கும்படியாகக் கேட்டுக்கொண்டிருந்தும் அதைச் சிலர் கவனியாமல் "ஏன் வரவில்லை?" என்கிற கடிதத்தை எழுதிவிட்டார்கள். இம்மாதத்தில் 7-8. ஆக இரண்டு சஞ்சிகைகளையும் ஒன்ருக அனுப்பி இருக்கிறோம். அதையேனும் கவனி த்து "8-வது சஞ்சிகை ஏன் வரவில்லை!" என்கிற கடி தத்தை தயவுசெய்து எழுதாமலிருக்கவேண்டுமாய்க் கேட் டுக்கொள்கிறோம்.

மானேஜர்.

——:o:——

பரிசுகளின் விவரம்.

6-வது சஞ்சிகைக்குப் பிறகு இம்மாத சஞ்சிகை வெளியாவதற்குள் சந்தா வுக்காகவும், "சுகந்தபுஷ்பம்", "வீரவஸந்தா" இரண்டிற்காகவும் பணமனுப்பின வர்களில் கீழ்க்கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

பரிசு ந.	ரூ.	சந்தா ந.	
1	5	M. 95.	Mr. M. Madasamy Pillai, Magyidan.
2	5	S. 267.	Mr. C. Srinivasan, Madura.

அடுத்த சஞ்சிகை வெளியாவதற்குள் சேரும் சந்தா நேயர் களின் நம்பர்களையும் "சுகந்தபுஷ்பம்", "வீரவஸந்தா" இரண்டிற் கும் பணமனுப்புவோரின் நம்பர்களையும் குலுக்கிப்போட்டு 5-ரூபா யில் இரண்டு பரிசுகள் கொடுக்கப்படும்.

அதியற்புதமான பன்னிரண்டு

நாவல்களின் களஞ்சியம்

“பன்னிரு மரகதங்களின் மர்மம்” என்ற நூல் 12 அபூர்வமான நாவல்களின் களஞ்சியமாகும். ‘பிரஜானுகூலன்’ நேயர் ஆநந்தத்துடன் வாசிக்கத் தகுந்தது. இதிலுள்ள நாவல்களின் விவரம்.—(1) மோகனராமன், (2) சாணக்கிய தந்திரம், (3) மாலதீ மாதவம், (4) கிராதார்ஜுனியம், (1) அதிர்ஷ்ட உருமால், (6) ஜோதிஷ்மதி, (7) சந்திரா, (8) சிங்காரத்தின் காதல், (9) மோஹன கல்யாணி, (10) கொடுத்தும் கெட்ட பெயர், (11) திக்கற்ற இரு பெண்மணிகள், (12) மாம்னூர் மாறிய விசித்திரம். **இந்த ஒவ்வொரு நாவலும் மிக்க அருமையானவை.** இத்துடன் (1) சிநேக அனுபவங்கள், (2) உலக அனுபவங்கள், (3) வடமொழித் திரட்டு, (4) நீதிலதா, (5) ஆங்கிலப் பழமொழிகள், (6) பிரபஞ்ச விலாசம், (7) மாதங்களைப் பற்றி, (8) கடிதங்களின் ரகசியம், ஆக வேறு எட்டு விஷயங்களும் கண்டறிந்து அனுபவமாய் எழுதப்பட்டிருக்கிறன. 650 பக்கங்கள் கொண்டது. **விலை ரூபா 3. உடனே எழுதுங்கள்,**

இந்நாவல் “பிரஜாநுகூலன்” பத்திராதிபர் இயற்றியது, ஒவ்வொரு பக்கமும் அநுபவங்களும், நீதிகளும், உயரிய கற்பனைகளும் நிறைந்து வசீகரிக்கின்றது. இது ஒரு குடும்ப பொக்கிஷமாகும். எல்லாம் புதிய போதனைகளாகும்.

பிரஜாநுகூலன் ஆபீஸ், ஸ்ரீரங்கம்.

அகில இந்திய லா ஜர்னல்

ஓர் உயரிய மாதாந்திர சட்டப் பத்திரிகை.

இப்பத்திரிகையில் ஹிந்துலா, பீனல்கோட், கான்ட்ராக்ட் ஆக்ட் (ஜமீன் ஜமீன்தார்கள் சம்பந்தமான) எஸ்டேட் லாண்டு ஆக்டு, சிவில்புரோசிஜர்கோட் (விக்ரயம், அடமானம், தானம் முதலிய விஷயங்களைப்பற்றின) டிரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்டு, (உண்டி, செக், புரோநோட் இவை சம்பந்தமான) நெகோஷியபில் இன்ஸ்ட்ருமெண்டு ஆக்ட் முதலிய ஆக்டுகளின்கீழ் ப்ரீவிகௌன்சில், சென்னை, பம்பாய், கல்கத்தா, ரங்கூன், அலஹபாத், லாகூர் முதலிய ஹைகோர்ட்டுகளில் தீர்மானிக்கப்படும் கேஸுகளும் அவைகளின் சாராம்சங்களும், தெளிவான தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு சட்ட வியாசங்களுடன் வெளியாகி வருகின்றன. இப்பத்திரிகை ஜமீன்தார்கள், வியாபாரிகள், வக்கீல் குமாஸ்தாக்கள், கொடுக்கல் வாங்கல் வர்த்தகர்கள், பெடிஷன் எழுதுவோர் முதலிய வியாபாரஸ்தர்களுக்கு வெகு அவசியமானது. சட்ட விஷயங்களை எளிதில் அறிந்து கொள்ளலாம். இப்பத்திரிகை மாதம் 1க்கு 64 பக்கங்களுக்குமேல் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு வெளிவருகின்றது. வக்கீல்களால் இயற்றப்பட்டு வருகின்றது. முதல் வால்யம் 1929-ம் வருஷம் எப்ரல் மாதம் முதல் ஆரம்பித்து வெளிவருகின்றது. சந்தாவிவரம், இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு வருஷசந்தா (முன்பணம்) தபால் சார்ஜ் உள்பட ரூ. 5. மற்ற இடங்களுக்கு 5-12-0. (ஒரு வருஷத்திற்கு குறைந்த சந்தா கிடையாது) ஒரு வருஷத்திற்கு ஒரு வால்யம் முடியும். மாதிரி சஞ்சிகை 0—8—0 ஸ்டாம்புகளனுப்பினால், அனுப்பப்படும். மானேஜர்

அகில இந்திய லா ஜர்னல் ஆபீஸ், திருவள்ளூர் செங்கல்பட்டு ஜில்லா.

(M. & S. M. Ry.)

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்.,

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

சர். டோராப் ஜே. டாட்டா Kt.

மூலதனம்:—

அனுமதிக்கப்பட்ட மூலதனம்	.... ரூ.	6,00,00,000
பதிவு செய்யப்பெற்ற ,,	.... ரூ.	3,56,05,275
வசூலான ,,	.... ரூ.	71,21,055

இதைப்பற்றி 1929 ஜூன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது:—

"நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தைக் கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமையுண்டு."

ஏஜண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மேரைன், மோட்டார்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜன்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சு மானேஜர்,

4, முதல் லைன் பீச், சென்னை.

கெட்டி சாயம்! உயர்ந்த உடை !! விலை நயம் !!!

உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள

கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை, கெம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகாத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குவதே சரி.

அளவு 18 × 2¼ முழங்கள்.

முதல் ரகம் விலை ரூ. 5-0-0 2-வது ரகம் ரூ. 4-0-0 பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8.0 அதிகம்.

ஜர்மன் சில்க் புடவைகள்

சாதா: மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு; பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

18 × 2¼ முழங்கள் விலை ரூ. 11-0-0
ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

கோட்டடி: கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்.

18 × 2¼ விலை ரூ. 11-4-0
ரவிக்கை 1 முழம் 0-12.0

மேற்படி பிளைன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3.0.0 அதிகம்.

குறிப்பு....உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சாக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன் பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சாக்கு வாங்குபவர்க்கு 1 ரூபாய்க்கு 0.1-6 வீதம் குறைக்கப்படும்.

ஸிட்டி நெசவுச் சாலை,
65, அரமனைக்கார வீதி,
ஜி. டி. சென்னை.

ஏஜண்டுகள் தேவை.

Published by V. M. Parthasarathy Iyengar,
for "JAGANMOHINI OFFICE"
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

" ஜகன்மோகினி " யில்
வெளிவந்த நாவல்கள்.

மலர் 1. ஸ்ரீமான் வடுவூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய

	காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்)	ரூ.	4	0	0
மலர் II	விலாஸவதி (2-பாகங்கள்)	ரூ.	3	0	0

ஸ்ரீமான் அ. முத்தகிருஷ்ணன் எழுதியவை

	கனகசபை	ரூ.	1	8	0
	கோகிலம்	ரூ.	0	6	0

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியவை

மலர் III.	வைதேகி (2-பாகங்கள்)	ரூ.	2	8	0
மலர் IV.	பத்மசுந்தரன் (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
மலர் V.	ராதாமணி (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
மலர் VI	நவநீதகிருஷ்ணன் ...	ரூ.	2	0	0
	சண்பக விஜயம்	ரூ.	1	12	0
	கௌரீ முகுந்தன்	ரூ.	1	12	0
	சுகந்தபுஷ்பம் ...	ரூ.	1	0	0
	கோபால ரத்னம் ...	ரூ.	0	14	0
	மாதவமணி	ரூ.	0	3	0

"ஜகன்மோகினி" சந்தாதார்களுக்கு குறைந்த விலை.

வைதேகி	ரூ.	2	0	0
பத்மசுந்தரன்	ரூ.	2	0	0
ராதாமணி	ரூ.	2	0	0
நவநீதகிருஷ்ணன்	ரூ.	1	12	0
சண்பகவிஜயம்	ரூ.	1	8	0
கௌரீ முகுந்தன்	ரூ.	1	8	0

" ஜகன்மோகினி " ஆபீஸ்

26, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

இனாம் தபாற்செலவு இனாம்

இரண்டு அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு "போலீஸ் கிலி போதிராயர் " " ராவ்பகதூர் ரஸதுல்லா சாஹிப்" என்னும் இரண்டு நாவல்கள் அனுப்பப்படும்.

தமிழ் நாவல்கள்

மதனசிங்கர்	ரூ. 1	0	0.	மர்மமுகி	ரூ.	0	12	0
சுந்தாவதனி	ரூ. 0	12	0	வஸந்தசமுத்ரம்	ரூ.	0	12	0
மஞ்சளா	ரூ. 0	6	0	அமிருதமாலினி	ரூ.	0	4	0

வத்ஸா கம்பெனி, திருவல்லிக்கேணி.

அமிருதாஞ்சனம்

1930 **காலண்டர்கள்** **1930**

பிரபல சித்திரக்காரர்களால் எழுதப்பட்டதும்,
மூன்று வர்ணங்களோடு கூடியதிமான ஸ்ரீ சீதாராமர்,
மகாத்மா காந்தி, ஒரு ஸ்திரீ ஆகிய இவர்களின் படங்கள் அடங்கியன

ஒவ்வொன்றின் விலை 0-2-0 ; டஜன் விலை 1-4-0 ;

நூறின் விலை 9-12-0.

(பாக்கிங், தபாற் கூலி வேறு.)

குறிப்பு:—ஐம்பது காலண்டர்களுக்குமேல் வேண்டியவர்கள் முன் பணமாகப் பாதித் தொகையை அனுப்பினால், அவர்களுக்கு சமீபமாயுள்ள ரெயில்வே ஸ்டேஷன் விலாசத்திற்குப் பார்சல் மூலம் அனுப்பப்படும்.

அமிருதாஞ்சனம் : மிகப் பழமையானதும், சிறந்தது மான மருந்து.

அமிருதாஞ்சனம் டிபோ,

பம்பாய் : : மதராஸ்.